T. 3428

# துளுநாட்டு வரலாறு

(கி. பி. 2-ஆம் நூற்றாண்டு)

ஆசிரியர்

மயிலை சீனி. வேங்கடசாமி

சாந்தி நூலகம்

2/122 பிராட்வே, சென்னை - 1.

| | | |
|---|---|---|
| Author | :— | Mylai Seeni. Venkataswami |
| Publishers | :— | Santhi Noolagam |
| | | 2/122, Broadway, Madras-1. |
| Publication No. | :— | 45 |
| Printer | :— | Jeevan Press, Madras-5. |
| Copyright | :— | Author |
| First Edition | :— | Feb. 1966. |
| Price | :— | Rs. 2/00 |

விலை ரூபாய் 2-00

SANTHI NOOLAGAM
BOOK SELLERS & PUBLISHERS
2/122, BROADWAY : : MADRAS-1.

# அணிந்துரை

**டாக்டர் கே. கே. பிள்ளை,** டி. லிட்., டி. பிஃல் (ஆக்ஸ்போர்டு) சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் எழுதியது.)

திரு. மயிலை. சீனி வேங்கடசாமி அவர்கள் தமிழ் இலக்கியம், வரலாறு ஆகிய துறைகளில் ஆராய்ச்சிகள் செய்து நூல்களை வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் எழுதிய சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும் மகேந்திர வர்மன், நரசிம்ம வர்மன், மூன்றும் நந்தி வர்மன் என்ற நூல்களை நான் படித்திருக்கிறேன். இவை எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் இவ்வாசிரியர் தகுந்த ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே தம்முடைய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்; எதையும் மிகைப்படுத்திக் கூற வில்லை. நமது நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில் இவ்வாறு ஆதாரங்களைச் சீர்தூக்கிப் பார்த்து விருப்பு வெறுப்பு இல்லாமல் நடுநிலைமையோடு கருத்துக்களை வெளியிடுவது மிகமிகத் தேவையாகும்.

"**துளுநாட்டு வரலாறு**" என்னும் இப்புத்தகத்தில் இவ்வாசிரியர் சங்க நூல்களில் துளு நாட்டைப் பற்றியுள்ள குறிப்புகளைத் தொகுத்து அந்த நாட்டின் பண்டைய வரலாற்றை உருவாக்க முயன்றிருக்கிறார். துளு நாடு தமிழகத்தின் ஒரு பகுதியாக அக்காலத்தில் இருந்தது. அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, குறுந்தொகை, சிலப்பதிகாரம் போன்ற பல சங்க காலத்து நூல்களை ஆராய்ந்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அக்காலத்துத் துளு நாட்டின் எல்லைகள், ஆறுகள், மலைகள், நகரங்கள் முதலியவற்றையும் நன்

ருகக் குறிப்பிட்டிருப்பதோடு அக்காலத்தில் துளு நாட்டையரசாண்டிருந்த தமிழ் மன்னர்களைப் பற்றியும் இந்நூலில் விரித் துரைத்துள்ளார்.

அசோகர் சாசனங்களில் கூறப்படுகிற சத்திய புத்திர நாடு, துளு நாடுதான் என்று இந்நூலாசிரியர் முடிவுகட்டியுள்ளார். இதுபற்றிப் பலவேறுபட்ட கருத்துக்கள் தோன்றியுள்ளன வாயினும், 'வாய்மொழிக் கோசர்' இருந்த துளு நாடே சத்தியபுத்திர நாடு என்பதுதான் என்னுடைய கருத்துமாகும். தமிழ் மொழியில் உள்ள சில சொற்கள் துளு பாஷையில் இன்றும் காணப்படுவதையும் இந்நூலில் விளக்கியிருக்கிறார்.

உயர்தரக் கல்வியையும் தாய் மொழியிலேயே கற்பிக்க வேண்டுமென்று கருதுகிற இந்நாளில் இது போன்ற பல நூல்கள் தேவைப்படுகின்றன.

இந்நூலாசிரியர், மேலும் இது போன்று பல ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவார் என்று நம்புகிறேன்.

சென்னை
27—1—1966.

கே. கே. பிள்ளை.

# முகவுரை

துளு நாடு என்றும் கொங்கண நாடு என்றும் தமிழ்ச் சங்க காலத்துத் தமிழ் இலக்கியங்களிலே கூறப்படுகிற நாடு அக்காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியாக இணைந்திருந்தது. இன்றைய கேரள நாட்டாகிய் பழைய சேர நாட்டுக்கு வடக்கே தென் கன்னட மாவட்டம் என்னும் பெயருடன் இருப்பதுதான் பழைய துளு நாடு. தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்த பழைய சேரநாடு பிற்காலத்திலே மலையாள நாடாக மாறித் தனியாகப் பிரிந்து போய் விட்டது போலவே பழைய தமிழகத்துடன் இணைந்திருந்த துளு நாடும் பிற்காலத்திலே பிரிந்து தனியாகப் போய் விட்டது. ஆனால், பழைய சங்கத் தமிழ் இலக்கியங்கள் துளு நாடுதமிழகத்துடன் கொண்டிருந்த உறவை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன.

அகநானூறு, புறநானூறு, நற்றிணைநானூறு குறுந்தொகை நானூறு,பதிற்றுப்பத்து,சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலே சில செய்யுள்களில் துளு நாட்டைப் பற்றிய செய்திகள் தற்செயலாகக் கூறப்பட்டுள்ளன. அச்செய்திகள் தற்செயலாகப் புலவர்களால் கூறப்பட்டவை. ஆகவே, அக்காலத்துத் துளு நாட்டின் முழு வரலாறு அச் செய்யுள்களில் கிடைக்க வில்லை. கிடைத்துள்ளவை வரலாற்றுத் துணுக்குகளே யாகும்.

சங்கச் செய்யுள்களிலே ஆங்காங்கே சிதறிக் கிடக்கிற அவ்வரலாற்றுத் துணுக்குகளையெல்லாம் ஒன்று கூட்டித் திரட்டித் தொகுத்து முறையாக வகைப்படுத்தி எழுதப்பட்டதுதான் துளுநாட்டு வரலாறு என்னும் இந்

*சிறு நூல்:* இந்நூலுக்கு இது தவருன பெயர். சரியாகப் பெயர் கூறவேண்டுமானுல் **சங்க காலத்துத் துளுநாடு** அல்லது **கி. பி. 2-ஆம் நூற்ருண்டுத் துளுநாடு** என்று இதற்குப் பெயர் சூட்டப்பட வேண்டும். ஏறத்தாழ கி. பி. **100** முதல் **150** ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த துளுநாட்டின் செய்தி இந்நூலில் கூறப்படுகின்றது. அக்காலத்துக்கு முற்பட்ட துளுநாட்டு வரலாறு கிடைக்கவில்லை.

அக்காலத்தில் துளுநாட்டை யரசாண்ட அரசர்கள் **கொங்காணங்கிழார்** என்றும் **நன்னன்** என்றும் பெயர் பெற்றிருந்தார்கள். அவர்கள், அக்காலத்தில் தமிழகத்தில் பல இடங்களில் இருந்த வேளிர் என்னும் குறுநில மன்னர்களைச் சேர்ந்தவர்கள். கொங்காணங் கிழாராகிய நன்னர்கள், தங்களுடைய சிறிய துளு இராச்சியத்தைப் பெரிதாக விரிவுபடுத்தக் கருதி, சேரநாட்டின் வடக்கிலிருந்த பூழி நாட்டையும், அதற்குக் கிழக்கில் இருந்த வட கொங்கு நாட்டையும் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆகவே சேர அரசருக்கும் துளு நாட்டரசருக்கும் அரசியல் பகைமை ஏற்பட்டு அவ்விருவருக்கும் போர்கள் நிகழ்ந்தன. கடைசியில் சேர அரசர் துளு அரசர்களை வென்று தங்களுக்குக் கீழே அடக்கி விட்டனர். இச்செய்திகள் இந்நூலில் கூறப்படுகின்றன. அக்காலத்துத் துளுநாட்டு மக்களின் சமூக வரலாறு, நாகரிகம், பண்பாடு முதலியவை யெல்லாம் தமிழகத்துப் பண்பாட்டுடன் ஒத்திருந்ததாகத் தெரிகிறது. ஆனுல், துளுநாட்டுப் பண்பாடு, நாகரிகங்களைப் பற்றிச் சங்க நூல்கள் தனியாக ஒன்றும் கூறவில்லை. ஆகவே அச்செய்திகள் இந்நூலில் இடம் பெறவில்லை.

இந்நூலிலே சில செய்திகள் சிற்சில இடங்களில் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றன. மேற்கோளுக்காகவும் அனுவாதத்தின் பொருட்டும் ஆராய்ச்சிக்குச்

சான்று காட்டும் பொருட்டும் சில செய்திகள் மீண்டும் மீண்டும் கூற வேண்டுவது அவசியமாகவுள்ளன. இவற்றைக் 'கூறியது கூறல்' என்னும் குற்றமாகக் கருதக் கூடாது.

தனி இலக்கிய நூல்களுக்கே 'கூறியது கூறல்' என்னுங் குற்றம் பொருந்துமே யல்லாமல், சரித்திர ஆராய்ச்சி நூலாகிய இது போன்ற நூல்களுக்கு அக் குற்றத்தைச் சாற்றுவது கூடாது. வேண்டிய இடங் களில், கூறியதையே மீண்டும் மீண்டும் கூறுமற் போனுல் தெளிவும் விளக்கமும் பெற முடியாதாகை யால் அவ்வாறு கூறவேண்டுவது அவசியமாயிற்று.

இந்நூலுக்கு ஓர் அணிந்துரை எழுதித் தரவேண்டு மென்று வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே. கே. பிள்ளையவர்களைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி அவர்கள் அணிந்துரை எழுதியுதவினுர்கள். அவர் களுக்கு என்னுடைய நன்றி.

இந்நூலை அச்சிட்டு வெளியிட்ட சென்னை சாந்தி நூலகத்தின் ஆட்சிப் பொறுப்பாளர் திரு. அ. பழ. முத்துராமன் அவர்களுக்கும் எனது நன்றியுரிய தாகும்.

சென்னை
27—1—1966. } மயிலை. சீனி. வேங்கடசாமி.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | துளு நாடு | 9 |
| 2. | நன்னர் வரலாறு | 28 |
| 3. | நன்னர் காலம் | 56 |
| 4. | நன்னரைப் பற்றிய செய்யுட்கள் | 65 |
| 5. | துளு மொழியும் தமிழ் மொழியும் | 70 |
| 6. | இணைப்பு | |
| | I. சத்திய புத்திர நாடு | 84 |
| | II. பரசுராமன் கதை | 86 |
| | III. மோகூரும் மோரியரும் | 90 |
| | IV. ஆய் எயினன் | 102 |
| | V. கடம்பும் கடம்பரும் | 106 |
| | பொருட்குறிப்பு அகராதி | 111 |

# துளு நாட்டு வரலாறு

## 1. துளு நாடு

### பழைய பெயரும் புதிய பெயரும்

சங்க காலத்தில் துளுநாடு என்றும் கொங் கணநாடு என்றும் பெயர் பெற்றிருந்த நாடு இக் காலத்தில் தென் கன்னட மாவட்டம் என்று பெயர் பெற்றிருக்கிறது. வடகன்னடம், தென் கன்னடம் என்று பெயர்பெற்ற இரண்டு மாவட்டங்கள் பாரத நாட்டின் மேற்குக் கரையோரமாக இப் போது இருக்கின்றன. இவற்றில் வடகன்னட மாவட்டம், முன்பு பம்பாய் மாகாணம் என்று பெயர் பெற்றிருந்து இப்போது மகாராட்டிர தேசம் என்று பெயர் வழங்குகிற இராச்சியத்தில் இருக்கிறது. தென்கன்னட மாவட்டமானது பழைய சென்னை மாகாணத்தோடு இணைந்திருந்து, பாரத நாடு சுதந்தரம் பெற்ற பிறகு மைசூர் இராச்சியத்தோடு இணைக்கப்பட் டிருக்கிறது. இந் தத் தென் கன்னட மாவட்டந்தான் பழைய துளு நாடு. துளுநாட்டுக்குக் கொங்கணநாடு என்றும் கொண்கான நாடு என்றும் கொண்பெருங்கானம் என்றும் சங்க காலத்தில் பெயர் இருந்தது.

துளுநாடாகிய கொங்கணநாடு தென் கன்னட மாவட்டம் என்று பெயர்பெற்றது மிகச் சமீப காலத்தில்தான். ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம் பெனியார் தென் இந்தியாவில் வந்து வாணிகஞ்

செய்து கொண்டே நாடு பிடித்த காலத்தில், துளு நாடாகிய கொங்கண நாடு கி.பி. 1799ஆம் ஆண்டில் அவர்கள் ஆட்சிக்கு வந்தது. பிறகு அவர்கள் இந்த நாட்டுக்குத் தென்கன்னட மாவட்டம் என்று தவறான பெயர் கொடுத்துச் சென்னை மாகாணத்தின் ஒரு பிரிவாக இணைத்துவிட்டனர். எனவே, இதற்குத் தென் கன்னடம் என்னும் பெயர் மிகச் சமீப காலத்தில் தவறாக ஏற்பட்டதாகும். ஆனால் அதன் பழைய பெயர் துளுநாடு அல்லது கொங்கணநாடு என்பது.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் பாரதநாட்டையரசாண்ட அசோக சக்கரவர்த்தி தம்முடைய சாசனத்தில் கூறுகிற 'சத்திய புத்திரநாடு' என்பது துளுநாடே. இது பற்றி வேறு கருத்துகளும் உண்டு. (இணைப்பு 1 காண்க) கடைச்சங்க காலத்தின் இறுதியில் (கி. பி. 2ஆம் நூற்றாண்டு) இருந்த தாலமி (Ptolemy) என்னும் யவனர், துளுநாட்டில் டமிரிகெ (Damirike) தொடங்கியது என்று கூறுகிறார். டமிரிகெ என்பது திராவிடகம் என்னும் தமிழகம் ஆகும். எனவே துளுநாடு அக்காலத்தில் தமிழ் நாடாக இருந்தது என்பது தெரிகிறது. சங்கச் செய்யுள்களும் துளுநாட்டுக்கு அப்பால் மொழிபெயர்தேயம் (வேறு பாஷை பேசப்பட்ட தேசம்) இருந்ததாகக் கூறுகின்றன.

துளு என்றால் போரிடுதல், எதிர்த்தல் என்பது பொருள். பழங்கன்னட மொழியில் துளு என்னுஞ் சொல்லுக்கு இந்தப் பொருள் உண்டு. எனவே துளுநாடு என்றால் வீரர்கள் உள்ள நாடு என்று பொருள் கொள்ளலாம். துளுநாட்டு வீரர்களைப் பற்றிச் சங்க நூல்கள் கூறுகின்றன.

கொங்கண நாடாகிய துளு நாட்டைப் பிற் காலத்துச் சோழர் சாசனங்கள் 'குடமலை நாடு' என்று கூறுகின்றன.

துளுநாட்டுக்குக் கிழக்கில் உள்ளது குடகு நாடு என்னும் சிறு நாடு. இந்தக் குடகு நாட்டில் தலைக்காவேரி என்னும் இடத்தில் காவிரி ஆறு உண்டாகிறது. "குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி" என்று மலைபடுகடாம் (அடி 527) கூறு கிறது. இந்தக் காவேரி ஆறு கடைசியில் சோழ நாட்டில் புகுந்து பாய்கிறது.

## துளு நாட்டு எல்லை

இப்போதுள்ள தென் கன்னட மாவட்டமே ஏறத்தாழ பழைய துளு நாடாகும். ஆனால், சங்க காலத்தில் (கி. பி. 200க்கு முன்பு) துளுநாட்டின் தென் எல்லை சற்றுத் தெற்கே இருந்தது. ஏழில் மலைக்குத் தெற்கே அதன் பழைய தெற்கெல்லை இருந்தது.

துளுநாட்டின் மேற்கில் அரபிக்கடல் எல்லை யாக இருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகள் (சஃயாத்திரி மலைகள்) இதன் கிழக்கு எல்லையாக அமைந்திருக்கின்றன. கிழக்கு எல்லையாக அமைந் துள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகள் சில இடங் களில் கடல் மட்டத்துக்கு 3000 அடி உயரமாகவும் வேறு சில இடங்களில் 6000 அடி உயரமாகவும் இருக்கின்றன. ஆகவே, துளுநாட்டின் கடற்கரை யோரங்கள் சமநிலமாகவும் கிழக்குப் பகுதிகள் உயரமான மலைப் பிரதேசங்களாகவும் இருக்கின் றன. துளுநாடு ஏறத்தாழ வடக்குத் தெற்காக




படம் 1.

150 மைல் நீளம் உள்ளது. இதன் அகலம், கடலுக்கும் மலைகளுக்கும் இடையே சில இடங்களில் 50 மைலும் சில இடங்களில் 25 மைலும் ஆக அமைந்திருக்கிறது. எனவே, துளுநாடு கடலுக்கும் மலைக்கும் இடையிலே உள்ள அகலம் குறைந்த நீளமான பிரதேசம் என்பது தெரிகிறது. (படம் 1 காண்க)

இனி, சங்க இலக்கியங்களிலே கூறப்படுகிற துளுநாட்டு ஊர்கள் மலைகள் முதலியவற்றை ஆராய்வோம்.

**துளுநாடு** (கொண்கானம்)

'தோகைக் காவின் துளு நாடு'[1] என்று மாமூலனார் என்னும் புலவர் துளுநாட்டின் பெயரைக் கூறுகிறார். துளுநாட்டுக் காடுகளில் தோகைகள் (மயில்கள்) இருந்தன என்று கூறுகிறார்.

துளுநாட்டை **நன்னன்** என்னும் பெயருள்ள வேள்குல அரசர் ஆண்டனர். அவர்கள் 'கொண்கானம் கிழான்' என்றும் பெயர் பெற்றிருந்தனர். அதாவது கொண்கான நாட்டுக்குத் தலைவன் என்பது பொருள். பாலைபாடிய பெருங்கடுங்கோ என்னும் சேர அரசர் தாம் பாடிய நற்றிணை 391ஆம் செய்யுளில், 'பொன்படு கொண்கான நன்னன்' என்று கூறுகிறார். மோசிகீரனார் என்னும் புலவர் 'கொண்கானம் கிழான்' ஒருவனைப் பாடுகிறார். அதில் கொண்கான நாட்டின் மலைகளில் பல அருவிகள் பாய்வது தூய வெண்ணிற ஆடைகளை வெயிலில் உலர்த்துவதுபோல இருந்தன என்று கூறுகிறார்.

1. அகம். 15 : 5

'அறுவைத்
தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத்
தண்பல இழிதரும் அருவிநின்
கொண்பெருங் கானம் பாடல் எனக்கு எளிதே.' *

என்று அவர் பாடுகிறார். கொண்கானத்து (துளு நாட்டு)க்குக் கிழக்கேயுள்ள உயரமான மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இன்றும் பல அருவிகள் தோன்றிப் பாய்வதைக் காண்கிறோம். இப்புலவரே 'கொண்பெருங் கானத்துக்'கிழானைப் புறம் 155 ஆம் பாட்டில் பாடியுள்ளார். கொண்கானங் கிழான் தன்னை நாடி வரும் இரவலருக்குப் பொருள் கொடுத்தான் என்றும் அவன் பிற வேந்தரை வென்று அவர்களிடம் திறை வாங்கினான் என்றும் புறம் 156ஆம் செய்யுளில் இப் புலவர் கூறுகிறார். இச்செய்யுள்களில் இவர் கொங்கணநாட்டைக் கொண்பெருங்கானம் என்று கூறுவது காண்க. கொங்கணம், கொண்கானம், கொண்பெருங்கானம் என்பன எல்லாம் ஒன்றே.

நன்னனுடைய கொங்கணக் காட்டில் (கழை) மூங்கில் அதிகமாக விளைந்தன என்று கூறுகிறார். கொங்கணத்தைக் 'கானம்' என்று சுருக்கமாகக் கூறுகிறார்.

'விழைதக ஓங்கிய கழைதுஞ்சு மருங்கில்
கானமர் நன்னன்.' **

என்று அவர் கூறுவது காண்க. (கான்-கானம், கொங்காணம்)

---

* புறம். 154 : 10—13
** அகம். 392 : 26—27

## செல்லூர்

மருதன் இளநாகன் என்னும் புலவர் இவ்வூரை கூறுகிறார். மழுவாள் நெடியோனாகிய பரசுராமன் இவ்வூரில் யாகம் செய்த கதையை இவர் கூறுகிறார். (இணைப்பு 2 காண்க)

“கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க்
கடாஅ யானைக் குழூஉச்சமந் ததைய
மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன் றரிதினின் முடித்த வேள்விக்
கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண்”*

என்பது அப்பாட்டில் இச்செய்தியைக் கூறும் பகுதி.

இந்தச் செல்லூர் கடற்கரைக்கு அருகில் இருந்தது என்றும் அவ்வூருக்குக் கிழக்கில் கோசருடைய நியமம் (ஊர்) இருந்தது என்றும் இப்புலவரே இன்னொரு செய்யுளில் கூறுகிறார்.

“அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கடல் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியமம்”**

என்று இவர் கூறுகிறார்.

எனவே, துளுநாட்டுச் செல்லூரில் பரசுராமன் செய்த வேள்விக்கு நினைவாக ஒரு தூண் அமைக்கப்பட்டிருந்த தென்றும், அச்செல்லூர் கடற்கரைக்கு அருகில் இருந்ததென்றும் தெரிகின்றன.

---

* அகம். 220 : 5—8

** அகம். 90 : 9—12

ஐயூர் முடவனுர் என்னும் சங்ககாலத்துப் புலவரும் தம்முடைய செய்யுளில் இச்செல்லூரைக் கூறுகிருர். ஆனல், பரசுராமன் கதையைக் கூறவில்லை. செல்லூரை யாண்ட அரசன் ஒருவன் ஆதன்எழினி என்பவனுடன் போர் செய்து அவனைக் கொன்ற செய்தியை அப்புலவர் கூறுகிருர்.

"கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்
கழனி யுழவர் குற்ற குவளையும்
கடிமிளைப் புறவிற் பூத்த முல்லையொடு
பல்லிளங் கோசர் கண்ணி யயரும்
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன் எழினி அருநிறத் தழுத்திய
பெருங்களிற்று எவ்வம்"[1]

இச்செய்யுளிலும், செல்லூர் கடற்கரைக்கு அருகில் இருந்ததென்பது கூறப்படுவது காண்க.

## பாரம்

துளு நாட்டில் இருந்த இன்னெரு ஊர் பாரம் என்பது. இவ்வூரில் நன்னனுடைய சேனைத் தலைவனுகிய மிஞிலி என்பவன் இருந்தான். "பாரத்துத் தலைவன் ஆர நன்னன்"[2] என்றும், "பூந்தோள் யாப்பின் மிஞிலிகாக்கும் பாரம்"[3] என்றும் இவ்வூர் கூறப்படுகிறது.

## பாழி

இவ்வூர் பாழி என்னும் மலைக்கு அருகிலே இருந்தது. ஆகவே அம் மலையின் பெயரே இவ்வூ

1. அகம். 216 : 8—15
2. அகம். 152 : 12 3. நற். 265 : 4-5

ருக்கும் பெயராயிற்று. பாழிமலை, ஏழில்மலையின் ஒரு பகுதி. 'பாரத்துத் தலைவன் ஆர நன்னன் ஏழில் நெடுவரைப் பாழிச்சிலம்பு'[1] இவ்வூரைச் சூழ்ந்து கோட்டை மதில் இருந்தது என்பது, 'செம்பு உறழ் புரிசைப் பாழி'[2] என்பதனால் தெரிகிறது. மேலும் இவ்வூர் கறையடி யானை நன்னன் பாழி,[3] என்றும்

'சூழி யானை சுடர்ப்பூண் நன்னன்
பாழி யாங்கண் கடியுடை வியன்நகர்'[4]

என்றும் கூறப்படுகிறது. பாழி நகரைச் சூழ்ந்து இருந்த இடம் 'பாழிப் பறந்தலை,[5] என்று பெயர் பெற்றிருந்தது. பாழிமலைமேலிருந்து பார்த்தால் அதனைச் சூழ்ந்திருந்த நாடுகள் தெரிந்தன.

'அருந்தெறல் மரபிற் கடவுள் காப்பப்
பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை
அணங்குடை வரைப்பிற் பாழி'[6]

பாழி நகரக் கோட்டையில், நன்ன அரசர் பெருநிதியைச் சேர்த்து வைத்திருந்தனர். இதனை,

'அணங்குடை வரைப்பிற் பாழியாங்கண்
வேள் முது மாக்கள் வியன் நகர்க் கரந்த
அருங்கல வெறுக்கை'[7]

என்றும்,

'நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்.'[8]

---

1. அகம். 152 : 12—13 2. அகம். 375 : 13
3. அகம். 142 : 9 4. அகம். 15 : 10—11 5. அகம். 208 : 6 6. அகம். 372 : 1—3 7. அகம். 372 : 8—5
8. அகம். 258 : 1—3

என்றும் வருவனவற்ருல் அறியலாம். நன்னர், வேள்குல அரசராவர்.

### கொடுகூர்

இவ்வூர் துளுநாட்டில் இருந்தது. நன்ன அரசருக்குரிய இவ்வூரைச் சேரன் செங்குட்டுவன் வென்ருன். (பதிற்றுப் பத்து5-ஆம் பத்து பதிகம்.)

### வியலூர்

இதுவும் துளுநாட்டில் இருந்த ஊர்.

> 'நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
> வயலை வேலி வியலூர்' [1]

என்று இது கூறப்படுகிறது. இது கடற்கரைப் பக்கமாக இருந்த ஊர். இவ்வூரையும் சேரன் செங்குட்டுவன் வென்ருன்.

> 'உறுபுலி யன்ன வயவர் வீழச்
> சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி
> அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து'[2]

என்று கூறுகிறது.

> 'கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையிற்
> சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்' [3]

### நறவு

இது துளுநாட்டில் கடற்கரையிலிருந்த துறைமுகப் பட்டினம். கள்ளுக்கு (மதுவுக்கு) நறவு என்றும் ஒரு பெயர் உண்டு. ஆகவே, நறவு என்னும் பெயருடைய இந்த ஊரைத் 'துவ்வா நறவு' (உண

---

1. அகம். 97 : 12—13
2. பதிற்றுப்பத்து 5ஆம் பத்துப் பதிகம்
3. சிலப்பு. நடுகல். 114—115

ணப்படாத நறவு) என்று தமிழ்ப் புலவர்கள் கூறினர்கள். துளுநாட்டைச் சேர அரசர் வென்ற பிறகு இத்துறைமுகப் பட்டினத்தில் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் (இவன் செங்குட்டுவனுக்கும் நார் முடிச் சேரலுக்கும் தம்பி) தங்கியிருந்தான்.[1] கிரேக்க ரோம வாணிகர்கள் நறவை 'நவ்ரு' என்று கூறினர்கள். துளுமொழியில் இது **நாருவி** என்று கூறப்பட்டது. இங்கு யவனக் கப்பல்கள் வந்து வாணிகஞ் செய்ததாகத் தெரிகின்றது.

சேர நாட்டுத் தொண்டித் துறைமுகந்தான் நறவு என்று சிலர் கருதுகின்றனர். துளு நாட்டிலுள்ள மங்களூர்தான் நறவு என்று வேறு சிலர் கருதுகிறார்கள். நறவு துளுநாட்டிலிருந்த கடற்கறைப் பட்டினம் ஆகும்.

### ஏழில்மலை

இது துளுநாட்டில் இருந்த மலைகளில் ஒன்று. இது துளுநாட்டின் தெற்கே இருந்தது. ஏழில் நெடுவரை என்றும், ஏழிற்குன்று என்றும் இதனைக் கூறுவர். ஏழில்மலையின் ஒரு பிரிவு பாழிமலை (பாழிச்சிலம்பு) என்று பெயர்பெற்றிருந்ததையும் அங்குப் பாழி என்னும் ஊர் இருந்ததையும் முன்னமே கூறினேம்.

> 'பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
> ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பு'[2]

என்றும்

---

1. பதிற்றுப். 6-ஆம் பத்து. 10:9-12.
2. அகம். 152 : 12—13

'பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்டு
ஏழிற் குன்றம்'*

என்றும்

'நன்னன் நன்னாட்டு
ஏழிற் குன்றம்'†

என்றும்

'ஓங்கு புகழ்க்
கானமர் செல்வி அருளலின் வெண்கால்
பல்படைப் புரவி எய்திய தொல்லிசை
நுணங்கு நுண் பனுவல் புலவன் பாடிய
இனமழை தவழும் ஏழிற் குன்றத்து'‡

என்றும் இது கூறப்படுகிறது.

இதனால் ஏழில் மலையில் கானமர் செல்வி யாகிய கொற்றவைக்குக் கோவில் இருந்தது என்றும், ஏழில் மலையை 'நுணங்கு நுண்பனுவல் புலவன்' ஒருவன் பாடினான் என்றும் தெரிகின்றன. ஏழில்மலையைப் பாடிய புலவன் பரணராகவோ அல்லது மோசிகீரனாராகவோ இருத்தல் வேண்டும்.

ஏழில்மலை, மேற்குக் கடற்கரையோரமாகக் கண்ணனூருக்கு வடமேற்கே 16 மைல் தூரத்தில் இருக்கிறது. ஏழில் மலை என்னும் இரயில் நிலையமும் உண்டு.

சங்க காலத்தில் துளுநாட்டைச் சேர்ந்திருந்த இந்த ஏழில்மலை இப்போது மலையாள நாட்டில், மலபார் மாவட்டத்துச் சிறைக்கல் தாலுக்காவில் சேர்ந்திருக்கிறது. ஆனால், இது முன்பு துளுநாட்டைச் சேர்ந்திருந்தது. பிற்காலத்தில், மலையாளி

* நற். 391 : 6—7
† அகம். 349 : 8—9 ‡ அகம் 345 : 3—7

கள் இதனை 'ஏழிமல' என்று அழைத்தனர். ழகரத்தை உச்சரிக்கத் தெரியாத மேல்நாட்டார் முதலியோர் இதனை'யய்முல்லே'(Yai Mullay)என்று கூறினார்கள். சிலர், ஏழில் மலேயை எலிமலே என்று வழங்கினார்கள். வடமொழியாளர், எலிமலே என்பதை மூஷிகமலே என்று மொழி பெயர்த்துக் கொண்டு தங்கள் வழக்கம்போல "மூஷிக வம்சம்" என்னும் பெயருள்ள நூலே எழுதினார்கள். மூஷிக வம்சத்தில் ஏழில்மலேயை யரசாண்ட பிற்கால அரசர்களேப் பற்றியும் அது சம்பந்தமான புராணக் கதைகளேயும் எழுதி வைத்தனர்.

பிற்காலத்தில் வாணிகத்துக்காக வந்த போர்ச்சுகீசியர் இந்த மலேயை எலிமலே என்றே கூறினார்கள். அவர்கள் 'மவுண்ட்-டி-எலி, (Monte D' Ele) என்று கூறினார்கள். அப்பெயர் பிற்காலத்தில் 'டெல்லி' (Delli) என்று குறுகிற்று.

ஏழில்மலே, அரபிக்கடலில் 27 மைல் தூரம் வரையில் தெரிந்தது. வாஸ்கோ-டி-காமா என்னும் போர்ச்சுக்கீசியர் முதல் முதல் இந்தியாவுக்கு வந்த போது அவருக்குக் கடலில் முதல்முதலாகக் காணப்பட்ட இடம் இந்த மலேயே. 1498 இல், ஏழில்மலேயைக் கடலில் இருந்து கண்ட அவர் தன் கப்பலேக் கண்ணனூருக்கு அருகில் செலுத்திக் கரை இறங்கினார்.

ஏழில்மலே கடற்கரைக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. இங்குக் கடற்கொள்ளேக் காரர் இருந்தனர் என்று முற்காலத்துப் பிற்காலத்து அயல் நாட்டார் எழுதியிருக்கிறார்கள்

துளு நாட்டை யரசாண்ட நன்ன அரசர்களும் கடற் கொள்ளைக்காரருக்கு உதவியாக இருந்தனர் என்பது தெரிகின்றது.

### கடம்பின் பெருவாயில்

கடம்பின் பெருவாயில் என்னும் ஊர் துளுநாட்டில் இருந்தது. இவ்வூரில் நடந்த போரில், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், நன்னனை வென்றான்.

> 'உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
> நிலைச் செறுவின் ஆற்றலை யறுத்தவன்
> பொன்படு வாகை முழுமுதல் தடிந்து'*

### வாகைப் பெருந்துறை

இதுவும் துளுநாட்டின் தெற்கில் இருந்த ஊர். இது வாகைப் பறந்தலை என்றும் பெயர்பெற்றிருந்தது. இவ்வூரில் பசும் பூட்பாண்டியனுடைய சேனைத் தலைவனான அதிகமான் என்பவன் போர் செய்து இறந்தான்.

> 'கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
> பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்
> களிறொடு பட்ட ஞான்றை'†

களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் இவ்வூரில் நன்னனுடன் போர் செய்தான்.

> 'குடாஅது
> இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
> பொலம்பூண் நன்னன் பொருது களத்தொழிய'

---

* பதிற்று. 4-ஆம் பத்து, பதிகம்.

† குறும். 393 : 3—5

வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்'[1]

## கடல் துருத்தி

துளுநாட்டைச் சேர்ந்து அரபிக்கடலில் சிறு சிறு தீவுகள் சில இருந்தன. அந்தத் தீவுகள் துளு நாட்டு 'நன்ன' அரசரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. அத் தீவுகள் ஒன்றில் நன்னனுக்குக் கீழடங்கிய குறும்பத் தலைவன் ஒருவன் இருந்தான். அவன் கடம்ப மரத்தைத் தன்னுடைய காவல் (அடையாள)மரமாக வளர்த்து வந்தான். அவன் நன்னனுடைய தூண்டுதலின்மேல் சேரநாட்டுக்கு வாணிகத்தின் பொருட்டு வந்த யவனக் கப்பல்களைத் தடுத்துக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தான். அந்தக் குறும்ப அரசனை, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன்மகனான சேரன் செங்குட்டுவனைக்கொண்டு வென்றான்.[2]

துளு நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் (இப்போதைய மலையாளதேசம்) மேற்கே அரபிக்கடலில் நூறு மைலுக்கு அப்பால் **லக்ஷத்தீவு** என்று பெயருள்ள தீவுகள் இருக்கின்றன. இத்தீவுகள் பவழப் பூச்சிகளால் உண்டானவை. கடல் மட்டத்துக்கு மேல் 10 அல்லது 15அடி உயரம் உள்ளவை. வடக்குத் தெற்காக இத்தீவுகள் 1 மைல் முதல் 6 மைல் நீளமும் ஏறத்தாழ ஒரு மைல் அகலமும் உள்ளவை.

இத்தீவுகளுக்கு அருகில் கடல் அலை இல்லாமல் கப்பல்கள் தங்குவதற்கு ஏற்றதாக இருக்கிறது

---

1. அகம். 199 : 18—22
2. பதிற்றுப்பத்து 2-ஆம் பத்து, 5-ஆம் பத்து

புயல் அடித்தாலும் இங்குக் கப்பல்களுக்கு ஆபத்து நேரிடுவதில்லை.

இத்தீவுகளில் வடக்குப் பாகத்தில் உள்ள 8 தீவுகளுக்கு **அமிந்தீவு** என்று இப்போது பெயர் கூறப் படுகிறது. இவை துளுநாட்டோடு சேர்ந்தவை. இங்குப் பலாமரமும் கமுகுமரமும் பயிராகின்றன. தென்னையும் உண்டு. வரகு, கேழ்வரகு தானியங்கள் பயிராகின்றன. நெல் பயிராவதில்லை,

சங்கநூல்களில் கூறப்படுகிற **கடல் துருத்தி** என்பது இத்தீவுகளாக இருக்கக்கூடும். கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்தக் குறும்பர்கள் இத்தீவுகளில் இருந்தவராதல் வேண்டும். இங்கிருந்த குறும்பர் துளு நாட்டு நன்னனுக்குக் கீழடங்கி வாணிகக் கப்பல்களைக் கொள்ளையடித்தனர். சேரன் செங்குட்டுவனால் வெல்லப்பட்டவர் இத்தீவினராதல் வேண்டும்.

**மங்களூர்**

இதற்கு மங்கலாபுரம் என்னும் பெயரும் உண்டு. இது துளுநாட்டில் நேத்திராவதி என்னும் ஆறு கடலில் கலக்கிற இடத்துக்கு அருகில் இருந்தது. இது இப்போதும் அப்பெயரோடு இருக்கிறது. கி. பி. 2ஆம் நூற்றுண்டிலிருந்த தாலமி (Ptolemy) கூறுகிற மகனூர் என்பது இந்த மங்களூரே. இங்குள்ள மங்களாதேவியின் பெயரே இவ்வூருக்கு அமைந்து மங்களூர் என்று பெயர்பெற்றது. மங்களாதேவி என்பது பௌத்தமதத் தெய்வம். மங்களா தேவிக்கு ஆதிதேவி என்றும் தாராதேவி

என்றும் வேறு பெயர்கள் உண்டு.[1] இக்கோயில் இப்போதும் கிராம தேவதைக்கோவிலாக இருந்து வருகிறது. இதற்குச் சிறிது தூரத்தில் 'துர்க்கை' கோயில் ஒன்று இருக்கிறது. அது வேறு கோவில்.

மங்களூருக்குத் தெற்கே $2\frac{1}{2}$ மைல் தூரத்தில் கதிரி என்னும் பேர்பெற்ற இடம் இருக்கிறது. இங்கு மஞ்சுநாதர் கோவில் இருக்கிறது. இது அக்காலத்தில் பேர்போன பௌத்தக்கோவிலாக இருந்தது. பௌத்தக் கோவில்களாகையால் இந்தக் கதிரிக் கோவிலுக்கும் மங்கலாதேவி கோவிலுக்கும் ஆதிகாலத்தில் தொடர்பு இருந்தது. சிலப்பதிகாரத்தில் கூறப்படுகிற மங்கலாதேவி கோவிலும் பாசண்டச் சாத்தன் கோவிலும் முறையே மங்கலாதேவி கோவிலும் கதிரிக் கோவிலும் ஆகும். கதிரிக் கோவில் இப்போது மஞ்சுநாதர் கோவில் என்று கூறப்படுகிறது. மஞ்சுநாதர் என்பது பௌத்தரின் போதிசத்துவருக்குப் பெயர். இக்கோவிலில் இப்போதுள்ள லோகேசுவரர் உருவம் பௌத்தரின் அவலோகீஸ்வரர் உருவமே. மகாயான பௌத்தத்தில், லோகேசுவரர் என்னும் லோகநாதர் தாரை தேவியின் கணவன் என்று கூறப்படுகிறார். சிலப்பதிகாரத்தில் கதிரிநாதர், பாசண்டச்சாத்தன் என்று கூறப்படுகிறார்.

கதிரி மஞ்சுநாதர் கோவிலுக்கு அருகில் உள்ள மலையில இயற்கையாக அமைந்த குகைகள் உள்ளன. அவை பௌத்த பிக்குகள் தங்கியிருந்த

1. J.R.A.S. *1894* P. 85

குகையாகும். அக்குகைகள் இப்போது **பாண்டவ குகைகள்** என்று கூறப்படுகின்றன.

மங்களூரில் உள்ள மங்கலாதேவியின் கோவிலைப் பற்றியும் அதன் அருகில் உள்ள கதிரிக் கோவிலைப் பற்றியும் சிலப்பதிகாரத்தில் இவ்வாறு கூறப்படுகிறது: ''மங்கல மடந்தை கோட்டம்''[1] 'ஆயிழைக் கோட்டம்.'[2]

> 'மங்கலமடந்தை கோட்டத் தாங்கண்
> சேங்கோட்டுயர்வரை சேணுயர் சிலம்பில்' *

(இதில் மங்கல மடந்தை என்பதற்கு மங்கல தேவி என்று அரும்பத வுரையாசிரியர் உரை எழுதுவது காண்க. இதன் அடிக்குறிப்பில் சிலப் பதிகாரப் பதிப்பாசிரியராகிய டாக்டர் உ. வே. சாமி நாதையர், ''மங்கலா தேவி என்றது, கண்ணகியை; மங்கலாபுரம் அல்லது மங்களூர் என்பது இத் தேவி காரணமாக வந்த பெயர்'' என்று குறிப்பு எழுதியிருப்பது தவறு என்பது சொல்லாமலே தெரிகிறது. இதுபற்றி இங்கு விளக்கம் தேவை யில்லை.)

மங்கலாதேவியின் கோட்டத்துக்கு அருகில் இருந்ததாகச் சிலம்பு கூறுகிற 'செங்கோட்டுயர் வரை சேணுயர்சிலம்பு' கதிரிக்கு அருகில் உள்ள மலையாகும். இங்குப் பௌத்த முனிவர் தங்கி யிருந்த இயற்கைக் குகைகள் இருந்தன என்று முன்னமே கூறினோம். இங்குள்ள சுனைகளில்

1. சிலம்பு. வரந்தருகாதை 88
2. சிலம்பு. வரந். 61. ஆயிழைக் கோட்டம்-மங்கலா தேவி கோயில். அரும்பதவுரை

* **சிலம்பு. வரந்தரு. 153—154**

வெள்ளைக்கடுகு போன்ற கற்களும் முருக்கம்பூ நிறம் போன்ற சிறுகற்களும் இருந்தன என்றும் மாவைக் கரைத்தது போன்ற நீர் இங்கு இருந்தது என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

'மங்கல மடந்தை கோட்டகத் தாங்கண்
செங்கோட் டுயர்வரைச் சேணுயர் சிலம்பில்
பிணிமுக நெடுங்கல் பிடர்ச்சிலை நிரம்பிய
அணிகயம் பலவுள. ஆங்கவை யிடையது
கடிப்பகை நுண்கலும் கவிரிதழ்க் குறுங்கலும்
இடிக்கலப் பன்ன இழைந்துகு நீரும்
உண்டோர் சுனை. அதனுள்புக் காடினர்
பண்டைப் பிறவியர் ஆகுவர்.'*

(கடிப்பகை நுண்கல்-வெண் சிறு கடுகு போன்ற நுண்ணிய கல். கவிர் இதழ்க் குறுங்கல்-முருக்கம்பூப் போன்ற நிறத்தையுடைய குறிய கல். இடிக் கலப்பன்ன-மாவைக் கரைத்தா லொத்த. அரும்பதவுரை.)

சங்க இலக்கியங்களி லிருந்து அறியப்படுகிற துளுநாட்டு ஊர்களையும் இடங்களையும் இது காறும் அறிந்தோம். இனி, சங்க இலக்கியங் களிலிருந்து அறியப்படுகிற நன்ன அரசருடைய வரலாற்றைப் பார்ப்போம்.

---

* சிலம்பு. வரந்தரு. 53—60

# 2. நன்னர் வரலாறு

## அரசியல் சூழ்நிலை

நம் ஆராய்ச்சிக்குரிய கி. பி. இரண்டாம் நூற்றுண்டிலே துளுநாட்டின் அரசியல் சூழ்நிலை எப்படி இருந்தது என்பதைக் கூறுவோம். துளுநாட்டின் மேற்கில் அரபிக் கடல் இருந்தது. இக்கடல் வழியாக யவன, அராபிய வாணிகக் கப்பல்கள் துளுநாட்டுத் துறைமுகப் பட்டினங்களாகிய மங்களூர், நறவு முதலிய ஊர்களுக்கு வந்துபோயின. துளு நாட்டுக்கு அருகிலே அரபிக் கடலிலே 'கடல் துருத்தி' என்னும் சிறு தீவுகள் இருந்தன. அவை துளுநாட்டுக் குரியவாக இருந்தன.

துளுநாட்டின் தெற்கே சேரநாடு இருந்தது. (சேரநாடு, இப்போது மலையாளம் எனப்படும் கேரளநாடாக மாறிப் போயிற்று) சேரர் என்னும் தமிழரசர்கள் சேரநாட்டை யரசாண்டார்கள். சேர மன்னருக்கும் துளுநாட்டு அரசருக்கும் எப்போதும் பகை. அவர்கள் அடிக்கடி ஒருவர்க்கொருவர் போர் செய்துகொண் டிருந்தார்கள்.

துளுநாட்டின் கிழக்கே வடகொங்குநாடும் கன்னடநாடும் இருந்தன. இப்போதுள்ள மைசூர் இராச்சியத்தில் பாய்கிற காவிரி ஆற்றின் தென் கரை வரையில் வடகொங்குநாடு அக்காலத்தில் பரவியிருந்தது. வடகொங்குநாட்டில் அக்காலத்தில் பேரரசர் இல்லை. புன்னாடு, எருமைநாடு, அதிக

மான் நாடு (தகடூர்) முதலிய சிறுசிறு நாடுகளைச் சிற்றரசர்கள் அரசாண்டனர். ஆகவே, சேர சோழ பாண்டிய அரசர்களும் துளுநாட்டு அரசரும் வட கொங்குநாட்டைக் கைப்பற்றிக்கொள்ள அடிக்கடி போர் செய்துகொண்டிருந்தார்கள். அக்காலத்தில் வடகொங்குநாடு இவ்வரசர்களின் போர்க்களமாக இருந்தது.

துளுநாட்டின் கிழக்கே (வடகொங்கு நாட்டுக்கு வடக்கே) கன்னட நாடு இருந்தது. அது அக்காலத்தில் சதகர்ணி யரசரின் தக்காணப் பேரரசுக்கு உள்ளடங்கியிருந்தது. (சதகர்ணியரசருக்குச் சாதகர்ணி என்றும் சாதவாகனர் என்றும் நூற்றுவர் கன்னர் என்றும் பெயர்கள் வழங்கின.)

துளுநாட்டின் வடக்கே மேற்குக் கடற்கரையைச் சார்ந்திருந்த நாடுங்கூட அக்காலத்தில் சதகர்ணியரசரின் தக்காண இராச்சியத்துக் குட்பட்டிருந்தது. ஆனால், சாகர் என்னும் மேற்கு சத்ராப் அரசர்கள் அப்பகுதிகளைக் கைப்பற்றினார்கள். அவர்கள் கைப்பற்றிய அப்பகுதிகளைச் சதகர்ணி யரசர் போரிட்டு மீட்டுக்கொண்டனர். மறுபடியும் சத்ராப் அரசர் அப்பகுதியைக் கைப்பற்றினர். மீண்டும் அதைச் சதகர்ணியரசர் மீட்டுக்கொண்டனர். இவ்வாறு அவ்வடபகுதி அடிக்கடி சத்ராப்—சதகர்ணி யரசரின் போர்க்களமாக இருந்தது. ஆகவே, துளுநாட்டரசருக்கு அக்காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் போர்செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கவில்லை. தெற்கே சேர அரசருடனும் தென்கிழக்கே வடகொங்குநாட்டுடனும் அவர்கள் அடிக்கடி போர் செய்ய வேண்டியிருந்தது.




படம் 2.

### துளுநாட்டரசர்

துளுநாட்டு (கொங்கணத்து) நன்னருடைய வரலாறு சங்க இலக்கியங்களிலிருந்து சிறிது கிடைக்கிறது. கொங்கணத்து அரசர் **கொங்காணங் கிழார்** என்று பெயர் பெற்றிருந்தனர். துளுநாடு கொங்கணம் என்றும் கொண்கானம் என்றும் கொண் பெருங்கானம் என்றும் கூறப்பட்டது. அவர்கள் குடும்பப் பெயர் நன்னன் என்பது. அவர்கள் நன்னன் வேண்மான் என்றும் கூறப்பட்டனர். நன்னன் குடும்பப் பெண்டிர் 'நன்னன் வேண்மாள்' என்று பெயர் கூறப்பட்டனர்.[1]

கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்தில் துளுநாட்டை அரசாண்ட நன்ன அரசரைப் பற்றித் தமிழில் சங்க இலக்கியங்களில் மட்டும் கிடைக்கின்றன. வேறு மொழி நூல்களில் இவ்வரலாறு கிடைக்கவில்லை.

நன்னர்களில் மூன்று அரசரைப் பற்றிச் சில செய்திகள் சங்க நூல்களிலிருந்து தெரிகின்றன. அந்த மூன்று அரசரும் கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் இருந்தவர் எனத்தெரிகின்றனர். இவர்களுக்கு முன்பிருந்த நன்னர்களைப் பற்றியும் பின்பு இருந்த நன்னர்களைப் பற்றியும் ஒன்றுந் தெரியவில்லை. இந்த மூன்று நன்னர்களை முதலாம் நன்னன், இரண்டாம் நன்னன், மூன்றும் நன்னன் என்று பெயர் இட்டு ஆராய்வோம்.

**முதலாம் நன்னன்** [ஏறத்தாழ கி. பி. 100 முதல் 125]

1. சிலம்பு-காட்சிக்காதை 5 ஆம் அடி. அரும்பதவுரை காண்க.

இவன் போரில் சிறந்த வீரனாக இருந்தான். பிண்டன் என்னும் வலிமிக்க சிற்றரசனுடன்போர் செய்து அவனை வென்றான். அந்தப் போர் எங்கு நடந்தது, அந்தப் பிண்டன் என்பவன் யார் என்பன தெரியவில்லை. பரணர் என்னும் புலவர் இச்செய்தியைக் கூறுகிறார்.

'உறுபகை தருஉம் மொய்ம்மூசு பிண்டன்
முனைமுரண் உடையக் கடந்த வென்வேல்
..............................................
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்.' *

இந்த நன்னன் வேறு அரசர்களுடனும் போர் செய்து அவர்களை வென்றான் என்று கூறப்படுகிறான். இவன் வென்ற வேறு அரசர் பெயர் கூறப்படவில்லை. தான் போரில் வென்ற அரசருடைய மனைவியரின் கூந்தலை மழித்து அக் கூந்தலினால் கயிறு [முரற்சி] திரித்தான் என்று கூறப்படுகிறான். இச்செய்தியையும் பரணர் என்னும் புலவரே கூறுகிறார்.

'விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியிற் கொடிதே.' †

இவன் இரவலருக்கு யானைகளைப் பரிசு வழங்கினான்.

'இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்.' ‡

இவன் பெண்கொலை புரிந்த நன்னன் என்றுங் கூறப்படுகிறான். அச் செய்தி இது:

---

* அகம். 152 : 9—12 † நற். 270 : 8—10
‡ அகம். 152 : 11—12

இவனுக்குரிய தோப்பு ஒன்றில் மாமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் ஓரமாகச் சிற்ருறு ஒன்று பாய்ந்து கொண்டிருந்தது. அந்த மரத்திலிருந்த மாங்கனியொன்று சிற்ருற்றில் விழுந்து நீரில் மிதந்து கொண்டு போனதைச் சிறிது தூரத்தில் நீராடிக் கொண்டிருந்த ஒரு பெண்மகள் எடுத்துத் தின்ருள். அப்பெண் அக்கனியைத் தின்ற செய்தியை நன்னன் அறிந்தான். சினங் கொண்டு அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான்.

அரசருக்குரிய பொருள்களைக் களவு செய்தவருக்கு அக்காலத்தில் கொலைத் தண்டனை விதிப்பது வழக்கம். பாண்டியனுடைய பொற்சிலம்பைக் களவு செய்தான் என்று [பொய்யாகக்] குற்றஞ் சாட்டப்பட்ட கோவலனுக்குக் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டது. அக் காலத்தில் வழக்கத்தில் இருந்த இந்தச் சட்டங் காரணமாகத்தான்.

அரசனுகிய நன்னனுடைய மாங்கனி என்பதையறியாமல், நீரில் மிதந்து வந்த மாங்கனியை எடுத்துத் தின்ற குற்றத்துக்காக அப்பெண்ணுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது. அப் பெண்ணின் தந்தை நன்னனை வேண்டிக் கொண்டான். அப்பெண் அறியாமல் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்றும், அந்தக் குற்றத்துக்குத் தண்டமாகத் தொண்ணூற்றென்பது யானைகளையும் அப்பெண்ணின் எடையளவு பொன்னையுங் கொடுப்பதாகவும் அப்பெண்ணைக் கொல்லாமல் விட வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டான். நன்னன் அவ்வேண்டுகோளுக்கு உடன்

படாமல் அப்பெண்ணைக் கொன்று விட்டான். இக்கொடுஞ்செயலினுல் மக்கள் அவனை வெறுத்துப் 'பெண் கொலை புரிந்த நன்னன்' என்று தூற்றினுர்கள். இச்செய்தியைப் பரணர் என்னும் புலவர் கூறுகிருர்.

'மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற் றென்பது களிற்றொடு அவள் நிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇ யரோ.'*

இக்கொடுஞ்செயலினுல் இவன் மீது வெறுப்படைந்தனர் கோசர் என்னும் இனத்தார். கோசர் போர்த்தொழில் செய்பவர். அவர்கள் ஏதோ சூழ்ச்சி செய்து நன்னனுடைய மாமரத்தை வெட்டி விட்டனர்.

அரசனுடைய மாமரத்தை அவனுடைய ஆட்சிக்குட்பட்ட மக்கள் வெட்டினுர்கள் என்ருல், அச்செயல் அரசனை அவமானப்படுத்தும் செயலாகும். கோசர் ஏதோ காரணத்தைக் கண்டு பிடித்து அக்காரணத்தை ஆதாரமாகக் கொண்டு நன்னனுடைய மாமரத்தை வெட்டி விட்டனர். இச்செய்தியையும் பரணரே கூறுகிருர்.

'நன்னன்
நறுமா கொன்று ஞாட்பிற் போக்கிய
ஒன்று மொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே'†

(குறிப்பு: இச்செய்யுளில் 'நறுமா கொன்று' என்று இருப்பதைத் தவருகப் பொருள் செய்து

* குறுந்தொகை. 292 : 1—5
† குறுந்தொகை. 73 : 2—5

கொண்டார் சரித்திரப் பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள். கோசர், நன்னனுடைய பட்டத்து யானையைக் கொன்று விட்டனர் என்று அவர் எழுதியுள்ளார்.* மா என்பதற்கு விலங்கு [யானை] என்றும் பொருள் உண்டாகையால் அவ்வாறு அவர் எழுதி விட்டார். அது தவறு. மா என்பது இங்கு மாமரத்தையே குறிக்கும்.)

## கடல் துருத்திக் குறும்பர்

நன்னனுடைய துளுநாட்டுக்கு அருகிலே கடலிலே ஒரு சிறு தீவு இருந்தது. (இத்தீவைப் பற்றி முன்னமே கூறியுள்ளோம்.) அத்தீவில் குறும்பனாகிய ஒரு வீரன் இருந்தான். அவன் அந்தத் தீவில் கடம்ப மரத்தைக் காவல் மரமாக வைத்துக் கொண்டிருந்தான். அவன் தன்னைச் சார்ந்த வீரர்களுடன் சேர்ந்து, அக்காலத்தில் ரோமாபுரியிலிருந்து வாணிகத்தின் பொருட்டுச் சேர நாட்டுக்கு வந்து கொண்டிருந்த யவனக் கப்பல்களைக் கொள்ளையடித்து அக்கப்பல்கள் சேர நாட்டுக்கு வருவதைத் தடுத்துக் கொண்டிருந்தான். இவ்வாறு பல ஆண்டுகளாக நடந்து கொண்டிருந்தது. இந்தத் தீவிலிருந்த குறும்பச் சிற்றரசன் நன்னனுக்குக் கீழடங்கியவன். நன்னனுடைய தூண்டுதலினாலே அக் குறும்பன் யவனக் கப்பல்களைச் சேர நாட்டுத் துறைமுகங்களுக்கு வராதபடி கொள்ளையடித்துக் கொண்டிருந்தான். கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதியில் இருந்த பிளினி என்னும்

---

* PP. 84, 85, Beginnings of South Indian History. S. Krishnaswamy Ayyangar.

யவனர், இவ்விடத்தில் கடற் கொள்ளைக்காரர் இருந்ததை எழுதியிருக்கிறார்.

கடல் துருத்தியில் (கடல் தீவில்) இருந்து கொண்டு யவன வாணிகக் கப்பல்களைக் கொள்ளை யடித்துக்கொண்டிருந்தபடியால், யவன வாணிகக் கப்பல்கள் சேர நாட்டுத் துறைமுகப் பட்டினங்களுக்கு வருவது தடைப்பட்டது. யவனக் கப்பல்கள் துளுநாட்டுக் கடற்கரையைக் கடந்துதான் சேர நாட்டுக்கு வரவேண்டும். யவனக் கப்பல்கள் சேர நாட்டுத் துறைமுகப் பட்டினங்களுக்கு வருவது தடைப்பட்டபடியால் சேரநாட்டு வாணிகம் பெரிதும் குறையத் தொடங்கிற்று. இதனால், கடல் துருத்தி (தீவில்)யில் இருந்த குறும்பரை அடக்க வேண்டியது சேரஅரசனின் கடமையாக இருந்தது.

**கடற் போர்**

அக்காலத்தில் சேரநாட்டை யரசாண்ட சேர அரசன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன். இந்த நெடுஞ் சேரலாதனுக்கு நான்கு மக்கள் இருந்தனர். அவர்கள் களங்காய்க்கண்ணி நார் முடிச்சேரல், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் (சேரன் செங்குட்டுவன்), ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், இளங்கோ அடிகள் என்பவராவர். இதனைப் பதிற்றுப்பத்து 4ஆம் பத்து, 5ஆம் பத்து, 6 ஆம் பத்துப் பதிகங்களினாலும் சிலப்பதிகாரம் வரந்தருகாதை (171-181) பதிகம் இவற்றின் உரைகளினாலும் அறிகிறோம்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடல் தீவிலிருந்த குறும்பனை அடக்குவதற்காக அவன்மேல் படையெடுத்தான். இவன், கடற்படையொன்றைத் தன் மகனாகிய செங்குட்டுவன் தலைமையில் அனுப்

பினுன். அக்காலத்தில் இளவரசனுக இருந்த செங்குட்டுவன் கடற்படையோடு சென்று கடல் தீவிலிருந்த குறும்பருடன் போர் செய்து அவர்களை வென்று அவர்கள் காவல் மரமாக வளர்த்து வந்த பேர் போன கடம்ப மரத்தைத் துண்டு துண்டாக வெட்டி அதனுல் முரசு செய்தான். கடல் குறும்பர்கள் அடியோடு ஒழிந்தனர். அதன் பிறகு யவனக் கப்பல்கள் வாணிகத்தின் பொருட்டுச் சேர நாட்டுத் துறைமுகங்களுக்கு வந்து வாணிகஞ் செய்தன.

கடல் துருத்திப் போர் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் காலத்தில், அவன் மகனுன சேரன் செங்குட்டுவன் இளவரசனுக இருந்த காலத்தில் நிகழ்ந்தது. அதனுல் கடற்போரை வென்றவர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்றும் சேரன் செங்குட்டுவன் என்றும் பதிற்றுப்பத்து 2 ஆம் பத்தும் 5 ஆம் பத்தும் கூறுகின்றன. செங்குட்டுவன், கடற்போரைத் தானே முன்னின்று நடத்தி வெற்றி பெற்றபடியால் அவன் 'கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்' என்று பெயர்பெற்றுன்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடற் போரை வென்ற செய்தியைப் பதிற்றுப்பத்து 2ஆம் பத்து இவ்வாறு கூறுகிறது.

'பவர் மொசிந்து ஓம்பிய திரள்பூங்கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவின் ஆர மார்பின்
போரடு தானைச் சேர லாத'*

என்று கூறுகிறது.

---

* 2 ஆம் பத்து 1 : 12—16

இதில், 'திரள்பூங்கடம்பின் கடியுடை முழு முதல் துமிய ஏய்' என்று கூறப்படுவது காண்க. (ஏய்-ஏவி). நெடுஞ்சேரலாதன் கடற்போரைச் செய்யத் தன் மகனை ஏவினான் என்பதும் தான் நேரில் அப்போரைச் செய்யவில்லை என்பதும் இதனால் தெரிகின்றன.

'இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச் சென்று
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சே ரலாதன் வாழ்க அவன் கண்ணி'*

என்று நெடுஞ்சேரலாதன் கடற்போர் வென்ற செய்தி கூறப்படுகிறது.

நெடுஞ்சேரலாதனுடைய மகனான கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன் இக்கடற்போரை நேரில் சென்று நடத்தி வெற்றிபெற்றதைப் பதிற்றுப் பத்து 5ஆம் பத்துச் செய்யுட்கள் கூறுகின்றன.

'தானை மன்னர்
இனி யாருளரோ நின்முன்னு மில்லை.
மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவரி கடவும் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி இமைப்பின் வேலிடுபு
முழங்கு திரைப் பனிக்கடல் மறுத்திசினோரே.' **

இதில், கடற்போரைச் செய்தவர் செங்குட்டுவனுக்கு முன்னர் ஒருவருமிலர் என்று கூறப்படுவது காண்க. இதனால், கடற்போரைத் தன் தந்தையின் பொருட்டு முன்னின்று நடத்தியவன் செங்குட்டுவனே என்பது தெளிவாகத் தெரிகின்றது.

---

* 2 ஆம் பத்து. 10 : 2—5

** 5 ஆம் பத்து. 5 : 17—22

செங்குட்டுவன் கடற்போரைச் செய்ததைக் கூறு கிற செய்யுட்கள் வேறு சில உள்ளன. அவற்றை யெல்லாம் இங்குக் காட்ட வேண்டியதில்லை என்று கருதுகிறோம்.

சேர அரசர் கடல் தீவிலிருந்த குறும்பரை வென்றதற்கும் துளுநாட்டு நன்னருக்கும் என்ன பொருத்தம், என்ன தொடர்பு என்று வாசகர்கள் கருதக்கூடும்.

கடல் தீவில் இருந்த குறும்பருக்கும் துளு நாட்டு நன்னனுக்கும் நெருங்கியதொடர்பு உண்டு.* இரண்டு காரணங்களைக் கொண்டு இருவருக்கும் தொடர்புண்டென்பதை யூகிக்கலாம். கடல்தீவு மிகச் சிறியது. அத்தீவிலிருந்தவர் தங்கள் தீவுக்கு அடுத்திருந்த நாட்டினரின் உதவி இல்லாமல் தனித்து இயங்கும் வாய்ப்பு உடையவர் அல்லர் என்பது முதல் காரணம். அந்தக் கடல்தீவு துளுநாட்

* நன்னனுடைய ஏழில்மலை கடற்கரைக்கு அருகிலே ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. இந்த மலை, கடலில் 27 மைல் தூரம் தெரிகிறது. இம் மலைமேலிருந்து பார்த்தால் கடலில் தூரத்தில் வருகிற கப்பல்களைக் காணலாம். சங்ககாலத்துக்கு மிகப் பிற்காலத்திலே, இன்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னே போர்ச்சுகல் தேசத்திலிருந்து இந்தியாவுக்கு முதல் முதல் வந்த வாஸ்கோ-ட-காமா என்பவன், இந்தத் துளு நாட்டு ஏழில் மலையைக் கடலில் தூரத்தில் வரும் போதே கண்டு இதன் அடையாளத்தைக் கொண்டு இதன் அருகில் கண்ணனூரில் வந்து தங்கினான். ஏழில் மலைக் கருகில் கடல் கொள்ளைக்காரர்கள் இருந்தார்கள் என்று பிற்காலத்தில் இந்தியாவுக்கு வந்த மேல்நாட்டு யாத்திரிகர்கள் எழுதியிருக்கிறார்கள். எனவே, கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்து (கடைச் சங்க காலத்திலிருந்து) துளு நாட்டில் கடற்கொள்ளைக்காரர் இருந்தனர் என்று கருதலாம்.)

டுக்கு அருகில் இருந்தபடியால் துளுநாட்டு அரச ரின் ஆதிக்கத்தில் அது இருந்திருக்க வேண்டும் என்பது இரண்டாவது காரணம்.

எனவே, துளுநாட்டு நன்னனின் ஆதிக்கத்தி லிருந்த கடல்தீவுக் குறும்பர், நன்னனுடைய ஏவு தலின்மேல், யவனக் கப்பல்கள் சேரநாட்டுத் துறைமுகங்களுக்குப் போகாதபடி குறும்பு செய் திருக்க வேண்டும். இக்காரணம் பற்றித்தான் சேர மன்னர் கடல் தீவுப் போரைச் செய்தது பற்றி இங்குக் கூறவேண்டியதாயிற்று.

முதலாம் நன்னனுடைய வரலாறு முழுமையும் தெரியவில்லை. ஆனால், அவனுக்கும் சேர அரசருக் கும் பரம்பரையாகப் பகைமை இருந்தது என்பது தெரிகிறது. இவன், இமயவரம்பன் நெடுஞ்சேர லாதனின் சமகாலத்தவனுதலால், அவன் இருந்த காலமாகிய கி. பி. 2ஆம் நூற்றுண்டின் தொடக் கக் காலத்தில் இருந்தவனுதல்வேண்டும். அதாவது உத்தேசமாகக் கி. பி. 100 முதல் 125 வரையில் முதலாம் நன்னன் இருந்தான் என்று கொள்ள லாம்.

**இரண்டாம் நன்னன்** (ஏறத்தாழ கி. பி. 125-150)

முதலாம் நன்னனுக்குப் பிறகு அவன் மகனுன நன்னன் இரண்டாமவன் துளுநாட்டை யரசாண் டான். இவன் துளு இராச்சியத்தின் எல்லையை விரிவுப்படுத்த முயன்றுன். அந்த முயற்சியில் ஓர ளவு வெற்றியையுங் கண்டான். சேர இராச்சியத் தின் வடக்கிலிருந்த சேரருக்கு உரிய பூழிநாட்டை வென்று அதைத் தன் துளுநாட்டுடன் சேர்த்துக்

கொண்டான். மேலும், இவனுடைய துளுநாட்டுக்குக் கிழக்கே இருந்த கொங்குநாட்டின் வடபகுதிகளைக் கைப்பற்றவும் முயற்சி செய்தான்.

இவனுடைய சேனைத் தலைவன் மிஞிலி என்பவன். மிஞிலி சிறந்த போர் வீரன். இவன் பாரம் என்னும் ஊரில் இருந்தான்.

முதலாம் நன்னன் காலத்துக்கு முன்பிருந்தே சேர அரசர் தென் கொங்குநாட்டைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றித் தங்கள் சேர இராச்சியத்தோடு சேர்த்துக்கொண்டனர். அக்காலத்தில் கொங்கு நாட்டைச் சிறுசிறு குறுநில மன்னர் ஆண்டனர். சேர சோழ பாண்டிய நாடுகளில் பேரரசர் இருந்தது போலக் கொங்குநாட்டில் பேரரசன் இல்லை. சிற்றரசர்கள் ஆட்சி செய்த கொங்குநாட்டைச் சேர அரசரும் துளுநாட்டு அரசரும் முறையே தென் கொங்கு நாட்டையும் வடகொங்கு நாட்டையும் சிறிது சிறிதாகக் கைப்பற்றிக்கொண் டிருந்தார்கள். சேர அரசரும் துளு மன்னரும் கொங்கு நாட்டைக் கைப்பற்றுவதைக் கண்ட சோழ பாண்டிய அரசர்களும் கொங்குநாட்டில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்த முயற்சி செய்தார்கள். இவ்வாறு, கொங்கு நாடு கடைச்சங்க காலத்தின் இறுதியில் (கி. பி. 2ஆம் நூற்றுண்டில்) தமிழ் அரசர்களின் பொதுப் போர்க்களமாக இருந்தது.

கொங்குநாட்டைச் சேர்ந்த உம்பற்காடு (யானை மலைப் பிரதேசம்) என்னும் பிரதேசத்தைச் சேரர் முதலில் கைப்பற்றினர். உம்பர் காட்டை வென்று அங்குத் தன் ஆட்சியை நிறுவினவன்

பல்யானைச் செல்கெழு குட்டுவன்* கொங்குநாட்டின் ஒரு பகுதியான கொல்லிக் கூற்றத்தைக் அக்காலத்தில் ஓரி என்னும் சிற்றரசன் யரசாண்டான். அப்போது, சேர அரசன், மலையமான் திருமுடிக்காரி என்பவனைத் தன் சேனைத் தலைவனாகக் கொண்டு அவன் மூலமாக ஓரியைக் கொன்று ஓரியின் கொல்லிக் கூற்றத்தைக் கைப்பற்றினான். இவ்வாறு சேரர் கொங்குநாட்டில் ஆதிக்கம் பெறுவது சோழ பாண்டியருக்கு விருப்பமில்லை. மேலும், கொல்லிக் கூறத்துக்கு அருகில் இருந்த கொங்கு நாட்டின் மற்றொரு சிற்றரசனாகிய தகடூர் அதிகமான், சேரரும் துளுநாட்டு நன்னரும் கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கடைசியில் தன்னையும் வென்று விடுவார்கள் என்று அஞ்சினான். இவ்வாறிருந்த போது **பசும்பூண் பாண்டியன்** என்னும் பாண்டிய மன்னன், தென்கொங்கு நாட்டில் சேர அரசர் முன்னமே கைப்பற்றியிருந்த ஊர்களைத் தவிர ஏனைய ஊர்களைக் கைப்பற்றிக்கொண்டான்.

**பசும்பூண் பாண்டியன்**

பசும்பூண் பாண்டியனைத் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்று சிலர் தவறாகக் கருதுகிறார்கள். பசும்பூண் பாண்டியன் வேறு, நெடுஞ்செழியன் வேறு. தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்குப் பசும்பூண் செழியன் என்னும் பெயரும் உண்டு.† பசும்பூண் செழியன் வேறு, பசும்பூண் பாண்டியன் வேறு. நெடுஞ்செழியனுக்கு மூன்று தலை

* 3-ஆம் பத்து. பதிகம்.

† புறம். 76:9

முறைக்கு முன்பு இருந்தவன் பசும்பூண் பாண்டியன். இதற்குச் சங்க நூல்களில் சான்றுகள் உள்ளன. இச்சான்றுகளைக் காட்டி விளக்குவதற்கு இது இடம் அன்று.

பசும்பூண் பாண்டியன், சேரன் செங்குட்டுவனுடைய தமயனை களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் காலத்திலிருந்த பாண்டியன். பசும்பூண் பாண்டியன், கொங்குநாட்டில் சில இடங்களை வென்று கைப்பற்றிக்கொண்டதனால், கொங்குநாட்டுச் சிற்றரசர் சிலர் அவனுக்குக் கீழடங்கினார்கள். அவர்களில் முக்கியமானவன், தகடூரை யரசாண்ட அதிகமான் பரம்பரையைச் சேர்ந்த **நெடுமிடல் அஞ்சி** என்பவன். பாண்டியனுக்குக் கீழடங்கிய நெடுமிடல் அஞ்சி அப்பாண்டியனுடைய சேனைத் தலைவனாக அமைந்தான். பசும்பூண் பாண்டியன் கொங்கு நாட்டின் சில பகுதிகளை வென்று கைப்பற்றிக் கொண்டதை,

> 'வாடாப் பூவிற் கோங்கர் ஓட்டி
> நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்'

என்று அகநானூறு* கூறுகிறது.

கொங்குநாட்டுச் சிற்றரசர்களில் முதன்மையானவர் தகடூர் அரசரான அஞ்சி யரசர்கள். அவ்வரசபரம்பரையில் வந்த **நெடுமிடல் அஞ்சி** பசும்பூண் பாண்டியனுக்குக் கீழடங்கியதோடு அப்பாண்டியனுடைய சேனைபதியாகவும் அமைந்துவிட்டது கண்டு கொங்குநாட்டார் அவனை வெறுத்தார்கள்.

---

* செய்யுள் 253:4—5.

அக்காலத்தில் சேரநாட்டு மன்னர் கொங்கு நாட்டில் சில இடங்களைக் கைப்பற்றியிருந்ததோடு அமையாமல் மேலும் ஊர்களைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்துகொண் டிருந்தார்கள். சங்க காலத்திலே கொங்குநாட்டைச் சிற்றரசர் பலர் ஆட்சி செய்திருந்தார்களே தவிர முடியுடைய பேரரசர் ஒருவரும் ஆட்சி செய்யவில்லை. ஆகவே சேர சோழ பாண்டியஅரசர் அச்சிற்றரசர்களை எளிதில் வென்று கொங்கு நாட்டைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றிக் கொண்டிருந்தார்கள்.

கொங்கு நாட்டைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சேர அரசர் கைப்பற்றிக் கொண்டிருக்கும் போது, பசும்பூண் பாண்டியன் கொங்குநாட்டில் புகுந்து அந்நாட்டு ஊர்கள் சிலவற்றைப் பிடித்துக் கொண்டது காரணமாகச் சேரர், பாண்டியன் மேல் பகை கொண்டனர். ஆகவே அது காரணமாகச் சேர அரசர் பசும்பூண் பாண்டியனோடு போர் செய்ய நேரிட்டது. பாண்டியன் சேனையை அவன். சேனைத் தலைவனான நெடுமிடல் அஞ்சி தலைமை தாங்கி நடத்தினான். அவ்வாறு நடந்த சில போர்களில் நெடுமிடல் அஞ்சி தோல்வியும் அடைந்தான். இச்செய்தியைச் சங்கச் செய்யுட்களிலிருந்து அறிகிறோம்.

'நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
பொருமலை யானையொடு புலங்கடை இறுத்து'*

என்றும்,

'நெடுமிடல் சாய்த்த பசும் பூண்பொருந்தலர்'**

என்றும் கூறுவது காண்க.

* பதிற்றுப் பத்து. நாலாம் பத்து. 2 : 10—11.
** அகம். 266 : 12.

## பாண்டியனின் துளுநாட்டுப் போர்

துளுநாட்டு நன்ன அரசர் தங்கள் நாட்டுக்கு அருகில் இருந்த வடகொங்குநாட்டில் ஆதிக்கம் பெற முயன்றார்கள் என்று கூறினோம். அதனால், வடகொங்கு நாட்டைக் கைப்பற்ற முயன்ற பசும்பூண் பாண்டியனுக்குத் துளுநாட்டரசர் பகைவரா யினர். பசும்பூண் பாண்டியன் துளுநாட்டின் மேல் படையெடுத்துச் சென்றான். பாண்டியன் சேனையை, அவனுடைய சேனைத் தலைவனான அதிகமான் நெடுமிடல் அஞ்சி நடத்திச் சென்று துளுநாட்டில் புகுந்தான். அவனை நன்னன் (இரண்டாவன்) உடைய சேனைத் தலைவனான **மிஞிலி** என்பவன் **பாழி** என்னும் ஊருக்கருகில் எதிர்த்துப் போர் செய்தான். அப்போரில் அதிகமான் நெடுமிடல் அஞ்சி கொல்லப்பட்டு இறந்தான். இதை

'கறையடி யானை நன்னன் பாழி
ஊட்டரு மரபின் அஞ்சுவரு பேய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி **மிஞிலி,**
புள்ளிற் கேம மாகிய பெரும் பெயர்
வெள்ளத் தானை அதிகன் கொன்று உவந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பு.''*

என்று அகப்பாட்டு கூறுகிறது.

அதிகமான் நெடுமிடல் அஞ்சி துளுநாட்டில் பாழிப்போரில் இறந்த செய்தியைக் கேட்டு அவன் மேல் வெறுப்புக் கொண்டிருந்த கொங்கர் மகிழ்ச்சி கொண்டாடினார்கள் என்று குறுந்தொகைச் செய்யுள் கூறுகிறது.

---

* அகம் 142: 9-14.

'கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பு'*

என்று அச்செய்யுள் கூறுவது காண்க.

பசும்பூண் பாண்டியனுடைய துளுநாட்டுப் போர் தோல்வியாக முடிந்தது. துளுநாட்டரசன் நன்னன் இரண்டாவன் வெற்றி பெற்றான். அதன் பிறகு பசும்பூண் பாண்டியனுடைய செய்தி ஒன்றுந் தெரியவில்லை.

பாண்டியன் போர் முடிந்த பிறகு துளு நாட்டின் மேல் சேரன் போர் தொடுத்தான். சேரன் செங்குட்டுவனுடைய தமயனான களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், தனக்கு அடங்காமலும் தனக்கு எதிராகப் போர் செய்து கொண்டுமிருந்த நன்னனை அடக்குவதற்காகத் துளு நாட்டின் மேல் போர் தொடுத்தான்.

## சேரன் போர்

நன்னன் இரண்டாவன், தன்மேல் படையெடுத்து வந்த சேரனுடன் போர் செய்ய வேண்டியவனானான். இந்தப் போர் மிகக் கடுமையாக இருந்தது. சேரன், நன்னனை அடியோடு அழிக்க வேண்டும் என்னும் உறுதியுடன் படையெடுத்துப் போய்ப் போர் செய்தான். சேரன் நன்னனை அழிக்க வேண்டிய காரணங்கள் மூன்று இருந்தன. முதலாவது, நன்ன அரசர் சேரநாட்டுக்கு வரும் யவன வாணிகக் கப்பல்களைச் சேரநாட்டுக்கு

* குறுந் 393:3-6.

வராதபடி தடுத்துக் குறும்பு செய்துகொண்டிருந் தார்கள். இந்தக் குறும்பை நார்முடிச்சேரலின் தந்தையராகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (முதலாம் நன்னன் காலத்தில்) வென்றான் என் பதை மேலே கூறினோம்.

இரண்டாவது காரணம். நன்னன் இரண்டா வன் சேரநாட்டுக்கு உரிய பூழி நாட்டைப் பிடித் துக்கொண்டான். இது களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரலின் காலத்தில் நடந்தது. ஆகவே இழந்த பூழி நாட்டை மீட்டுக்கொள்ள வேண்டியது சேர னுடைய கடமையாக இருந்தது.

மூன்றாவது காரணம். நன்னன் வடகொங்கு நாட்டிலிருந்த புன்னாட்டைக் கைப்பற்றிக் கொண்ட தாகும். அக்காலத்தில் புன்னாடு நீலக்கல் சுரங்கங் களுக்குப் பேர் பெற்றிருந்த செழிப்பான நாடாக இருந்தது. புன்னாட்டு நீலக் கற்களை உரோம தேசத்தார் விரும்பி வாங்கினார்கள். தமிழகத் துறைமுகங்களுக்கு வந்த யவனக் கப்பல் வாணி கர் சேரநாட்டு மிளகையும் புன்னாட்டு நீலக்கற்களை யும் அதிகவிலை கொடுத்து வாங்கிக் கொண்டு போனார்கள். கி. பி. 140-க்கும் 169-க்கும் இடையில் இருந்த தாலமி என்னும் யவனர் தமது நூலில் புன்னாட்டு நீலக்கற்களைப் பற்றியும் எழுதியுள்ளார். அவர் புன்னாட்டைப் பௌன்னட என்று கூறு கிறார். புன்னாடு உள்நாட்டிலிருந்தது என்றும் அங்கு நீலக்கற்கள் கிடைத்தன என்றும் அந்நாட் டைக் கடற்கொள்ளைக்காரர் அரசாண்டனர் என் றும் அவர் எழுதியுள்ளார்.

கடற்கொள்ளைக்காரர் அரசாண்டனர் என்று தாலமி கூறுவது, துளுநாட்டு நன்னர்களையாகும். நன்ன அரசர்கள் கடற்கொள்ளைக்காரரை ஆதரித்தவர்கள். யவனக் கப்பல்கள் சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்களுக்கு வராதபடி கடற்கொள்ளைக்காரர்களைக்கொண்டு அவர்கள் தடுத்து வந்தார்கள். கடற்கொள்ளைக்காரரை ஆதரித்த நன்னர் புன்னாட்டைக் கைப்பற்றி யிருந்தபடியால், புன்னாட்டைக் கடற்கொள்ளைக்காரர் அரசாண்டனர் என்று தாலமி கூறினார் போலும்.

புன்னாட்டின் தலை நகரம் கிட்டூர் என்பது. அதைச் சங்கச் செய்யுள் கட்டூர் என்று கூறுகிறது.* பாசறைக்கும் கட்டூர் என்பது பெயர். ஆனால் இந்தக் கட்டூர் பாசறை அன்று. கட்டூராகிய கிட்டூர் பிற்காலத்தில் கிட்டிபுரம் என்று வழங்கப்பட்டது. அவ்வூர், காவிரி ஆற்றின் கிளை நதியாகிய கப்பணி ஆற்றின் கரைமேல் இருந்தது. புன்னாடு பிற்காலச் சரித்திரத்தில் 'புன்னாடு ஆறுயிரம்' என்று பெயர் பெற்றிருந்தது. (சங்க காலத்தில் வடகொங்கு நாட்டைச் சேர்ந்திருந்த புன்னாடு இப்போது மைசூர் இராச்சியத்துடன் இணைந்திருக்கிறது.)

நீலக்கல் சுரங்கத்துக்குப் பேர் போன புன்னாட்டைத் துளுநாட்டு நன்னன் கைப்பற்றிக்கொண்டபடியால், கொங்கு நாட்டில் அவனுடைய ஆதிக்கம் பெருகும் என்றும் அதனால் தன்னாட்டுக்கு ஆபத்து ஏற்படும் என்றும் அறிந்தான் சேரமன்னன். ஆகவே, களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல்,

---

* அகம். 44:10. 9-ம் பத்து. 2:2 10:30.

நன்னனை அடக்கத் துளுநாட்டின் மேல் படையெடுத்தான். நன்னனுடைய பிடியிலிருந்து புன்னுட்டை விடுவிப்பதற்காகப் புன்னுட்டின் காப்பாகச் சேரன் நன்னன்மேல் படையெடுத்துச் சென்றான்.

## முதற்போர்

களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல், தன்னுடைய உறவினனும் சேனைத் தலைவனும் ஆகிய வெளியன் வேண்மான் ஆய்எயினன் என்பவன் தலைமையில் தன் சேனையைத் துளுநாட்டின் மேல் போர் செய்ய அனுப்பினான். வெளியன் வேண்மான் ஆய்எயினன், நன்னன்மேல் படையெடுத்துச் சென்றான். அவனை நன்னனுடைய சேனைத் தலைவனான மிஞிலி என்பவன் பாழி என்னும் இடத்தில் எதிர்த்தான். கடுமையாக நடந்த அந்தப் போரில் ஆய்எயினன் இறந்துபோனான். அதனால், சேரன் தொல்வியடைந்தான். இதனை,

'பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்கண்
அஞ்ச லென்ற ஆஅய் எயினன்
இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தனன் சொல்லிய தமையாது.'*

என்பதனாலும்,

'வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவிற் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந் தென'†

என்பதனாலும்,

* அகம். 396 : 2—6 † அகம். 208 : 5—9

'ஒன்னார்,
ஓம்பரண்கடந்த வீங்கு பெருந் தானை
அடுபோர் மிஞிலி செருவேல் கடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப
ஆஅய் எயினன் வீழ்ந்தென.'*

என்பதனாலும்,

'கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டென'†

என்பதனாலும் அறிகிறோம்.

இரண்டாம் நன்னனுடைய சேனைத் தலைவனான மிஞிலி என்பவன் இப்போர்களை வென்றான். இந்த மிஞிலி, பாரம் என்னும் ஊரின் தலைவன் என்று முன்னமே கூறினோம். இவன், பாண்டியன் சேனாபதியாகிய அதிகமான் நெடுமிடல் அஞ்சியையும், சேரன் படைத் தலைவனான வெளியன் வேண்மான் ஆய் எயினனையும் போரில் வென்றதை மேலே கூறினோம்.

## இரண்டாம் போர்

களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் துளு நாட்டின்மேல் செய்த முதற் போரிலே தோல்வியடைந்தான். ஆனாலும், அவன் போர் முயற்சியை விட்டுவிடவில்லை. தானும் தன்னுடைய தம்பியாகிய சேரன் செங்குட்டுவனும் இளைய தம்பியாகிய ஆடு கோட்பாட்டுச் சேரலாதனும் முனைந்து நின்று இரண்டாம் முறையாகத் துளுநாட்டின் மேல் போர் செய்தார்கள். இது முழுமுனைப் போராக இருந்தது. நார்முடிச் சேரல் துளுநாட்டின் தென் பகுதியில் நன்னனை

---

* அகம். 181 : 3—7 † அகம். 148 : 7—8

எதிர்த்தான். சேரன் செங்குட்டுவன் துளு நாட்டின் மேற்குக் கடற்கரையோரமாகச் சென்று துளுநாட்டை எதிர்த்தான். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் துளுநாட்டின் கிழக்குப் பக்கத்தை வடகொங்கு நாட்டில் (புன்னாட்டில்) இருந்து எதிர்த்தான்.

இப்போர் நிலைச்செருவாகச் சிலகாலம் நடந்தது. இந்த மும்முனைப் போரில் நன்னன் இரண்டாவன் தோல்வியடைந்தான். நன்னனும் அவனுடைய சேனாதிபதியாகிய மிஞிலியும் போரில் இறந்துபோனார்கள். இப்போர் கடம்பின் பெருவாயில் (வாகைப் பெருந்துறை) என்னும் இடத்தில் நடந்தது. இரண்டாம் போர் நார்முடிச் சேரலுக்கு முழுவெற்றியாக இருந்தது. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், தான் இழந்திருந்த பூழி நாட்டை மீட்டுக்கொண்டதோடு துளுநாட்டையும் தனக்குக் கீழ்ப்படுத்தினான். நார்முடிச் சேரல் துளு நாட்டுப் போரில் அடைந்த வெற்றியைப்பதிற்றுப் பத்து 4-ஆம் பத்து இவ்வாறு கூறுகிறது.

'ஊழின்ஆகிய உயர்பெருஞ் சிறப்பிற்
பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை யழித்து அவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து
குருதிச் செம்புனல் குஞ்சரம் ஈர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டு.'*

'பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதற் றடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்'†

---

* பதிகம். 5—11 † 4 ஆம் பத்து 10 : 14—16

நார்முடிச்சேரலின் தம்பியாகிய சேரன் செங்குட்டுவன், இப்போரில் துளுநாட்டின் கடற்கரைப் பகுதியில் இருந்த **வியலூர், கொடுகூர்** என்னும் ஊர்களைக் கைப்பற்றிய செய்தியைக் கீழ்க்கண்ட செய்யுள்களினுல் அறிகிறோம்.

'உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் **வியலூர்** நூறி
அக்கரை நண்ணிக் **கொடுகூர்** எறிந்து'*

'கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்'‡

இப்போரின்போது செங்குட்டுவன், துளுநாட்டின் துறைமுகப்பட்டினமான நறவு என்னும் பட்டினத்தையும் பிடித்தான்.

இவ்வாறு களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் தன் தம்பியருடன் சேர்ந்து துளுநாட்டை வென்று அடக்கினுன். இவ்வெற்றியைக் கல்லாடனுர் மிகத்தெளிவாகக் கூறுகிருர்.

'குடா அது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடுதந் தன்ன வளம்'§

பிறகு துளுநாடு சேரரின் ஆட்சிக்குட்பட்டது.

**நன்னன் மூன்ருவன்** (ஏறத்தாழ கி. பி. 150-180)

இரண்டாம் நன்னனுடைய மகனுன மூன்ரும் நன்னன் சேரருக்கு அடங்கித் துளுநாட்டை

* 5 ஆம் பத்து : 10—12 ‡ சிலம்பு. நடுகல். 114—115
§ அகம். 199 : 18—23.

யரசாண்டான். அவன், தான் சேரனுக்கு அடங்கியவன் என்பதற்கு அடையாளமாக **நன்னன் உதியன்** என்று பெயர் பெற்றிருந்தான். நன்னன் என்பது துளுநாட்டு அரசரின் குடிப்பெயர். உதியன் என்பது சேரநாட்டு அரசரின் குடிப்பெயர். எனவே, நன்னன் உதியன் என்பதற்குச் சேரர் ஆட்சிக்கு உட்பட்ட நன்னன் என்பது பொருள். 'நன்னன் உதியன் அருங்கடிப்பாழி'*

சேரர் துளுநாட்டைத் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்த பிறகு புன்னாடும் அதன் தலை நகரமான கட்டூரும் சேரர் ஆட்சிக்குட் பட்டன.

நன்னன் மூன்றுவன் சேர அரசர்களுக்கு அடங்கித் துளுநாட்டை யரசாண்டான். பெரும் பூட்சென்னி என்னும் சோழன் வடகொங்கு நாட்டிலிருந்த புன்னாட்டின் தலைநகரமான கட்டூரின் மேல் படையெடுத்துச் சென்றபோது, சேர அரசன் சார்பாக அக் கட்டூர்ப் போரில் சோழனை எதிர்த்த சிற்றரசர்களில் இந்த நன்னன் உதியனும் ஒருவன் என்று தெரிகிறுன். கட்டூரின்மேல் படை யெடுத்துவந்த பெரும்பூட்சென்னியின் சேனைத்தலைவனுகிய பழையன் என்பவனை எதிர்த்தவர்கள் இந்த நன்னனும் ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்பவர்களும் ஆவர்.

> **'நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி,**
> **துன்னருங் கடுந்திறல் கங்கன், கட்டி,**
> **பொன்னணி வல்விற் புன்றுறை என்றுங்கு**
> **அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்**
> **பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டென'****

---

* அகம்: 258:1. ** அகம்: 44 : 7—11.

நன்னன் மூன்றுவனுக்குப்பிறகு துளுநாட்டை யரசாண்டவர் யார் என்பது தெரியவில்லை. மூன்றும் நன்னனுடைய பரம்பரையினரே தொடர்ந்து ஆண்டிருக்க கூடும். துளுநாட்டை வென்ற பிறகு நார்முடிச் சேரல், செங்குட்டுவன் இவர்களின் தம்பியாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், துளுநாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய நறவு (நாருவி) என்னும் பட்டினத்தில் தங்கியிருந்தான் என்று கூறப்படுகிறுன்.

'அருஅ விளையுள் அருஅ யாணர்த்
தொடைமடி களைந்த சிலையுடை மறவர்
பொங்குபிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி
வருங்கடல் ஊதையிற் பனிக்கும்
துவ்வா நறவின் சாயினத் தானே'*

துளுநாட்டு நன்னரைப் பற்றிச் சங்க நூல்களில் இவ்வளவுதான் காணப்படுகின்றன. நன்னருடைய வரலாறு இவ்வளவோடு முற்றுப் பெறுகிறது.

குறிப்பு: நன்னன் என்னும் ,பெயருள்ள வேறு சிற்றரசர்களும் இதே காலத்தில்(கி.பி.2ஆம் நூற்றுண்டு) இருந்தனர். அவர்களைத் துளுநாட்டு நன்ன அரசர்கள் என்று தவருகச் சிலர் கூறுகிறுர்கள். தொண்டை நாட்டில் பல்குன்றக் கோட்டத்தில் செங்கண்மா என்னும் ஊரின் அரசனை செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன்மீது பாடப்பட்டது மலைபடுகடாம் என்னும் கூத்தர் ஆற்றுப்படை. இந்த நன்னன் வேறு. துளுநாட்டு

* 6 ஆம் பத்து. 10 : 8—12

நன்னன் வேறு. நன்னன் ஆஅய்* என்பவனுந் துளுநாட்டு நன்னன் அல்லன். நன்னன் என்னும் பெயர் ஒற்றுமையினால், அப்பெயருள்ளவர் எல்லோரையும் துளுநாட்டு வேள் அரசராகிய நன்னருடன் சேர்த்தல் கூடாது.

* அகம் 356:19

# 3. நன்னர் காலம்

துளுநாட்டு அரசர்களைப் பற்றிய வரலாறு, கி. பி.4-ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு கிடைக்கின் றன. ஆனுல் அவ்வரசர்கள் நன்ன அரசர் பரம் பரையினர் அல்லர்; வேறு அரச பரம்பரையினர். ஆனுல் சங்க காலத்துத் துளுநாட்டின் பழைய வரலாறு சங்க நூல்களைத் தவிர வேறெங்கும் கிடைக்கவில்லை. சங்க நூல்களிலே துளுநாட் டைப் பற்றியும் துளுமன்னர்களைப் பற்றி யும் கூறியுள்ளவற்றை மேலே விளக்கிக் கூறி னேம். மூன்று நன்னர் இருந்ததையும் அவர்கள் ஏறத் தாழக் கி. பி. 100 முதல் 180-வரையில் இருந்தார்கள் என்பதையும் கூறினேம். இதுவே ஏறத்தாழச் சரியான காலம் என்பதை இங்கு விளக்குவோம்.

*I.* இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் சேர நாட்டை யரசாண்ட காலத்தில் துளுநாட்டை முதலாம் நன்னன் அரசாண்டான் என்று கூறி னேம். நன்னன் ஆட்சிக் காலத்திலே அவனுடைய மகனுன இரண்டாம் நன்னன் இளவரசனுக இருந் தான் என்பது சொல்லாமலே அமையும். முதலாம் நன்னனுடைய ஆட்சிக் காலத்தில் அவன் ஆட்சிக் குட்பட்டிருந்த கடல் துருத்தியில் (கடல்தீவில்) குறும்ப அரசன் ஒருவன் நெடுஞ்சேரலாதனுக்கு எதிராகக் குறும்பு செய்தான் என்றும் அவனை நெடுஞ்சேரலாதன் கடற்போரில் வென்று அடக்

கினுன் என்றும் கூறினேம். அந்தக் கடற் போரை நேரில் சென்று நடத்தியவன் அவனுடைய இளைய மகனுன சேரன் செங்குட்டுவன் (கடல் பிறக்கோட்டிய குட்டுவன்) என்றுங் கூறினேம். அப்போது செங்குட்டுவன் இளவரசனுக இருந்தான் என்பதையும் தெரிவித்தோம். ஆகவே முதலாம் நன்னனும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் சமகாலத்தினர் என்பது தெரிகின்றது.

II. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இறந்த பிறகு சேரநாட்டை யரசாண்டவன் அவனுடைய மூத்த மகனுன களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல். இவன் காலத்தில் துளுநாட்டை யரசாண்டவன் நன்னன் இரண்டாவன். களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் அரசாண்ட காலத்தில் அவனுடைய தம்பியாகிய சேரன் செங்குட்டுவனும் இளைய தம்பியாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் சேரநாட்டின் வெவ்வேறிடங்களை ஆட்சி செய்தனர்.

நார்முடிச் சேரலின் காலத்தில் பாண்டிநாட்டை யரசாண்டவன் பசும்பூண் பாண்டியன். பசும்பூண் பாண்டியனுடைய சேனைத் தலைவனுக இருந்தவன் தகடூர் அரசனுகிய அதிகமான் நெடுமிடல் என்பவன். அதிகமான் நெடுமிடலை நார்முடிச்சேரல் போரில் வென்றுன். பிறகு, அதிகமான் நெடுமிடல் துளுநாட்டில் சென்று போர் செய்தான். அவனை நன்னன் இரண்டாவனுடைய சேனைத் தலைவனுன மிஞிலி என்பவன் போரில் கொன்றுவிட்டான்.

நார்முடிச் சேரல் தன் சேனுபதியாகிய வெளியன் வேண்மான் ஆய்எயினன் என்பவனைத் துளு

நாட்டின் மேல் போர் செய்ய அனுப்பினுன். அவனை நன்னனுடைய சேனுபதி மிஞிலி போரில் கொன்றுவிட்டான். பிறகு, நார்முடிச்சேரலும் அவன் தம்பியராகிய செங்குட்டுவனும், ஆடுகோட் பாட்டுச் சேரலாதனும் துளுநாட்டின்மேல் போர் செய்து நன்னன் இரண்டவனைப் போரில் கொன்று துளுநாட்டைக் கைப்பற்றினுர்கள் என்பதைக் கூறினேம்.

நன்னன் இரண்டாவன் இறந்த பிறகு அவனுடைய மகனுன நன்னன் மூன்ருவன் சேரருக்குக் கீழடங்கி நன்னன் உதியன் என்று பெயர் சூட்டிக் கொண்டு அரசாண்டான் என்பதையும் கூறினேம்.

மூன்று நன்னர்களும் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன், அவன் மக்களான களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல், செங்குட்டுவன் (கடல் பிறக்கோட்டிய குட்டுவன்), ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்பவர்களின் சமகாலத்தவர் என் பதை மேலே விளக்கிக் கூறினேம்.

துளுநாட்டுப் போர்களில் சேரன் செங்குட்டு வன் முக்கியமான பங்கு கொண்டிருந்தான். தன் தந்தை நெடுஞ்சேரலாதன் காலத்தில் நிகழ்ந்த கடற்போரில் தானே முன் நின்று போரை நடத்தி வெற்றி பெற்ருன். தன் தமயனுன நார்முடிச் சேரல் செய்த துளுநாட்டுப் போரில் இவன் முக்கிய பங்கு கொண்டு போரை வென்ருன். இவைகளைப் பற்றி முன்பே விளக்கிக் கூறியுள்ளோம்.

இந்தப் போர்கள் எல்லாம் செங்குட்டுவனின் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியிலேயே முடிந்து

விட்டன. அவன் இளவரசனுக இருந்தபோதும் அரசாட்சிபெற்ற உடனே முடிவடைந்து விட்டன.

சோழன் கரிகாலன் இறந்த பிறகு, செங்குட்டுவனின் மைத்துனனுன கிள்ளி வளனுக்கும் ஒன்பது தாயாதிகளுக்கும் நடந்த அரசாட்சி உரிமைப் போரில், செங்குட்டுவன் தன் மைத்துனனுக்காகச் சோழமன்னர் ஒன்பது பேருடனும் போர் செய்து வென்று சோழ ஆட்சியைத் தன் மைத்துனனுக்குக் கொடுத்ததும், கங்கைக்கரைக்குச் சென்று கனகவிசயரை வென்றுசிறைப் பிடித்துக்கொண்டு வந்ததும், கண்ணகிக்குப் பத்தினிக்கோட்டம் அமைத்ததும் ஆகியவை எல்லாம் செங்குட்டுவனின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் துளுநாட்டுப் போர்கள் முடிந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்ந்தன.

III. இது வேறு விதமாகவும் தெளிவாகிறது. பரணர் என்னும் புலவர், மேலே கூறிய சேர அரசர் நன்ன அரசர்களின் சமகாலத்தில் இருந்தவர். அவர், நெடுஞ்சேரலாதன், நார் முடிச் சேரல், செங்குட்டுவன் ஆகிய சேரஅரசர் காலத்திலும் நன்னன் முதலாவன், நன்னன் இரண்டாவன், நன்னன் மூன்ருவன் என்னும் மூன்று துளுவ அரசர் காலத்திலும் இருந்தவர் என்பது அவருடைய பாடல்களினுல் தெரிகின்றது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆரிய அரசரை வென்றதையும் யவனரைச் சிறைப் பிடித்து வந்ததையும் இமயத்தில் வில் பொறித்ததையும் பரணர் கூறுகின்ருர்.* நெடுஞ் சேரலாதன் சோழன்

* அகம் : 396 ; 16-18.

வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியுடன் போர் என்னும் இடத்தில் போர் செய்து இருவரும் புண் பட்டுப் போர்க்களத்தில் விழுந்து சில காலம் உயிர் போகாமல் கிடந்த போது அவர்களைப் பரணர் நேரில் பாடியுள்ளார்.* இச்செய்யுளின் அடிக் குறிப்பு இவ்வாறு கூறுகிறது. 'சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற் பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் போர்ப்புறத் துப் பொருது வீழ்ந்தாரை அக்காலத்திற் பரணர் பாடியது' என்று அக்குறிப்புக் கூறுகிறது.**

நெடுஞ்சேரலாதன் காலத்தில் இருந்த முதலாம் நன்னனையும் பரணர் தம்முடைய செய்யுட்களில் குறிப்பிட்டுள்ளார். அந்த நன்னன் பெண் கொலை புரிந்தவன் என்றும்† அவனுடைய மாமரத்தைக் கோசர் சூழ்ச்சி செய்து வெட்டி விட்ட செய்தியை யும்‡ பரணர் கூறுகின்றார்.

இதனால், பரணரும் நெடுஞ்சேரலாதனும் முத லாம் நன்னனும் சமகாலத்திலிருந்தவர் என்பது தெரிகின்றது.

நெடுஞ்சேரலாதன் இறந்த பிறகு அவன் மக னை நார்முடிச்சேரல் சேரநாட்டை யரசாண்டான். நார்முடிச்சேரல், அதிகமான் நெடுமிடல் என்பவனை வென்றான் என்று பதிற்றுப் பத்து§ கூறுகிறது.

---

* புறம் : 63.

** இந்தச் சேரனும் சோழனும் போர்ப்புறத்தில் புண் பட்டு விழுந்து உயிர் போகாமல் கிடந்த போது கழாத் தலை யார் என்னும் புலவரும் இவர்களை நேரில் பாடினர். புறம் 368.)

† குறும் : 292 : 1-5. ‡ குறும் 73 : 2-4.

§ 4-ஆம் பத்து, 2 : 10.

நார்முடிச் சேரல் வென்ற நெடுமிடல் என்பவனைப் பரணரும் கூறுகிறார். பசும்பூண் பாண்டியனின் சேனாபதி அதிகமான் நெடுமிடல் என்றும் அவனை அவனுடைய பகைவர் அரிமணவாயில் உரத்தூர் என்னும் ஊரில் வென்றனர் என்றும்* பிறகு அவன் துளுநாட்டு வாகைப் பறந்தலைப் போரில் இறந்து போனான் என்றும்† அவன் நன்னன் (இரண்டாவன்) உடைய சேனாபதியாகிய மிஞிலியால் கொல்லப் பட்டான் என்றும் கூறுகிறார்.‡

நார்முடிச் சேரலின் சேனாபதியாகிய வெளி யன் வேண்மான் ஆய்எயினன் என்பவன் நன்னன் (இரண்டாவன்) உடைய சேனாபதியாகிய மிஞிலி யால் கொல்லப்பட்ட செய்தியையும் பரணர் கூறு கிறார்.§

இதனால், பரணர், நார்முடிச்சேரல், அதிகமான் நெடுமிடல், நன்னன் இரண்டாவன், அவனுடைய சேனாபதி மிஞிலி ஆகியோர் காலத்தில் இருந்தவர் என்பது தெரிகின்றது.

நெடுஞ்சேரலாதனின் இரண்டாவது மகனும் நார்முடிச் சேரலின் தம்பியுமாகிய சேரன் செங்குட் டுவனைப் பரணர் பதிற்றுப் பத்து 5-ஆம் பத்துப் பாடினார். அதில் செங்குட்டுவனுடைய ஆட்சியின் முற்பகுதி நிகழ்ச்சிகளை மட்டும் கூறுகின்றார். செங்குட்டுவன் கடலில் சென்று கடற் போர்

* அகம்: 266: 10-14.
† குறும்: 393: 3-6.
‡ அகம்: 142: 9-13.
§ அகம் 148: 7-8, 181: 4-7, 208: 5-9, 396: 2-6.

செய்து குறும்பரை அடக்கியதையும் மோகூர் மன்னனை வென்றதையும் சிறப்பித்துக்கூறுகிறார்.

(செங்குட்டுவன் காலத்துப் பிற்கால நிகழ்ச்சி களான மைத்துன வளவனுக்காக ஒன்பது சோழரை வென்றதும், கங்கைக் கரையில் கனக விசயரை வென்று சிறைப் பிடித்ததும், கண்ண கிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்ததும் முதலிய பிற்கால நிகழ்ச்சிகளைப் பரணர் 5-ஆம் பத்தில் கூறவில்லை. எனவே இந்நிகழ்ச்சிகள் நிகழ்வதற்கு முன்னே 5-ஆம் பத்துப் பாடினார் என்பது தெரி கிறது*)

---

* வயது முதிர்ந்தவரான பரணர் செங்குட்டுவன்மேல் 5-ஆம்பத்துப் பாடிய பிறகு சில காலத்துக்குப் பின்னர் இறந்துபோனார். இந்த வரலாற்றை யறியாத சிலர், செங் குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைத்ததும் இமயம் சென் றதும் முதலிய செய்திகளை அவனைப்பாடிய 5-ஆம் பத்தில் கூறாதபடியால் இவை பிற்காலத்தில் கட்டப்பட்ட கதைகள் என்று கூறுகிறார்கள். பிற்காலத்தில் நிகழ்ந்த செய்திகளை முன்னமே இறந்துபோன பரணர் எவ்வாறு கூறமுடியும் ? செங்குட்டுவன் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் நடந்த இச் செய்திகளைச் செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோ வடிகள் சிலப்பதிகாரத்தில் கூறினார். செங்குட்டுவன் காலத் துக்குப் பிறகு, அவனைப் பரணர் பாடிய 5-ஆம் பத்தின் பதிகத்தில் அவனுடைய பிற்கால நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்தனர். ஆழ்ந்து ஆய்ந்தோய்ந்து பாராமல் மேற்புல்லை மேய்கிற 'ஆராய்ச்சிக்காரர்'களுக்கு உண்மைச் செய்திகள் புலப்படா, பரணர், செங்குட்டுவன் ஆட்சியின் முற்பகுதியி லேயே காலமானார் என்பதை உணராமல், அவர் செங்குட்டு வனின் இறுதிக் காலத்தில் 5-ஆம் பத்துப் பாடினார் என்று தவறாகக் கருதிக்கொண்டு இவ்வாறெல்லாம் எழுதி விட்டனர்.

நன்னன் மூன்ருவனுகிய நன்னன் உதியனைப் பரணர் தம் செய்யுளில் கூறுகிருர்.* எனவே, பரணர், செங்குட்டுவன், நன்னன் மூன்ருவன் காலத்திலும் இருந்தவர் என்பது தெரிகின்றது.

இதனுல், மூன்று நன்னர் காலத்திலும் நெடுஞ் சேரலாதன் அவன் மக்களாகிய நார்முடிச்சேரல் செங்குட்டுவன் ஆகியோர் காலத்திலும் பரணர் இருந்தார் என்பது சந்தேக மில்லாமல் தெரிகின்றது. பரணர் சேரன் செங்குட்டுவன் ஆட்சியின் முற்பகுதியிலே காலஞ்சென்றிருக்க வேண்டும்.

IV. சேரன் செங்குட்டுவன் வஞ்சிமா நகரத்தில் பத்தினிக் கோட்டம் அமைத்துச் சிறப்புச்செய்த போது அவ்விழாவுக்குக் 'கடல் சூழ் இலங்கைக்கயவாகு வேந்தன்' (முதலாம் கஜபாகு) வந்திருந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. கஜபாகு அரசன் கி. பி. 173 முதல் 195 வரையில் அரசாண்டான். செங்குட்டுவனின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் கஜபாகு ஆட்சிக்கு வந்தான். செங்குட்டுவன் ஐம்பத்தைந்து ஆண்டு அரசாண்டான் என்று 5-ஆம் பத்தின் பதிகக் குறிப்புக் கூறுகிறது. இது அவனுடைய இளவரசு ஆட்சிக் காலமும் சேர்ந்ததாகும்.

செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைத்த காலத்தில் அவன் தலைநரைத்து முதிர்ந்த வயதுடையவனுய் இருந்தான் என்று கூறப்படுகிருன். செங்குட்டுவன் உத்தேசம் கி. பி. 180-இல் காலஞ்

* அகம் 258 : 1-3.

சென்றிருக்கவேண்டும். அவன் பத்தினிக் கோட்டம் அமைத்தது ஏறத்தாழ கி. பி. 175-இல் இருக்கலாம். அவன் 55 ஆண்டு ஆட்சி செய்தான் என்பதனுல், அவன் ஏறத்தாழ கி. பி. 125 முதல் 180 வரையில் அரசாண்டான் என்று கருதலாம்.

கி. பி. 125-இல் இளவரசு பட்டம்பெற்ற போது செங்குட்டுவனுக்கு ஏறத்தாழ இருபது வயதிருக்கலாம். அவனுடைய தந்தையான நெடுஞ்சேரலாதன், ஐம்பத்தெட்டாண்டு அரசாண்டான் என்று கூறப்படுகிறுன். எனவே அவன்ஏறத்தாழக் கி.பி. 72 முதல் 130 வரையில் அரசாண்டிருக்கக் கூடும். அவனுடைய மூத்தமகனுன நார்முடிச்சேரல் இருபத்தைந்துஆண்டு அரசாண்டான்என்பதனுல், (இளவரசு காலத்தையும் சேர்த்து) ஏறக்குறைய கி. பி. 120 முதல் 145 வரையில் அரசாண்டிருக்க வேண்டும். சேரன் செங்குட்டுவன் ஏறத்தாழ கி. பி. 125 முதல் 180வரையில் அரசாண்டிருக்கக் கூடும்.

எனவே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் சமகாலத்தவனுகிய முதலாம் நன்னன் ஏறத்தாழ கி. பி. 100 முதல் 125 வரையிலும் அவன் மகனுன இரண்டாம் நன்னன் ஏறத்தாழ கி. பி. 125 முதல் 150 வரையிலும் அவன் மகனுன மூன்றும் நன்னன் ஏறத்தாழ கி. பி. 150 முதல் 180 வரையிலும் அரசாண்டிருக்கக் கூடும் என்றும் கருதலாம்.

## 4. நன்னரைப் பற்றிய செய்யுட்கள்

நன்ன அரசரையும் அவர்களின் துளுநாட்டையும் பற்றிய செய்யுட்கள் சங்கச் செய்யுள்களில் காணப்படுகின்றன. அப்பாடல்களில் சரித்திர சம்பந்தமான பாடல்களை இந்நூலுள் ஆங்காங்கே மேற்கோள் காட்டினேம். மேற்கோள் காட்டப்படாத வேறு செய்யுள்களை இங்கே காட்டுகிறேம்.

நன்னனுடைய பாரம் என்னும் ஊரையும் அவனுடைய ஏழில் மலையைச் சார்ந்த பாழிக் குன்றையும் பரணர் பாடியுள்ளார்.

'இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பிற்
களிமயில் கலாவத் தன்ன.'*

நன்னனுடைய பிறந்த நாள் விழா, ஊரில் சிறப்பாகக் கொண்டாடப் பட்ட செய்தியை மாங்குடி மருதனர் தமது மதுரைக் காஞ்சியில் கூறுகிறர்.

'பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாள்
சேரிவிழலின் ஆர்ப்பெழுந் தாங்கு.'**

நன்னனுடைய துளுநாட்டில், பாழி என்னும் நகரத்தில் பெருநிதி சேமித்து வைக்கப்பட்டிருந்ததை மாமூலனர் கூறுகிறர்.

---

* அகம். 152 : 11—14

** மதுரைக் காஞ்சி அடி 618—619

'மெய்ம்மலி பசும்பூண் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலித்
தோகைக் காவின் துளு நாட்டன்ன
......... ..........................
......... ......... .......... ..........
சூழியானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி யன்ன கடியுடை வியனகர்'*

நன்னனுடைய துளுநாட்டில் உள்ள உயரமான மலைகளிலே வளர்ந்த மூங்கிற் காடுகளில் முதிர்ந்த மூங்கில் வெடித்து அதிலிருந்து முத்து (வேய் முத்து) சிதறுவதை முள்ளியூர்ப் பூதியார் கூறுகிறார்.

"பல புரி
வார் கயிற் றொழுகை நோன்சுவற் கொளீஇப்
பகடுதுறை யேற்றத் துமண்விளி வெரீஇ
உழைமான் அம்பிணை யினனிரிந் தோடக்
காடுகவின் அழிய உரைஇக் கோடை
நின்றுதின விளிந்த அம்பணை நெடுவேய்க்
கண்விடத் தெறிக்கு மண்ணா முத்தம்
கழங்குறழ் தோன்றல பழங்குழித் தாஅம்
இன்களி நறவின் இயல்தேர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅன்
பொன்படு மருங்கின் மலை."**

நன்னனுடைய துளுநாட்டிலிருந்த ஒரு கோட்டையின் மேல் பகைமன்னன் ஒருவன் படையெடுத்து வந்து கோட்டையை முற்றுகையிட்டான். கோட்டையிலிருந்த நன்னனுடைய வீரர்கள் எதிர்த்துப் போராடினார்கள். ஆனால், அவர்கள் தோற்றுப்போகும் நிலையில் இருந்தார்கள். அதனை

* அகம். 15: 2—5., 10—11 ** அகம். 173 : 8—18

யறிந்த நன்னன் உடனே தன் சேனைகளுடன் வந்து முற்றுகையிட்ட மன்னனை ஓட்டிக் கோட்டையைக் காப்பாற்றினுன். இந்தச் செய்தியை மோசிகீரனுர் என்னும் புலவர் கூறுகிருர்.

'வினைதவப் பெயர்ந்த வென்வேல் வேந்தன்
முனைகொல் தானையொடு முன்வந் திறுப்பத்
தன்வரம் பாகிய மன்னெயில் இருக்கை
ஆற்ரு மையிற் பிடித்த வேல்வலித்
தோற்றம் பிழையாத் தொல்புகழ் பெற்ற
விழைதக ஓங்கிய கழைதுஞ்சு மருங்கிற்
கானமர் நன்னன்'*

(குறிப்பு: படையெடுத்துவந்த மன்னன் சேர சோழ பாண்டியர்களில் யார் என்று கூறப்படவில்லை. முற்றுகை யிடப்பெற்ற கோட்டையின் பெயருங் கூறப்படவில்லை. இவை கூறப்பட்டிருந்தால் துளுநாட்டுச் சரித்திரத்தில் ஒரு நிகழ்ச்சியைப் பெற்றிருப்போம். ஆனுல் இதனைக் கூறிய மோசிகீரனுர் சரித்திர நிகழ்ச்சியைக் கூறக் கருதியவர் அல்லர். அகப் பொருட்செய்தி யொன்றுக்கு உவமை கூறவந்தவர் தற்செயலாக இந்நிகழ்ச்சியைக் கூறியுள்ளார்.)

நன்னன் தன் பகையரசரை வென்று அவரிடமிருந்து பெற்ற பொருளைப் புலவருக்கு வழங்கினுன் என்னும் செய்தியை மாமூலனுர் கூறுகிருர்.

'ஞெமன்ன்
தெரிகோல் அன்ன செயிர்தீர் செம்மொழி
உலந்த ஒக்கல் பாடுநர் செலினே
உரன் மலி உள்ளமொடு முனை பாழாக
அருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன்.'†

* அகம். 392 : 21—27. † அகம். 349 : 3—8

மோசிகீரனுர் என்னும் புலவர் நன்னனை (கொண்கானங் கிழானைப்) பாடிய செய்யுட்கள் புறநானூற்றில் தொகுக்கப்பட்டுள்ளன. அவை:

'திரைபொரு முந்நீர்க் கரை நணிச் செலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்
சின்னீர் வினவுவர் மாந்தர். அதுபோல்
அரசர் உழைய ராகவும் புரைதபு
வள்ளியோர்ப் படர்குவர் புலவர். அதனல்,
யானும்,
பெற்ற தூதியம் பேறியா தென்னேன்
உற்றனென் ஆதலின் உள்ளிவந் தனனே.
ஈயென விரத்தலோ வரிதே, நீயது
நல்கினு நல்கா யாயினும் வெல்போர்
எறிபடைக் கோடா வாண்மை, யறுவைத்
தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத்
தண்பல இழிதரும் அருவிநின்
கொண்பெருங் கானம் பாடலெனக் கெளிதே.'*

திணை—பாடாண்டிணை. துறை : பரிசிற்றுறை.
கொண்கானங் கிழானை மோசிகீரனுர் பாடியது.

'வணர் கோட்டுச் சீரியாழ் வாடுபுடைத் தழீஇ
உணர்வோர் யாரென் இடும்பை தீர்க்கெனக்
கிளக்கும் பாண ! கேளினி, நயத்தில்
பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ
ஏர்தரு சுடரின் எதிர்கொண் டாஅங்கு
இலம்படு புலவர் மண்டை, விளங்கு புகழ்க்
கொண்பெருங் கானத்துக் கிழவன்
தண்டார் அகலம் நோக்கின மலர்ந்தே.'**

திணை—பாடாண்டிணை. துறை—பாணாற்றுப்படை.
கொண்கானங் கிழானை மோசிகீரனுர் பாடியது.

---

* புறம். 154. ** புறம். 155

'ஒன்றுநன் குடைய பிறர்குன்றம். என்றும்
இரண்டுநன் குடைத்தே கொண்பெருங் கானம்.
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொடுத்துணக் கிடப்பினுங் கிடக்கும். அஃதான்று
நிறையருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்குஞ் செம்மலும்
உடைத்தே.'*

திணை—பாடாண்டிணை. துறை—இயன்மொழி.
கொண்கானங்கிழானை மோசிகீரனுர் பாடியது.

* புறம். 156.

## 5. துளு மொழியும் தமிழ் மொழியும்

கன்னட நாடு ஆந்திரநாடு மலையாள நாடு களைப் போலவே துளுநாடும் திராவிடநாட்டைச் சேர்ந்தது. தமிழ் கன்னடம் தெலுங்கு மலையாள மொழிகளைப் போலவே துளு மொழியும் திராவிட இன மொழியாகும். அசோகச் சக்கரவர்த்தியின் சாசனங்களிலே கூறப்படுகிற சத்திய புத்திரநாடு என்பது துளுநாடே என்பதை முன்னமே கூறி யுள்ளோம்.

சங்க காலத்திலே துளுநாட்டில் வழங்கி வந்த மொழி தமிழ் என்பதையும் துளுநாட்டு அரசர் தமிழ்ப் புலவரை ஆதரித்ததையும் துளுநாட்டை யும் துளுநன்னர்களையும் தமிழ்ப்புலவர் பாடிய செய்யுள்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றி ருப்பதையும் இந்நூலில் ஆங்காங்கே எடுத்துக் காட்டினோம். சங்க காலத்துக்குப் பிறகு, துளு நாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் இருந்த நெருங்கிய தொடர்பு அற்றுப் போனபடியினாலே, பிற்காலத் திலே துளுநாட்டுத் தமிழ் தனித்து நின்றது. பிறகு, தமிழ் நாடாக இருந்த சேரநாடு, மொழி மாறுபட்டுக் கேரள நாடாகவும் மலையாள மொழி யாகவும் மாறிப்போன காலத்தில், துளுநாட்டுத் தமிழுக்கும் தமிழ்நாட்டுத் தமிழ் மொழிக்கும் இருந்த தொடர்பு முழுவதும் அற்றுப் போய்விட்டது. அத னால், துளுநாட்டிலே வழங்கிவந்த தமிழ் மொழி பிற்காலத்திலே சிதைந்தும் திரிந்தும் மருவியும்

உருமாறிவிட்டது. இவ்வாறு துளுமொழி தமிழி னின்று அகன்று தன்னந்தனியே வளர்வதாயிற்று.

நெடுங்காலம் தனித்து ஒதுங்கி யிருந்தபோதி லும், இலக்கியம் படைக்காதவெறும் பேச்சு மொழி யாகவும் கொச்சைமொழியாகவும் இருந்த போதி லும், அது திராவிட மொழிகளிலிருந்து அதிகமாக மாறுபட வில்லை. இந்தியா தேசத்தின் வடமேற் கில் ஆப்கானிஸ்தானத்தில் அயல் மொழிகளுக்கு இடையிலே தன்னந்தனியே அகப்பட்டுக்கொண்ட ருஃகூயி' என்னும் திராவிட மொழியைப் போல, வற்று மொழிகளுக்கிடையே அகப்பட்டுக் கொள்ளாமல் துளுமொழி திராவிட இனமொழி களின் சூழ்நிலையிலே இருந்தபடியால் அதன் மொழி அதிகமாக மாறுபடவில்லை. அயல்மொழி பேசும் மக்கள் துளுநாட்டிலே வராதபடி அதன் இயற்கைச் சூழ்நிலை இருந்தபடியாலும் அயல் மொழிக்காரர் துளுநாட்டில் நுழைந்து அந்த மொழியைக் கெடுக்கவில்லை.

ஒரு மொழி இலக்கிய வளமும் கலைவளமும் பெறவேண்டுமானால், அம்மொழியைப் பேசுவோ ரின் எண்ணிக்கையும் கணிசமான அளவு இருக்க வேண்டும். அதிக அளவு மக்கள் தொகை இல்லாத படியாலும் இருந்த மக்கள் தொகையில் பெரும்பகுதி மக்களைக் கன்னட மொழியும் மலையாள மொழியும் கவர்ந்து கொண்டபடியாலும், துளுநாட்டிலே துளு மொழி பேசுவோரின் தொகை குறைந்துபோயிற்று. சேர நாட்டில் வழங்கிய தமிழ்மொழி பிற்காலத்தில் மலையாள மொழியாக மாறிப் போன பிறகு, அந்த மலையாள மொழி தன் நாட்டுக்கு அருகிலிருக்கும்

துளுநாட்டின் தென்பகுதியில் ஆதிக்கம் செலுத்திற்று. அவ்வாறே, துளுநாட்டின் வடக்குப் பகுதியில் கன்னட மொழி ஆதிக்கம் பெற்றது. மலையாளமும் கன்னடமும் திராவிட மொழியாக இருந்த போதிலும் துளுமொழிக்கு அம்மொழிகள் வேற்று மொழிகள் தானே. துளுநாட்டின் தெற்கிலும் வடக்கிலும் முறையே மலையாளமும் கன்னடமும் இடம்பெற்றபடியால், துளுநாட்டின் நடுப்பகுதியில் மட்டும் துளு மொழி நிலைபெறுவதாயிற்று.

சங்க காலத்திலும் அதன் பிற்காலத்திலும் ஏறக்குறைய கி. பி. 4-ஆம் நூற்றுண்டு வரையில் தமிழ் பேசும் நாடாக இருந்த துளுநாடு, பிறகு அரசியலினுல் தமிழ்நாட்டிலிருந்து பிரிந்து தனித்தியங்கிற்று. பிறகு துளுநாட்டுத் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுத் தமிழ் மொழிக்கும் தொடர்பற்றுப் போன காரணத்தினுல் துளுநாட்டுத் தமிழ் சிதைந்தும் மருவியும் மாறுபட்டுக் கொச்சை மொழியின் நிலைக்குக் குன்றிப்போயிற்று. இப்போது துளு மொழி பழைய மொழியிலிருந்து பெரிதும் மாறுபட்டுச் சிதைந்து இருக்கிறது. துளுநாடு தன் பழைய இலக்கியத்தைக் கைவிடாமலிருந்தால் இந்தத் தாழ்ந்த நிலையை யடைந்திருக்காது.

சென்ற 19 ஆம் நூற்றுண்டிலே, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே, மேல் நாட்டுக் கிறிஸ்து வப்பாதிரிமார் துளுநாட்டு மக்களை மதமாற்றஞ் செய்ய முற்பட்டார்கள். அவர்கள் துளு மொழியிலே கிருஸ்து மத நூல்களை எழுதத் தொடங்கினுர்கள். துளு மொழிக்குத் தனி எழுத்து இல்லாதபடியால், அவர்கள் அடுத்த நாடாகிய

கன்னட நாட்டில் வழங்கிய கன்னட எழுத்தையே துளு மொழிக்கும் வழங்கினார்கள்.

துளுநாட்டின் தலைநகரமான மங்களூரில் கிருஸ்துவ மிஷனரிமார் **பெஸல் மிஷன் பிரஸ்*** என்னும் அச்சகத்தை அமைத்து அதன் மூலமாகத் துளு மொழியில் கிருஸ்துமத நூல்களை வெளியிட்டார்கள். அந்த அச்சகத்தில் முதல் முதலாக மத்யூ அப்போஸ்தலரின் சுவிசேஷம் ** என்னும் நூல் 1842-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இது 'லித்தோ கிராப்' என்னும் எழுத்தினால் அச்சிடப்பட்டது. புதிய ஏற்பாடு என்னும் விவிலிய நூல் 1859-இல் அச்சிடப்பட்டது. பிரிகல் பாதிரியார் துளுமொழி இலக்கண நூலை ஆங்கில மொழியில் எழுதி 1872-ஆம் ஆண்டில் அச்சிட்டார்† மவ்னர் பாதிரியார் துளு ஆங்கில அகராதியை எழுதி அச்சிட்டார்.‡ இவ்வாறு 19 ஆம் நூற்றாண்டில் துளுமொழியில் இலக்கியம் தோன்றிற்று. ஆனால், மேன் மேலும் துளுமொழி இலக்கியம் வளரவில்லை. இது வருந்தத்தக்கது.

பழைய காலத்திலிருந்தே துளு மொழியில் இலக்கிய நூல்கள் ஏற்பட்டிருக்குமானால், அவ்விலக்கிய நூல்கள் பழந்தமிழ்ச் சொற்களை ஒத்திட்டு ஆராய்வதற்குப் பெரிதுந் துணையாக இருந்திருக்கும். சங்க காலத்து இலககியங்களில் வழங்கப்பட்டு இப்போது வழககிழந்துபோன பலதமிழ்ச்

---

* The Basel Mission Press

** Gospell of st. Mathew

† A Grammar of the Tulu Language by Rev. J. Brigal.

‡ Tulu-English Dictionary by Rev. Mauner.

சொற்கள் இன்றும் துளு மொழியில் சிதைந்தும் மருவியும் உருமாறி வழங்குகின்றன. பழமையான இலக்கியம் இல்லாத நிலையிலும் துளு மொழியில் பல தூய தமிழ்ச் சொற்கள் சிதைந்து காணப்படு கின்றன என்றால், பழைய இலக்கியங்களைத் துளு மொழி பெற்றிருக்குமானால், அத்துளு இலக்கியம் பழந்தமிழ்ச் சொற்களை ஆராய்வதற்கு எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்!

தமிழ் மொழியில் இப்போது வழக்கிழந்து போன பழைய சொற்கள் இப்போதும் துளுமொழி யில் சிதைந்து காணப்படுவதை இங்கு எடுத்துக் காட்டுவோம். அதற்கு முன்பு துளு நாட்டு ஊர்ப் பெயர்கள் பல தமிழ்ச் சொல்லாக அல்லது திரா விட இனச் சொல்லாக இருப்பதைக் காட்டுவோம்.

**கல்**

* கல் என்னுஞ் சொல் சங்க இலக்கியங்களில் மலை, அல்லது குன்று, அல்லது மலைச்சிகரம் என் னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளதைக் காண்

* குறிப்பு: தமிழ் நாட்டிலே ஒரு மலை 'திண்டுக்கல்' என்று பெயர் பெற்றிருக்கிறது. ஆந்திர நாட்டிலும் 'தோர்ணக் கல்' என்னும் பெயருள்ள ஒருமலையுண்டு. இலங்கைத் தீவில் உள்ள சில மலைகள் கல (gala) என்று பெயர் கூறப்படுகின்றன. கல என்பது கல் என்பதன் மரூஉ. இலங்கையில் உள்ள மலையுச்சிகளில் தட்டையான பாறைக் கல்லின் மேல் அக் காலத்து வேடர் ஆண்டுக்கு இருமுறை கலெயெக்க (கல் இயக் கன்—முருகன்) என்னும் தெய்வத்துக்கு ஆடல் நிகழ்த்தி வணங்கினர். அதனை வேலனின் வெறியாடலுடன் ஒப்பிட லாம். அந்த மலைப் பாறைகள் கல (கல்) என்று பெயர் பெற் றிருந்தன. ஆண்டிய கல, நெல்லியா கல, கணெமுல்லெ கல, கோபல்லவெ கல முதலியன.

கிறோம். இச்சொல் இப்பொருளில் பிற்காலத் தமிழில் வழக்கிழந்து விட்டது, ஆனால், துளு நாட்டிலே கல் என்னுஞ் சொல் பழைய பொருளில் இன்னும் வழங்கிவருகிறது. கார்க்கல் என்பது கருநிறமுள்ள மலை என்னும் பொருளுடைய சொல். (கார்-கருமை. கல்-மலை) துளுநாட்டிலே கருநிறப்பாறைக் குன்றுகள் உள்ள ஒரு ஊர் இருக்கிறது. அவ்வூருக்குக் **கார்க்கல்** என்று பழைய பெயர் உண்டு. இப்போது அப்பெயர் சிதைந்து **கார்கள** என்று வழங்குகிறது. (கார்க்கல்—கார்கல—கார்கள) இவ்வூரில் உள்ள கோமட்டேசுவரர் உருவம் பேர்போனது. 41 அடி 5 அங்குலம் உயரமுள்ள ஒரே கல்லினால் செய்யப் பட்ட இந்தக் கோமட்டேசுவரர் உருவம் கார்க்கல் நகரத்துக்குச் சிறப்பைத் தருகின்றது. கார்க்கல் (கார்கள)நகரத்தின் பெயரே இந்தத் தாலுக்காவுக்கும் பெயராக அமைந்திருக்கிறது.

துளுநாட்டின் கிழக்கெல்லையாக அமைந்திருப்பது உயரமான மேற்குத் தொடர்ச்சி மலைகள் என்று கூறினோம். அந்த மலைகளில் உயரமான சிகரங்கள் **கல்** என்று பெயர் கூறப்படுகின்றன. (கல்-மலை)ஆனெ கல்லு (ஆனைக்கல்), ஏர்கல்லு, அம்மெதி கல்லு, கடாயி கல்லு என்று அச்சிகரங்கள் பெயர் பெற்றுள்ளன.

**அங்காடி**

அங்காடி என்னும் சொல் பழைய தமிழ்ச் சொல். இதன் பொருள் கடை, கடைத் தெரு என்பது. அல்லங்காடி, நாளங்காடி முதலிய அங்காடிகளைச் சங்க நூல்களில் காண்கிறோம். இச்சொல்

இப்பொருளிலே இன்றும் தமிழ்நாட்டில் வழங்குகிறது. தெலுங்கிலே இச்சொல் 'அங்கடி' என்று வழங்கி வருகிறது.

துளுநாட்டிலும் இப் பெயரையுடைய ஊர்கள் இருக்கின்றன. உப்பினங்கடி, பெள்தங்கடி, ஹொசங்கடி (புதிய அங்காடி) என்னும் பெயருள்ள ஊர்கள் துளுநாட்டில் இப்போதும் உள்ளன.

**ஊர்**

* ஊர் என்னும் சொல் திராவிட இனச் சொற்களுக்குப் பொதுவான ஒரு பழைய சொல். துளுநாட்டிலேயும் ஊர் என்னும் பெயருள்ள பல ஊர்கள் இன்றும் உள்ளன. பைந்தூரு, பெர்டூரு, பார்கூரு, மங்களூரு, பாணெமங்களூரு, பசரூரு, கொல்லூரு, ஸிரூரு, பைலூரு, சர்வதூரு, ஜால்சூரு, புத்தூரு, வேணூரு என்னும் ஊர்கள் துளுநாட்டில் இப்போதுள்ள ஊர்கள்.

---

* குறிப்பு : திராவிட இனத்தார் வாழ்கிற நாடுகள் பலவற்றில், ஊர் என்னும் பெயருள்ள ஊர்கள் பல உண்டு. ஆனால், பாரசீகக் குடாக் கடலின் கரைமேல் யூபிரிடிஸ், டைகிரிஸ் என்னும் ஆறுகள் பாய்கிற பழைய சுமெரிய நாட்டிலே ஊர் என்னும் பெயருள்ள ஊர்கள் சில இருந்தன. அவை ஊர், நிப்பூர், எரிதூர் (எருதூர்), ஊருக், அஸ்ஸூர் என்று பெயர் பெற்றிருந்தன. இப்பெயர்களும், வேறு சில காரணங்களும் சுமெரிய நாட்டுக்கும் திராவிட மக்களுக்கும் மிகப் பழைய காலத்தில் நெருங்கிய தொடர்பு இருந்ததைக் காட்டுகின்றன என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கருதுகிறார்கள்.

## வெதிரி

வெதிரி என்னும் சொல் மூங்கில் என்னும் பொருளில் தமிழ்ச் சங்க நூல்களில் வழங்கப் பட்டுள்ளது. இச்சொல் தமிழுக்குமட்டு மல்லாமல் திராவிட இனமொழிகளுக்குப் பொதுச் சொல்லாக இருந்தது. கன்னட மொழியிலும் துளுமொழியி லும் இச்சொல் பயிலப்படுகிறது. மூங்கில் காடாக இருந்த இடங்கள் வெதிரி என்று வழங்கிப் பிறகு பெதிரி என்று திரிந்துள்ளன. துளுநாட்டிலே **மூடுபதிரி**, படுபத்ரி என்று இரண்டு ஊர்கள் உள் ளன. இவை மூடபத்ரி படுபத்ரி, என்றும் மூடபதிரெ, படுபதிரெ என்றும் வழங்கப்படுகின் றன. மூடுவெதிரி, படுவெதிரி, என்னும் பெயர் களே இவ்வாறு மருவி வழங்கப்படுகின்றன. (மூடு, மூடல்—கிழக்கு, வெதிரி-மூங்கில் காடு, படு-மேற்கு வெதிரி-மூங்கிற் காடு) மூங்கிற்காடாக இருந்து பிறகு ஊராக மாறிய இடம் என்பது இவற்றின் பொருள்.

துளுநாட்டில் சுப்பிரமணியம் என்னும் பெய ருள்ள ஒரு மலையுண்டு. அதற்கு அடுத்த ஊருக்கும் சுப்பிரமணியம் என்று பெயர் வழங்குகிறது. முருகனை மலைமேல் வைத்து வழிபட்டனர் பழந் தமிழர். குன்றுகளிலும் மலைகளிலும் முருகனை வழி பட்ட தமிழரைப் போன்றே துளுநாட்டினரும் முருகனை மலைமேல் வைத்து வழிபட்டனர். அந்த மலை அக்காலத்தில் முருகன் மலை என்று பெயர் இருந்திருக்கும். இப்போது, முருகன் சுப்பிரமணி யன் என்று பெயர் பெற்ற பிறகு, அந்த மலைக்குச் சுப்பிரமணியம் என்றே பெயர் கூறுகின்றனர்.

அந்த வழியாகப் பாயும் ஆற்றுக்குக் குமாரதாரி என்று பெயர் கூறுகின்றனர். குமரன்—முருகன். குமாரதாரி என்பது முருகன் ஆறு என்னும் பொருள் உடையது. இவ்வாறு துளுநாட்டின் இடப்பெயர்கள் பல தமிழ்ச் சொல்லாகவே அமைந்துள்ளன.

இனி, சங்ககாலத்தில் வழங்கிப் பிறகு மறைந்துபோன தமிழ்ச் சொற்கள் இக்காலத்திலும் துளு மொழியில் சிதைந்தும் மருவியும் வழங்குவதைக் காட்டுவோம். விரிவஞ்சி சில சொற்களை மட்டும் ஆராய்வோம்.

**தாழை**

தாழை என்னுஞ் சொல் கைதை என்னும் தாழைப் புதருக்குப் பெயராக வழங்கப்படுகிறது. சங்க இலக்கியங்களிலே தாழை என்னுஞ் சொல் தென்னை மரத்துக்கும் பெயராக வழங்கப்பட்டிருந்தது. சங்க காலத்துக்குப் பிறகு தென்னை என்னும் பொருளில் தாழை என்னுஞ் சொல் வழக்கிழந்துவிட்டது. திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை, பெரும் பாணாற்றுப்படை, குறிஞ்சிப் பாட்டு, நற்றிணை முதலிய சங்க இலக்கியங்களே தென்னை மரம், தாழை என்று கூறப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் இந்தச் சொல் வழக்கிழந்து போயிற்று. ஆனால், துளுமொழியிலே இச்சொல் இன்றும் வழங்கி வருகிறது. துளு மொழி, பிற்காலத்தில் ழகர எழுத்தை இழந்துவிட்டபடியால், ழகரத்துப் பதிலாக றகர எழுத்தை வழங்குகிறது. எனவே, தாழை என்னும் பழைய சொல் இப்போதைய துளு

மொழியில் **தா**றெ என்று கூறப்படுகிறது. தாறெ என்ருல் துளு மொழியில் (தாழை) தென்னை மரம் என்பது பொருள். இதனுல் துளு மொழி மிகப் பழைய சொற்களைக் கொண்டிருக்கிறது என்பது தெரிகிறதல்லவா?

**அறிவர்**

அறிவன், அறிவர் என்னுஞ் சொற்கள் தொல்காப்பியத்திலும் ஏனைய சங்க இலக்கியத்திலும் பயின்று வருகின்றன. அறிவன், அறிவர் என்னுஞ் சொல்லுக்கு உரை எழுதிய நச்சினுர்க்கினியர், இளம் பூரண அடிகள் முதலியோர் முனிவர் என்றும் இருடிகள் என்றும் பொருள் எழுதியுள்ளனர். ஆனுல் இவர்கள் கூறும் உரைபொருத்தமாகத் தோன்றவில்லை. அறிவர் என்னும் பெயருள்ளவர் வானசாத்திரத்தை யறிந்தவர் என்னும் பொருளே சரியானதென்று தோன்றுகிறது. [சங்க காலத்திலேயே (சங்க காலத்தின் இறுதியில்) அறிவன் என்னுஞ் சொல் மறைந்து கணிவன் என்னுஞ் சொல் வழங்கப்பட்டது.]

அறிவன் என்பது முனிவரையும் ரிஷிகளையுங் குறிக்கிறதா அல்லது மக்கள் சமூகத்தில் வானசாத்திரத்தை யறிந்தவரைக் குறிக்கிறதா என்னும் ஐயப்பாடு உண்டாகிறது. அந்த ஐயப்பாட்டைத் தீர்ப்பது போல துளுமொழிச் சொல் உதவி செய்கிறது. துளுவிலும் குடகு மொழியிலும் அறிவர் என்னுஞ் சொல் அருவர் என்று வழங்கப்படுகிறது. அருவர் என்பது அறிவர் என்பதன் திரிபு. அருவர் என்பவர் குடகு நாட்டில் திருமணம் முதலிய சடங்குகளைச் செய்யும் புரோகிதராக இன்

றும் இருக்கின்றனர். இவர்கள் பிராமணர் அல்லாதவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, வான நூலையறிந்து திருமணத்திற்குரிய நன்னாளைக் குறிக்கும் கணிவருக்கு அறிவர் என்னும் பெயர் இருந்ததென்பதும், அப்பெயர் மறைந்து போன பிறகும், குடகு மொழியில் அச்சொல் இன்றும் திருமணம் செய்யும் குருமாருக்குப் பெயராக வழங்கி வருகிறதென்பதும் தெரிகின்றன. இதனால், தொல்காப்பியம் முதலிய சங்க நூல்களில் கூறப்படுகிற அறிவர் என்பவர் அக்காலத்துத் தமிழ்ச் சமூகத்தில் வான நூல் பயின்றவரென்பது தெரிகின்றது.

## பூதம்

சங்க காலத்திலே பூதம் என்னும் தெய்வ வணக்கம் இருந்ததை அறிகிறோம், பதிற்றுப் பத்து, சிலப்பதிகாரம் முதலிய சங்க இலக்கியங்களில் பூதவணக்கம் கூறப்படுகிறது. அந்தப் 'பூதங்கள்' திருமால், சிவன் போன்ற உயர்ந்த தெய்வங்களைப் போன்ற நிலையில் இல்லாவிட்டாலும் இந்திரன், முருகன் போன்ற உயர்ந்த நிலையில் வைத்து வணங்கப்பட்டன. பிற்காலத்தில் பூதம் என்பதற்குக் கொடிய துர்த்தேவதை, சிறு தேவதை என்னும் பொருள் கற்பிக்கப்பட்டதுபோல, சங்க காலத்தில் 'பூதம்' என்னும் தெய்வம் இழிவான நிலையில் வைத்து எண்ணப்படவில்லை. பூதம் என்னும் தெய்வம் உயர்நிலையில் வைத்து அக்காலத்தில் கருதப்பட்ட படியால்தான் அக்காலத்து மக்களும் அப்பெயரைத் தங்கள் பெயராகக் கொண்டிருந்தார்கள்.

பூதபாண்டியன், பூதனார், சேத்தம் பூதனார்,

குன்றம் பூதனர், இளம் பூதனர், கரும்பிள்ளைப் பூதனர், காவன் முல்லைப் பூதனர், கோடை பாடிய பெரும் பூதனர், வெண் பூதனர், காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனர் நப்பூதனர் முதலிய புலவர்கள் அரசர்களின் பெயரைக் காணும்போது அக்காலத்தில் பூதம் என்னும் தெய்வம் உயர்ந்த நிலையில் வைத்துக் கருதப்பட்ட சிறந்த தெய்வமாக இருந்தது என்பது தெரிகின்றது. பிற்காலத்திலே **பூதத்தாழ்வார்** என்னும் வைணவ ஆழ்வார் ஒருவர் இருந்ததையும் அறிவோம், ஆனல் பிற்காலத்தில் பூதம் என்னுஞ் சொல் இழிந்த பொருளில் சிறு தெய்வம் துஷ்ட தெய்வம் என்று கருதப்பட்டது. நாற்றம் என்னுஞ் சொல், மணம் என்னும் சிறந்த பொருளில் வழங்கிப் பிற்காலத்தில் துர்நாற்றம் என்னும் இழிந்த பொருள் பெற்றதுபோல, பூதம் என்னும் சொல்லும் முற்காலத்தில் உயரிய பொருளில் வழங்கிப் பிறகு இழிந்த பொருள் பெற்றுவிட்டது.

ஆனல், துளுநாட்டில் அந்தப் பழைய பெயர் உள்ள கோயில்கள இன்றும் இருக்கின்றன. பூத கோட்ய (பூதகோட்டம்), பூதஸ்தானம் (ஸ்தானம்-இடம், ஸ்தலம்) என்னும் பெயருள்ள பூதக்கோவில்கள் இன்றும் துளுநாட்டில் உள்ளன. பூதசதுக்கம் என்றும் தமிழில் கூறப்பட்டவையே பூத கோட்ய என்றும் பூதஸ்தானம் என்றும் வழங்கப் படுகின்றன. ஆனல், இப்பூத வணக்கத்தில் பல வேறுபாடுகளும் மாற்றங்களும் காலப்போக்கில் ஏற்பட்டிருக்கக் கூடும். என்ருலும் பழைய பூதம் என்னும் பெயரைத் துளுநாட்டினர் இன்றும் விடாமல் வழங்கி வருவது கருதத் தக்கது.

இதுபோன்று பல பழந்தமிழ்ச் சொற்களின் திரிபுகளைத் துளுமொழியில் காணலாம். உப்பாடு, (உப்பில் அடப்பட்டது—ஊறுகாய்), நுடி (பேச்சு) நுடிகட்டு (குறிசொல்லுதல்), நின்னி (எதிரொலி) கோறி(கோழி), பிலிநாயி(புலிநாய்=கழுதைப் புலி) நாகு (பெண் எருமை), கேரி (கேரி=சேரி, சேரி-தெரு. உதாரணமாக துளுநாட்டுப் பாரகூரில் மூடு கேரி=கிழக்குச் சேரி=கிழக்குத் தெரு, கோட்டெ கேரி=கோட்டைத் தெரு, மணிகார கேரி முதலியன.) நீர்நாள் (ஒருமாதத்தின் பெயர்) கார்தெல் (ஒருமாதத்தின் பெயர்), பொங்தேல், புயிங்தேல், பேரார்தெ (மாதங்களின் பெயர்கள்) முதலிய சொற்கள் பழைய திராவிட மொழியின் தொன்மையைக் காட்டுகின்றன. விரிவஞ்சி இதனோடு நிறுத்துகிறேன்.

துளுமொழியில் பழைய இலக்கியம் இல்லாதது பற்றி அம்மொழியைப் புறக்கணிப்பது தவறுகும். பழைய திராவிடச் சொற்களை ஆராய்வதற்குத் துளு மொழி பெரிதும் பயன்படுகிறது. முக்கியமாகப் பழைய தமிழ்ச் சொற்களை ஆராய்வதற்குத் துளு மொழி மிக மிகப் பயன்படும் என்பதில் ஐயமில்லை. தமிழ் மொழியை நன்றாகக் கற்ற பேரறிஞர் துளு மொழியையும் பயின்று அதிலுள்ள பழைய திராவிடச் சொற்களை ஆராய வேண்டும். துளுமொழியிலுள்ள சொற்கள் சிதைந்தும் திரிந்தும் உருமாறியும் இருக்கும். அவற்றையெல்லாம் செம்மைப்படுத்தி பழந்தமிழ்ச் சொற்களுடன் ஒப்பிட்டு ஆராயவேண்டுவது தமிழரின் கடமையல்லவா ?


மஹாராஷ்டிரம்
துளுநாடு
(தாலுகா)
குந்தாபுரம்
குந்தாபுரம
உடுப்பி
உடுபபி
கார்க்கார
கார்க்காளா
மூடுபதிரி
மங்களூரு
மங்களூர்
உப்பினங்காடி
புத்தூரு
புத்தூரு
காசரகோடு
காசரகோடு
மைசூர்
குடகு
மலையாளம்
அரபிக்கடல்

படம்-3.

# 6. இணைப்பு

## I. சத்திய புத்திரநாடு

தேவனும் பிரியன் என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டிருந்த அசோக சக்கரவர்த்தி பாரத நாட்டைக் கி. மு. 275 —234 வரையில் அரசாண்டார். இவருடைய இராச்சியத்தில், தெற்கே இருந்த தமிழகம் அடங்கவில்லை என்பது இவருடைய சாசனங்களிலிருந்து தெரிகின்றது. அசோக சக்கரவர்த்தியுடைய இரண்டாவது, பதின் மூன்றுவது சாசனங்கள்.* இச்செய்தியைத் திட்டவட்டமாகக் கூறுகின்றன.

சோழபாண்டிய சத்திய புத்திர கேரளபுத்திர தம்பபாணி (இலங்கை) ஆகிய நாடுகள் அசோக சக்கரவர்த்தியின் ஆட்சிக்குட்பட்டவையல்ல என்பது இச்சாசனங்களினால் தெரிகின்றது. பிராகிருத மொழியில் பிராமி எழுத்தினால் எழுதப்பட்ட இந்தச் சாசனங்களின் வாசகம், "சோடா பாடா ஸதியபுதொ கேத புதோ ஆ தம்ப பம்ணீ" என்று எழுதப்பட்டிருக்கிறது. அதாவது சோழபாண்டிய சத்திய புத்திர கேரள புத்திர தம்பபாணி நாடுகள் என்பது இதன் பொருள். கேரளபுத்திர நாடு என்பது சேரநாட்டைக் குறிக்கிறது. சத்திய புத்திர நாடு என்பது துளுநாட்டைக் குறிக்கிறது.

---

* Rock Edicts II and XIII

சத்திய புத்திர நாடு என்று அசோக சக்கரவர்த்தியின் சாசனம் கூறுவது துளுநாடு என்று கருதப்பட்டாலும் வேறு சில ஆராய்ச்சிக்காரர்கள் வேறு கருத்தைத் தெரிவிக்கிறார்கள். அதிகமான் அரசர் ஆண்ட தகடூர் சத்தியபுத்திர நாடு என்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் தாலுகாவே சத்தியபுத்திரநாடு என்றும், சத்தியவிரத க்ஷேத்திரம் என்று பெயர் பெற்ற காஞ்சிபுரமே சத்தியபுத்திரநாடு என்றும் வெவ்வேறு கருத்தைத் தெரிவித்துள்ளனர். 'வாய்மொழிக் கோசர்' இருந்த துளுநாடே சத்தியபுத்திர நாடு என்பது இந்நூலாசிரியருடைய கருத்து.

இதுபற்றி எழுதப்பட்டுள்ள கருத்துக்களை வாசகரின் ஆராய்ச்சிக்காகக் கீழே தருகிறேன்.

Asoka. P. 161. V. A. Smith. 3rd Edition.

Ancient Karnataka. Vol. I. Tuluva. P. 43. B. A. Saletore

Cera Kings of the Sangam Period. PP. 18-19.
K. G. Sesha Aiyer. 1937.

Satyaputra. Govinda Pai. PP. 33-47. Krishnaswami Iyengar Comemoration Volume.

History of the Tamils. P. 327. P. T. Srinivasa Iyengar. 1929.

The Early History of India. PP. 171, 194. (4th Edition) Vinicent A. Smith. 1957.

The identification of Satiyaputra. B. A. Saletore. PP. 667-674. Indian Culture. Vol. I

The Chronology of the Early Tamils. (PP. (168-169) K. N. Soviaraja Pillai. 1932.

Who are Satyaputras? V. R. Ramachandra Diushitar. The Indian Culture. Vol. I. Pt. III

Indian Review. June. 1909.

Journal of the Royal Asiatic Society (P. 54.) 1918.

Indian Antiquary. (P. 24) Vol. X VIII.

Journal of the Royal Asiatic Society. Bombay Branch. (New Series.) P. 398. Vol. XX.

## II. பரசுராமன் கதை

துளுநாட்டிலும் சேர (கேரள) நாட்டிலும் பழைய புராணக் கதையொன்று வழங்கி வருகிறது. ஒரு காலத்தில் சேரநாடும் துளுநாடும் கடலாக இருந்த தென்றும் பரசுராம முனிவன் சஃயாத்திரி (மேற்குத் தொடர்ச்சி மலை) மலைமேல் இருந்து தன் கையிலிருந்த கோடாலியைச் சுழற்றி எறிந்தான் என்றும் அந்தக் கோடாலி சென்ற இடம் நிலமாக மாறிப் போயிற்று என்றும் அவ்வாறு புதிதாக உண்டான நிலம் துளுநாடும் கேரள நாடும் என்றும், அந்நிலங்களில் பரசுராமன் பிராமணரைக் குடியேற்றினன் என்றும் செவி வழிச் செய்தி கூறுகிறது. தமிழ் நாட்டில் பிற்காலத்திலே அகஸ்திய முனிவருக்கு முதன்மை கொடுக்கப்பட்டது போலத் துளுநாட்டிலும் கேரள நாட்டிலும் பரசுராமனுக்கு முதலிடங் கொடுக்கப் பட்டது.

சேர நாடாகிய கேரள நாடும் துளுநாடாகிய கொங்கண நாடும் பரசுராமனுல் உண்டாக்கப்பட்டன என்னும் கதையை வடமொழிப் புராணங்களும் கேரளோற்பத்தி என்னும் பிற்காலத்து மலை

யாள நூலும் துளுநாட்டுச் செவிவழிச் செய்திகளும் கூறுகின்றன. இச்செய்தியைச் சங்க நூல்கள் கூறவில்லை. ஆனால், பரசுராமன் துளுநாட்டுச் செல்லூரில் அரியதோர் யாகம் செய்தான் என்றும் அந்த நினைவுக்குறியாக அவ்வூரில் ஒரு தூண் அமைக்கப்பட்டிருந்தது என்றும் ஒரு சங்கச் செய்யுள் கூறுகிறது. ஆனால், செல்லூரில் யாகத் தூண் இருந்த செய்தியை வடமொழிப் புராணங்களும் துளுநாட்டுக் கேரள நாட்டுச் செவிவழிச் செய்திகளும் கூறவில்லை. சங்கச் செய்யுள் மட்டும் கூறுகிறது.

மருதன் இளநாகனார் என்னும் புலவர் இச் செய்தியைத் தமது செய்யுளில் கூறியுள்ளதை முன்னமே கூறினோம். மழுவாள் நெடியோன் (பரசுராமன்) செல்லூரில் அரிதாக முயன்று ஒரு வேள்வி செய்தான் என்றும் அதன் அறிகுறியாக அந்த இடத்தில் நெடுந்தூண் ஒன்று(யாகத்தூண்) நிறுத்தப்பட்டிருந்த தென்றும் அத்தூணின் அடிப்புறத்தில் வடக்கயிறு சுற்றிக் கட்டப்பட்டிருந்த தென்றும் இப்புலவர் கூறியுள்ளார். அச்செய்யுளின் வாசகம் இது.

"கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க்
கடாஅ யானைக் குழூஉச்சமந் ததைய
மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன்று அரிதினின் முடித்த வேள்விக்
கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண்."*

இந்தச் செல்லூர் கடற்கரைக்கு அருகில் இருந்தது என்றும் அவ்வூருக்குக் கிழக்கில் கோச

* அகநானூறு. 220 : 3—8

ருடைய நியமம் இருந்தது என்றும் இப்புலவரே இன்னொரு செய்யுளில் கூறுகிறார்.

'அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கடல் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியமம்.'*

துளுநாட்டுச் செல்லூரில் பரசுராமன் செய்த வேள்விக்கு நினைவுக்குறியாக ஒரு யாகத்தூண் அமைக்கப் பட்டிருந்ததென்றும், அச்செல்லூர் கடற்கரைக்கு அருகில் இருந்ததென்றும் மருதன் இளநாகனார் கூறுகிற இச்செய்தி கேரள நாட்டாரும் துளுநாட்டாரும் அறியாத ஓர் புதிய அரிய செய்தியாகும்.

இந்தச் செல்லூர் மேற்குக் கடற்கரையோரத்தில் துளுநாட்டில் இருந்தது. பின்னத்தூர் திரு. அ. நாராயணசாமி ஐயர் அவர்கள், இச் செல்லூர், கிழக்குக் கடற்கரை யோரத்தில் சோழ நாட்டில் இருந்ததென்று கூறுகிறார். ஐயர் அவர்கள் தாம் உரை எழுதி அச்சிட்ட நற்றிணைப் பதிப்பிலே பாடினோர் வரலாற்றிலே, 'மதுரை மருதன் இளநாகனார்' என்னுந் தலைப்பிலே இவ்வாறு எழுதுகிறார்.

"திருவழுந்தூர்த் திதியனுக்குரிய செல்லூரில் பரசுராம முனி வேள்வி செய்தது கூறுவதுடன் தழும்பனது ஊணூரும் சாயாவனமும் (திருச்சாய்க்காடு) இவராற் கூறப்பட்டுள்ளன."

இவ்வாறு இவர் கூறுவது தவறு. திதியன் என்பவனுக்குச் செல்லூர் உரியதென்று சங்க

* அகநானூறு. 90 : 9—12

இலக்கியத்தில் எங்குமே கூறப்படவில்லை. ஐயரவர்கள், சோழநாட்டிலிருந்த திதியனுக்குச் செல்லூர் உரிய தென்று கூறுவது புதுமையாக இருக்கிறது. எனவே இவர் செல்லூர் சோழநாட்டிலிருந்ததாகக் கருதுவது தவறுனது. இந்தச் செல்லூர், துளுநாட்டிலே மேற்குக் கடற்கரைப் பக்கமாக இருந்ததும் கோசர் என்னும் இனத்தார் வாழ்ந்திருந்ததுமான ஊர்.

கந்த புராணம் சஃயாத்திரி காண்டத்திலும் வேறு வடமொழிப் புராணங்களிலும் மேற்குக் கடற்கரையுடன் பரசுராமனைத் தொடர்பு படுத்திக் கூறியுள்ளன. துளுநாட்டுச் சேரநாட்டுச் செவி வழிச் செய்திகளும் பரசுராமனை மேற்குக் கடற்கரை நாடுகளுடன் தொடர்புப் படுத்திக் கூறுகின்றன. எனவே, மருதன் இளநாக நாகனுர் கூறுகிற பரசுராமன் யாகஞ் செய்த செல்லூர் துளுநாட்டுச் செல்லூரே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கேரளநாட்டில் முப்பத்திரண்டு கிராமங்களையும் துளுநாட்டில் முப்பத்திரண்டுகிராமங்களையும் பரசுராமன் உண்டாக்கி அக்கிராமங்களைப் பிராமணருக்குத் தானஞ்செய்தான் என்னும் கதை, பிற்காலத்தில் நம்பூதிரிப் பிராமணர் செல்வாக்கும் ஆதிக்கமும் பெற்ற கி. பி. 14ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு ஏற்பட்ட கதை என்று தோன்றுகிறது. பரசுராமனைப் பற்றிய இக்கதைகள் பிற்காலத்தில் தோன்றியவை.

சங்க காலத்திலே பரசுராமனைப் பற்றி வழங்கப்பட்ட கதை, அவன் துளுநாட்டுச் செல்லூரில் செய்த யாகத்தின் அறிகுறியாகத் தூண் ஒன்று

நிறுத்தப்பட்டிருந்தது என்பது ஒன்றே. அக் காலத்துச் சேரநாடாகிய கேரளநாட்டில் பரசுராமன் கதை வழங்கப்படவில்லை. பரசுராமன் கோடரியைக் கடலில் வீசி எறிந்து கேரளநாட்டையும் துளுநாட்டையும் உண்டாக்கினான் என்னும் கதையும் அந்நாடுகளில் கிராமங்களை உண்டாக்கிப் பிராமணருக்குத் தானஞ் செய்தான் என்னும் கதையும் பிற்காலத்தில் கட்டப்பட்ட கதைகளே.

செல்லூர் **செல்லி** என்றும் கூறப்பட்டது.

'மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்'*

என்று கூறுவது காண்க.

## III. மோகூரும் மோரியரும்

சங்கச் செய்யுட்கள் சிலவற்றிலே, கோசர் என்னும் கூட்டத்தாருக்கு மோகூர் பணியாதபடியினாலே (அடங்காத படியினாலே) அவர்களைப் பணியச் செய்வதற்குக் கோசர் மோரியருடைய உதவியை நாடினார்கள் என்றும், அவர்களுக்கு உதவி செய்ய விரும்பிய மோரியர், வடுகச் சேனையை முதலில் அனுப்பி அச் சேனையைப் பின் தொடர்ந்து தங்கள் தேர்களைச் செலுத்திக் கொண்டு போனார்கள் என்றும் போகும் வழியில் மலைகள் குறுக்கிட்டபடியால், மலைமேல் தேர்கள் போவதற்காக மலையிலே வழிகளை உண்டாக்கிக் கொண்டு போனார்கள் என்றும் சரித்திரச் செய்திகள் கூறப்படுகின்றன.†

* அகம். 316:12.

† அகம் 69, 251, 281, புறம். 175.

அகம். 69ஆம் செய்யுளில் இச் செய்தி கூறப்படுகிறது. காதலன் ஒருவன் தன் காதலியை விட்டுப் பிரிந்து பொருள் சம்பாதிப்பதற்காக அயல்நாடு சென்ருன். சென்றவன், தான் திரும்பி வருவதாகச் சொன்ன காலம் வந்தும் அவன் திரும்பி வராததைக் குறித்து அவன் மனைவி மனக்கவலையடைந்தாள். அப்போது அவளுடைய தோழி, அவளுக்கு ஆறுதல் கூறுகிருள். மோரியருடைய தேர்ச் சக்கரங்கள் தடையில்லாமல் போவதற்காகச் செப்பனிட்டு அமைத்த மலைப் பாதையைக் கடந்து அயலூருக்குச் சென்ற தலைவர் அங்கே நெடுநாள் தங்கமாட்டார் என்று தோழி கூறுகிருள். இந்த வாசகம் இது.

> 'விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
> பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
> அறையிறந்து அகன்றனர் ஆயினும் எனைய தூஉம்
> நீடலர் வாழி தோழி.'*

அகநானூறு 151-ஆம் செய்யுளும் இச் செய்தியையே கூறுகிறது. தலைவன் ஒருவன் தன் மனைவியைத் தனியே விட்டு அயல்நாட்டுக்குப் பொருள் சம்பாதிக்கச் சென்ருன். அவன் திரும்பி வருவதாகச் சொன்ன காலம் வந்தும் அவன் திரும்பி வராதபடியால் அவன் மனைவி கவலையடைந்தாள். அப்போது அவளுடைய தோழி அவளுக்குத் தேறுதல் கூறினுள். 'நந்த அரசர்கள் சேர்த்து வைத்திருந்த பெருஞ்செல்வம் கிடைப்பதாக இருந்தாலும் அவர் அதிக நாள் வெளியே தங்கமாட்டார். கோசர் தம் பகைவ

* அகம். 69 : 10—13

ருடைய ஊரை வென்ற காலத்தில் அவர்களுக்குப் பணியாத மோகூரைப் பணியச் செய்வதற்காக அவர்களுக்கு உதவியாக வந்த மோரியர், தங்கள் தேர்கள் போவதற்காக அமைத்த மலைப்பாதையைக் கடந்து வெளிநாட்டுக்குச் சென்ற அவர் (தலைவர்) அதிக காலம் தங்கமாட்டார், விரைவில் வந்து விடுவார்' என்று தோழி கூறினாள். அந்த வாசகம் இது :

'நந்தன் வெறுக்கை எய்திலும் மற்றவண்
தங்கலர். வாழி தோழி ! வெல்கொடித்
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூதாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவா யும்பர்
.................................
நிரம்பா நீளிடைப் போகி
அரம்போழ் அவ்வளை நிலைநெகிழ்த் தோரே'*

அகம். 281ஆம் செய்யுளும் இதே செய்தியைக் கூறுகிறது. அயல்நாடு சென்ற தலைவன் நெடுநாள் சென்றும் திரும்பி வராததற்கு மனக்கவலை கொண்ட மனைவியை அவளுடைய தோழி தேற்றுகிறாள். வடுகச் சேனை முன்வர அதனைத் தொடர்ந்து பின்னே வந்த மோரியரின் தேர்ப் படையின் தேர்ச்சக்கரங்கள் தடையில்லாமல் செல்வதற்காக மலைமேல் அமைத்த வழியைக்

* அகம். 251 : 5—20

கடந்து அயல் நாடு சென்ற தலைவர் அதிக நாள் தங்கமாட்டார். விரைவில் வந்துவிடுவார் நீ வருந் தாதே' என்று கூறுகிறாள்.

'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறை யிறந்தவரோ சென்றனர்'*

புறநானூறு 175ஆம் செய்யுளும் இச்செய்தி யைக் கூறுகிறது. கள்ளில் ஆத்திரையனார் என் னும் புலவர் தன்னை யாதரித்த ஆதனுங்கன் என்ப வனை ஒரு போதும் மறக்கமாட்டேன் என்று இச் செய்யுளில் கூறுகிறார். "மோரியர் தம்முடைய தேர் உருளை தடையில்லாமல் செல்வதற்காக மலைப் பாறைகளை வெட்டி அமைத்த பாதையில் சூரியன் இயங்குவது போன்ற உன் அறத்துறையாகிய நல்வழியில் நடக்கும் உன்னை மறக்கமாட்டேன்" என்று கூறுகிறார். இதன் வாசகம் இது:

"விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன"†

(குறிப்பு: இப்புறப்பாட்டின் பழைய உரையாசி ரியர் மோரியர் என்பதை 'ஓரியர்' என்று தவறாகப் பிரித்துப் பொருள் கூறுகிறார். அவர் கூறுவது தவறான உரை என விடுக)

இந்த நான்கு சங்கச் செய்யுட்களிலே மோரி யர் தென்னாட்டுக்கு வந்தனர் என்பதும் அவர்

* அகம். 281 : 8—12

† புறம். 175 : 6—9

களின் தேர்கள் தடையில்லாமல் வருவதற்கு இடையிலிருந்த மலைப்பாறைகள் குறைத்து செப்பனிடப்பட்டன என்பதும் இச்செய்யுள்களில் கூறப்படுகின்றன. மோரியர் என்பவர் மௌரியராகிய அரசகுலத்தார். மோரிய (மௌரிய) அரசர் பாரத (இந்திய) நாட்டின் பேரரசராக இருந்து அரசாண்டவர்கள். அவர்கள் ஏறத்தாழ கி. மு. 4ஆம் நூற்றுண்டு முதல் கி. மு. 2ஆம் நூற்றுண்டு வரையில் அரசாண்டனர். (சந்திரகுப்த மௌரியன் கி. மு. 322-இல் மகத இராச்சியத்தை ஏற்படுத்தினுன். இவன் வம்சத்தின் கடைசி அரசனுன பிருகத்ரதன் கி. மு. 185-ல் தன் சேனைத் தலைவனுன புஷ்யமித்திரனுல் கொல்லப்பட்டு இறந்தான். பிறகு சுங்க இராஜ பரம்பரை நிறுவப்பட்டது,)

பேர்போன மோரிய அரசர் சங்கச் செய்யுளில் கூறப்படுகிறது பற்றி சரித்திர ஆராய்ச்சிக்காரரும் மற்ற அறிஞரும் ஆராயத் தொடங்கினுர்கள். மோரிய அரசர் மோகூர்மேல் படையெடுத்து வந்ததை இச்செய்யுள்கள் கூறுகிறபடியால் இத்தொடர்புபற்றி அவர்கள் ஆராய்ந்தார்கள். (பாண்டியனுடைய சேனைத் தலைவனுகிய பழையன் என்பவன் மதுரைக்கு அருகில் மோகூர் என்னும் ஊரை யரசாண்டபோது, சேரன் செங்குட்டுவன் மோகூரின்மேல் படையெடுத்துப் போய் மோகூர்ப் பழையனை வென்ற செய்தி பதிற்றுப் பத்து ஐந்தாம் பத்திலும் சிலப்பதிகாரத்திலும் கூறப்படுகின்றது.)

மோரியர்-மோகூர் ஆராய்ச்சியைப் பல அறிஞர்கள் எழுதியுள்ளனர். அவர்கள் பல்வேறு கருத்

துக்களை வெளியிட்டுள்ளனர். அவைகளைப் பற்றி யெல்லாம் இங்கு ஆராய்ந்தால் இடம் விரியும். ஆனால், அவ்வறிஞர்களின் கட்டுரைகளையும் நூல்களையும் இங்குக் குறிப்பிடுகிறேன்.


1. Mauryan Invasion of South India. Ch. II. The beginnings of South Indian History. S. Krishnaswamy Aiyangar. 1918.
2. Bombay Gazetteer. (1896.) Vol. I Part II PP. 202-4.
3. The Mauryan Invasion of Tamilakam. Somasundara Desikar. PP. 155-166. quartely Journal of the Mythic Society. Vol. XVIII.
4. The Mauryan Invasion of the Tamil Land. K. A. Nilakantam. P. 304. Quarterly Journal of the Mythic Society. Vol. XVI.
5. History of the Tamils. P. T. Srinivasa Iyangar. (1929) PP. 520-526.
6. The Mauryan invasion of the Tamilakam, Somasundra Desikar PP. 135-145. Indian Historical Quarterly Vol. IV.
7. The Mauryan invasion Polity. PP. 58-61. V. R. Ramachandra Dikshikar.
8. Kosar and Vamba Moriyar. Quarterly Journal of the Mythic Society. 1924.
9. The Moriyar of the Sangam Works. K. G. Sankar. PP. 664-667. J.R.A.S. 1924.
10. Kosar of the Tamil Literature and the Satyaputra of Asoka Edicts. PP. 609-613. J.R.A S. 1923.
11. Satyaputra of Asoka's Edict No. 2. PP. 84-86. J.R.A.S. 1922.
12. Early History of India. P. 157, Vincent A. Smith. (4th Edition. 1957)
13. The Cambridge History of India. Vol. I. P. 596.

14. Maurya invasion of South India. PP. 501-503.
A Comprehensive History of India. Vol. II. Edited by K. A. Nilakanta Sastri. 1957

15. தமிழகமும் மோரியர் படையெடுப்பும். டாக்டர் கே. கே. பிள்ளை. பக்கம். 359-363. பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளி விழா மலர். 1961.

பண்டித மு. இராகவையங்கார் தாம் 1915ஆம் ஆண்டில் எழுதிய 'சேரன் செங்குட்டுவன்' என்னும் நூலில் இதுபற்றிக் கூறியுள்ளார். இச் செய்யுளில் கூறப்படுகிற மோரியரை ஐயங்கார், சமுத்திர குப்தன் என்று கூறுகிறார். இது மிகவும் பிழைபட்ட செய்தியாகையால் இவர் கூற்றை அறிஞர் ஏற்றுக்கொள்ள வில்லை.

பி. தி. ஸ்ரீநிவாச அய்யங்கார், 1929-இல் தாம் எழுதிய 'தமிழர் சரித்திரம்' என்னும் நூலில் இதுபற்றி ஆராய்கிறார்.* இவர் ஆராய்ச்சியும் உண்மை நாடுவதாக இல்லை.

மேற்கண்ட மூன்று சங்கச் செய்யுட்கள் மோரியர் படையெடுத்து வந்த செய்தியைக் கூறுகின்றன. ஆனால், யார்மேல் படையெடுத்து வந்தனர் என்பதைக் கூறவில்லை. அகம். 251 ஆம் செய்யுள் மட்டும் மோரியர் மோகூர் மேல் படையெடுத்து வந்தனர் என்பதைக் கூறுகின்றது.

மோகூர் என்னும் ஊர் பாண்டி நாட்டில் இருந்தது என்பதையும் அவ்வூரையாண்ட பழையன் என்னும் அரசனைச் சங்க காலத்திலிருந்த சேரன் செங்

* P. 520-526 History of the Tamils P. T. Srinivasa Ayengar 1929.

குட்டுவன் வென்றான் என்றும் பதிற்றுப்பத்து 5ஆம் பத்தினாலும் சிலப்பதிகாரத்திலிருந்தும் அறிகிறோம். ஆனால், மோரியர் இந்த மோகூரின்மேல் படையெடுத்து வந்தனரா? மோரியருக்கும் மோகூருக்கும் என்ன பகை? மோகூர் மன்னன் ஒரு சிற்றரசன்தானே. நெடுந்தொலைவிலிருந்த மோரியருக்கும் தென் கோடியிலிருந்த மோகூருக்கும் என்ன பகை?

இதில் ஏதோ தவறு இருக்கும்போலத்தோன்றுகின்றது. **மோகூர்** என்னும் சொல்லில் பிழை இருக்கிறது போலத் தோன்றுகிறது. **மோகர்** என்று இருக்கவேண்டிய சொல் மோகூர் என்று தவறாக எழுதப்பட்டது என்று தோன்றுகிறது. இது பிற்காலத்தில் ஏடெழுதுவோரால் நிகழ்ந்த பிழை என்று தோன்றுகிறது. 'மோகர் பணியாமையின்' என்றிருக்க வேண்டிய வாசகம் 'மோகூர் பணியாமையின்' என்று பிற்காலத்தில் தவறாக எழுதப்பட்டும் படிக்கப்பட்டும் வந்தது என்று தோன்றுகிறது.

மோகர் என்பவர் கொங்கண (துளு) நாட்டின் கடற்கரைப் பக்கத்தில் இருந்த போர்ப்பிரியமுள்ள மீன்பிடிக்குந் தொழில் செய்த மக்கள். அவர்களுடைய சந்ததியார் துளுநாட்டுக் கடற்கரைப் பக்கத்தில் இன்றும் மோகர் என்னும் பெயருடன் இருக்கிறார்கள். அந்த மோகர், போர் விருப்பமும் அஞ்சாமையுமுடைய வராக இருந்தபடியால் கோசருக்கு அடங்காமலிருந்தனர். அவர்கள் பணிந்து போகாதபடியால் அவர்களைப் பணியச் செய்வதற்காகக் கோசர் மோரியருடைய உதவியை வேண்டி

னார்கள். ஆகவே மோகரை அடக்குவதற்காக மோரியர் படை யெடுத்து வந்தார்கள்.

துளுநாட்டுக் கடற்கரை யோரத்தில் வசித்திருந்த மோகர்மேல் போர் செய்ய வந்த மோரியர், துளுநாட்டுக்கு அப்பால் இருந்து வந்தபடியால், அவர்கள் இடையில் இருந்த உயரமான மேற்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து துளுநாட்டுக்குள் செல்ல வேண்டியவராயினர். மலையிலே கணவாய்கள் இல்லாதபடியாலும் கடல்மட்டத்துக்குமேல் 3000 அடி முதல் 6000 அடி வரையில் உயர்ந்திருக்கிற மேற்குத்தொடர்ச்சி மலைகளைக் கடக்க வேண்டியிருந்தபடியாலும் மோரியர் மலைமேல் ஏறிச் செல்வதைத்தவிர வேறு வழியில்லை. அக்காலத்தில், மனிதர் நடந்து செல்லக்கூடிய ஒற்றையடிப்பாதை (காலடிப் பாதை) தவிர வண்டிகள் செல்வதற்கு அகலமாக பாதைகள் மலைமேல் இல்லை. மோரியர் தேர்ப்படையுடன் வந்தபடியால், மலைவழியில் உள்ள ஒற்றையடிப்பாதைகள் அவர்களின் தேர்கள் செல்வதற்குப் பயன்படவில்லை. ஆகவே, வண்டிகளும் தேர்களும் செல்வதற்குரிய அகலமான பாதையை அமைக்க வேண்டி யிருந்தது.

மோகூர் மேல் படையெடுத்துச் சென்ற மோரியர், தங்கள் தேர்ப் படையைச் செலுத்திக்கொண்டு போவதற்கு, மலைமேல் சென்ற காலடிப்பாதைகளை அகலமாக அமைத்துத் தெருவுண்டாக்கினார்கள். அவருக்கு முன்னே சென்ற காலாட் படையினர், குறுக்கே கிடந்த பாறைகளையும் கற்களையும் உடைத்துச் சமப்படுத்தி அகலமான பாதைகளையுண்டாக்கிக்கொண்டே போனார்கள். காலாட்

படையினர் அமைத்த அகலமான பாதையைப் பின்பற்றி மோரியரின் தேர்ப்படை சென்றது. முன்னே வழி அமைத்துச் சென்ற காலாட்படையினர் வடுகர். இதைத்தான் 'முரண்மிகு வடுகர் முன் உற மோரியர்' தேர்களின் சக்கரம் பின்னால் உருண்டு சென்றது என்று கூறப்பட்டது.

(இக்காலத்திலுங்கூட துளுநாட்டின் கிழக்கிலுள்ள மைசூர் நாட்டிலிருந்து துளுநாட்டுக்குப் போகவேண்டுமானால். மேற்குத் தொடர்ச்சி மலைமேல் உள்ள (Ghat)'காட்சாலை'கள் வழியாகத்தான் போகவேண்டும். இந்த மலைச்சாலைகள் அகலமாகவும் நன்றாகவும் செம்மையாகவும் இருக்கின்றன, இச்சாலைகள் அண்மைக் காலத்தில் இருந்த ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டவை. ஆனால், கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் இந்த மலைகளின்மேல் காலடிப்பாதையைத் தவிர வேறு நல்ல சாலைகள் இல்லை. மோரியன் தேர்ப்படை செல்வதற்காக அக்காலத்தில் முதல் முதலாக அகலமான சாலை மலைமேல் உண்டாக்கப்பட்டது.)

சில ஆராய்ச்சிக்காரர்கள், மோரியர் மலையைக் குடைந்து வழியுண்டாக்கிச் சென்றார்கள் என்றும், வேறு சிலர் மலையை வெட்டி வழியுண்டாக்கிக் கொண்டு போனார்கள் என்றும் எழுதியுள்ளனர். இது தவறு எனத் தெரிகிறது. முன்னமே காலடிப் பாதையாக இருந்த அறை (மலை) வழியின் இடையே இருந்த பாறைகள் கற்கள் முதலியவை அப்புறப்படுத்தியும் செம்மைப்படுத்தியும் தேர்ப்படை போவதற்கு ஏற்றபடி அகலமான வழியை

யுண்டாக்கிக்கொண்டு மோரியப்படை துளு நாட்டுக் கடற்கரைப் பக்கத்திலிருந்த மோகர்மேல் போருக்குச் சென்றது என்பதே நாம் இங்கே கூறு கிற செய்தியாகும். இதுவே பொருத்தமானதாகும். எனவே செய்யுளில் இப்போதுள்ள மோகூர் என் னும் பாடம் பிழையானதென்றும் அது மோகர் என்றிருக்கவேண்டும் என்றும் கொள்ளத்தகும். ஆகவே,

'தெம்முனை சிதைத்த ஞான்றை மோகர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழுதானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவாய்'

என்று மோகூர் என்பதை மோகர் என அமைத்துக் கொள்வது சரியெனத் தோன்றுகின்றது.

துளுநாட்டு மோகர்மேல் வெளிநாட்டார் செல் வதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், பாண்டி நாட்டு மோகூர் மேல் செல்வதற்கு மலை களின்மேல் வழியுண் டாக்காமலே செல்ல வழிகள் இருந்தன. எனவே மோரியர் படையெடுத்துச் சென்றது மோகூர் மேலன்று என்பதும் மோகர் மேல் சென்றனர் என்பதும் தெளிவாகின்றது. இதைத்தான் மேலே காட்டிய சங்கச் செய்யுட்கள் கூறுகின்றன.

மோகர்மேல் படையெடுத்துச் சென்ற மோரி யர் என்பவர் யார்? அவர்கள் மகத இராச்சியத்தை யரசாண்ட மோரியர் (மௌரியர்) அல்லர் என்பது வெளிப்படை. மோரிய சக்கரவர்த்திகளின் ஆட்சி

கி. மு. 2-ஆம் நூற்றாண்டிலேயே மறைந்து போயிற்று என்று முன்னமே கூறினோம். இச்சங்கச் செய்யுட்கள் இயற்றப்பட்டகாலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு. ஆகவே, இச்சங்கச் செய்யுட்கள் பாடப்பட்ட காலத்தில் (ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலத்துக்கு முன்பு) இந்த வம்ப மோரியரின் துளுநாட்டுப் படையெடுப்பு நிகழ்ந்திருக்க வேண்டும். அப்படியானால், இந்த வம்பமோரியர் கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்தவராதல்வேண்டும். இவர் யார்?

மௌரிய இராச்சியம் மேற்குக் கடற்கரை வரையில் பரவியிருந்தது. மௌரிய அரசரின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர்களின் கீழ் ஆங்காங்கே இராச்சியப் பகுதிகளை யரசாண்டிருந்த சிற்றரசர் அவ்வப்பகுதிகளின் அரசராகச் சுதந்தரம் பெற்று அரசாண்டார்கள். அவர்களில் ஒரு சாரார், இந்தியாவின் மேற்குப் பக்கத்தில் நிலைத்து நெடுங்காலம் மோரியர் என்னும் பெயருடன் இருந்தனர். அவர்களே 'வம்ப மோரியர்' ஆக இருக்கக்கூடும். அந்த வம்பமோரியர் கி. பி. முதல் நூற்றாண்டில் துளுநாட்டு மோகர் மேல் படையெடுத்து வந்திருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. இந்த மோரியர் படையெடுப்பின் முழுவரலாறு தெரியவில்லை.

இந்த வம்பமோரியரின் சந்ததியார் பிற்காலத்திலுங்கூட (கி. பி. 6 ஆம் நூற்றாண்டில்) சாளுக்கிய அரசர் காலத்தில் இந்தியாவின் மேற்குப் பக்கத்தில் இருந்து அரசாண்டு வந்தனர் என்பது தெரிகின்றது.

மௌரிய ஆட்சிக் காலத்தில், அவர்களின் இராச்சியத்தின் தெற்குப் பகுதியை யரசாண்ட இராசப் பிரதிநிதி சுவர்ணகிரி என்னும் நகரத்தில் இருந்து அரசாண்டார் என்று தெரிகின்றது. சுவர்ணகிரி என்பது, இப்போதுள்ள ஆந்திர தேசத்தில் ராய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள மாங்கி என்னும் ஊர். இங்கிருந்த மோரிய இராசப் பிரதிநிதிகளின் சந்ததியார் பிற்காலத்தில் மோரியர் என்னும் பெயருடன் இருந்தார்கள் போலும். இவர்களைத்தான் இச்சங்கச் செய்யுட்கள் வம்பமோரியர் என்று கூறுகின்றன போலும்.

## IV. ஆய் எயினன்

சேரர் சார்பாக அவர்களின் சேனைத் தலைவனை ஆய் எயினன் நன்னனுடன் போர் செய்தான் என்று இந்நூலில் கூறினோம். அவனைப் பற்றிய செய்தியை இங்குக் கூறுவோம்.

இவன் வெளியம் என்னும் ஊரையாண்ட சிற்றரசன். ஆகவே இவன் 'வெளியன் வேண்மான் ஆய் எயினன்'* என்று கூறப்படுகிறான். வெளியம் என்பது சேரநாட்டில் இருந்த ஊர் என்பதை 'வானவரம்பன் வெளியம்'† என்பதனால் அறிகிறோம். (வானவரம்பன்-சேர அரசன்) வெளியன் வேண்மான் ஆய் எயினன் சேர அரசர்களின் சேனைத் தலைவன் என்று தெரிகிறான். ஆய் எயினனுக்கு நல்லினி என்னும் பெயருள்ள ஒரு மகள் இருந்தாள். அவளை உதியஞ் சேரல் மணஞ்

* அகம். 208 : 5.
† அகம். 359 : 5.

செய்திருந்தான். இவர்களுக்குப் பிறந்த மகன் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன். இதனை,

'மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய் மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மான் நல்லினி ஈன்றமகன்'

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்று, பதிற்றுப் பத்து இரண்டாம் பத்துப் பதிகத்தினால் அறிகிறோம்.

எனவே, ஆய் எயினனின் மகளாகிய நல்லினி, சேரன் செங்குட்டுவனுக்கும் இளங்கோவடிகளுக்கும் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலுக்கும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்கும் பாட்டி என்று தெரிகிறது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன் ஆய் எயினன்.

அக்காலத்தில், துளு (கொங்கண) நாட்டையரசாண்ட நன்னன் என்பவன், வடகொங்கு நாட்டைச் சேர்ந்த புன்னாடு என்னும் ஊரைக் கைப்பற்ற முயற்சி செய்தான். அது, சேர அரசர் தென் கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டிருந்த காலம். ஆகவே கொங்காணத்து நன்னன் புன்னாட்டைக் கைப்பற்றிக் கொள்வது சேரர்களுக்கு ஆபத்தாக இருந்தது. அன்றியும் அக்காலத்தில் புன்னாடு நீலக்கல்லுக்குப் பேர் பெற்றிருந்தது. புன்னாட்டில் நீலக்கல் சுரங்கங்கள் இருந்தன. அங்குக் கிடைத்த நீலக்கற்களை யவனர், ரோமர் முதலிய மேல் நாட்டவர் வாங்கிக்கொண்டு போனார்கள். ஆகவே, புன்னாடு துளுநாட்டு நன்னன் ஆட்சியின் கீழ்ப்போவதைச் சேர அரசன் விரும்பவில்லை. ஆகவே சேர அரசன் புன்னாட்டின் சார்பாக நன்னனுடன் போர் தொடுத்தான்

சேர அரசனின் சேனைத் தலைவனான ஆய் எயினன் புன்னாட்டின் சார்பாக நன்னனுடன் போர் தொடுத்தான்.

சேர அரசனின் சேனைத் தலைவனான ஆய் எயினன் புன்னாட்டின் சார்பாகத் துளுநாட்டின் மேல் படையெடுத்துச் சென்றான். துளுநாட்டுப் பாழி என்னும் இடத்தில் நன்னனுடைய சேனைத்தலைவனான மிஞிலி என்பவன் அவனை எதிர்த்துப் போர் செய்தான். இச்செய்திகளைப் பரணர் என்னும் புலவர் கூறுகிறார். இதனை,

'பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகில் பாழி யாங்கண்
அஞ்ச லென்ற ஆஅய் எயினன்
இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தனன் சொல்லியது அமையாது'*

என்றும்,

'ஒன்னார்
ஓம்பரண் கடந்த வீங்கு பெருந்தானை
அடுபோர் மிஞிலி செருவேல் கடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப
ஆஅய் எயினன் வீழ்ந்தென' †

என்றும்,

'கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டென' ‡

என்றும் பரணர் கூறுகிறார்.

ஆய் எயினன் இறந்த பிறகு அவனுடைய உடம்பை அவனுடைய மனைவியரிடம் கொடுக்கா

---

* அகம். 396 2-6. † அகம். 181: 3-7

‡ அகம். 148 :7-8.

மல் இருந்தான் நன்னன். அதனுல் அவர்கள் பூசல் உண்டாக்கினுர்கள். அப்போது அகுதை என்னும் சிற்றரசன் பூசலை நீக்கி அவன் உடம்பை அவர்களுக்குக் கொடுத்தான்.

> 'வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
> அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
> இழையணி யானை இயல்தேர் மிஞிலியோடு
> நண்பகல் உற்ற செருவிற் புண் கூர்ந்து
> ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்கு
> அங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று
> ஒண்கதிர் தெறுமைச் சிறகரிற் கோலி
> நிழல்செய் துழறல் காணேன் யானெனப்
> படுகளங் காண்டல் செல்லான் சினஞ் சிறந்து
> உருவினை நன்னன் அருளான் கரப்பப்
> பெருவிதுப் [illegible] பல்வேள் மகளிர்
> குரூஉப் பூம் பைந்தார் அருக்கிய பூசல்
> வசை விடக் கடக்கும் வயங்குபெருந்தானை
> அகுதை களைதந் தாங்கு'*

என்று இச்செய்திகளைப் பரணர் தமது செய்யுள் களில் கூறுகிருர். பரணர், இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன், அவன்மகன் நார்முடிச் சேரல், மற்றொரு மகன் சேரன் செங்குட்டுவன் ஆகியோர் காலத்தில் இருந்தவர். சேரன் செங்குட்டுவன்மீது 5ஆம் பத் துப் பாடியவர். அப்போது அவர் வயது முதிர்ந்த வராக இருந்தார். அவர் காலத்துக்குப்பின் செங் குட்டுவன் செய்த போர்களும் நிகழ்ச்சிகளும் அவனைப் பாடிய ஐந்தாம் பத்தில் இடம்பெற வில்லை.

---

* அகம். 208; 5-18,

## V. கடம்பும் கடம்பரும்

கடல் துருத்தி என்னும் தீவில் கடம்ப மரத்தைக் காவல் மரமாக வைத்திருந்த குறும்பரைச் சேரர் வென்று அடக்கியதை இந்நூலில் கூறினோம். அந்தக் கடம்ப மரத்தையும் பிற்காலத்தில் இருந்தவரான கடம்பகுல அரசரையும் இணைத்து இக்காலத்தில் சிலர் சரித்திரம் எழுதுகிறார்கள். அத்தவறான கருத்தை இங்கே விளக்குவோம்.

கடல் துருத்தியில் இருந்தவர் துளுநாட்டைச் சேர்ந்தவர். அவர்கள் துளுநாட்டு நன்னனுக்கு அடங்கி யிருந்தவர்கள். அவர்கள் அத் தீவில் தங்கள் காவல் மரமாகக் கடம்ப மரத்தை வளர்த்து வந்தார்கள். ஆனால், அவர்களுக்குக் கடம்பர் என்று பெயர் இருந்ததில்லை. இக்காலத்து ஆராய்ச்சிக்காரர்களில் சிலர் கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்த இத்தீவினரைக் கடம்பர் என்று தவறாகக் கருதிக்கொண்டனர். இவ்வாறு தவறாகக் கருதிக்கொண்டு, பிற்காலத்தில் பனவாசி (வனவாசி) நாட்டை யரசாண்ட கடம்ப அரசர்களின் முன்னோர்கள் இத்தீவில் இருந்தவர் என்று எழுதிவிட்டார்கள். கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்த காரணத்தினாலே அவர்களைக் கடம்பர் என்று கூறுவது தவறு. சங்கநூல்களில் அவர்கள் கடம்பர் என்று கூறப்படவில்லை. இதனை இவர்கள் சிறிதும் அறியவில்லை.

மோகூரிலிருந்த பழையன் சந்ததியார் வேப்ப மரத்தையும் குறுக்கை என்னும் ஊரில் இருந்த

திதியன் பரம்பரையினர் புன்னை மரத்தையும் நன்னன் பரம்பரையார் பாழி என்னும் ஊரில் வாகை மரத்தையும் காவல் மரமாக வளர்த்து வந்தார்கள் என்பதைச் சங்க நூல்களில் காண்கிறோம். ஆனால் இவர்கள் வேம்பர், புன்னையர், வாகையர் என்று பெயர் கூறப்படவில்லை. அதுபோலவே கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்தவர் கடம்பர் என்று பெயர் பெறவில்லை. இதனை யறியாமல், இக்காலத்து ஆராய்ச்சிக் காரர்களில் சிலர், இத் தீவிலிருந்தவரைக் கடம்பர் என்று தவறாகக் கருதிக் கொண்டு, பிற்காலத்திலிருந்த கடம்ப அரசரின் முன்னோர்கள் இவர்கள் என்று பிழையான கருத்தைத் தவறாக எழுதிவைத்துள்ளனர்.

பனவாசி அரசராகிய கடம்பர் கடம்ப மரத்தின் பெயரைக் கொண்டவர் என்றும் அந்தக் கடம்ப மரம் கடற்றுருத்தியில் இருந்த கடம்ப மரம் என்றும், ஆகவே இக் கடம்ப மரத்தை வெட்டிய நெடுஞ்சேரலாதன் கி. பி, 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரபலமாக இருந்த கடம்ப அரசர் காலத்தில் இருந்தவன் என்றும் தம் மனம் போனபடி எல்லாம் சான்று இல்லாமல் எழுதி விட்டார், தமிழர் சரித்திரம் என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதிய பி. டி. சீநிவாச ஐயங்கார்.* காவல் மரமாக இருந்த கடம்ப மரத்துக்கும் பிற்காலத்தில் இருந்த கடம்ப அரசருக்கும் என்ன உறவு? அந்த உறவுக்கு என்ன சான்று? யவனக் கப்பல்களைத் தங்கள் நாட்டுத் துறைமுகத்துக்கு வராதபடி

* P. 501. History of the Tamils. P.T. Srinivasa Jyengar. 1927.

தடுத்ததற்காகக் கடல் தீவில் இருந்தவர்களை வென்று, அவர்கள் வளர்த்திருந்த கடம்பமரத்தை வெட்டி அடக்கினன் நெடுஞ்சேரலாதன். அது நிகழ்ந்தது கி. பி. 2ஆம் நூற்றுண்டில், யவன வாணிபம் தமிழ் நாட்டுடன் நடந்துவந்த காலத்தில். ஏறத்தாழ கி. பி. 250இல் தமிழ் நாட்டுடன் நடைபெற்ற யவன வாணிபம் நின்று விட்டது. நின்றுவிட்ட பிறகு, கி. பி. 5ஆம் நூற்றுண்டில் நெடுஞ்சேரலாதன் இருந்தான் என்று சரித்திரம் எழுதுகிறுர் சீனிவாச ஐயங்கார் !

கே. ஜி. சேஷையரும் இந்தத் தவற்றைச் செய்கிறுர். நெடுஞ்சேரலாதன் வென்ற இத்தீவின் மக்கள் பிற்காலத்தில் இருந்த கடம்ப குல அரசரின் முன்னேராக இருக்கலாம் என்று இவர் கூறுகிறுர்* ஆனல், சீனிவாச ஐயங்கார் எழுதியது போல இவர், நெடுஞ்சேரலாதன் கி. பி. 5ஆம் நூற்றுண்டில் இருந்தவன் என்று எழுதவில்லை. அவன் கி. பி. 2ஆம் நூற்றுண்டினன் என்பதே இவர் கருத்து.

'சேரன் செங்குட்டுவன்' என்னும் நூலை எழுதிய மு. இராகவையங்காரும், கடல் துருத்தியில் இருந்தவருக்கும் பிற்காலத்தில் இருந்த கடம்ப அரசருக்கும் தொடர்பு கற்பிக்கிறுர். 'சேரலாதன் பகைவர் (கடல் துருத்தியில் கடம்ப மரத்தைக் காவல் மரமாக வளர்த்திருந்தவர்) கடம்பைத் தம் குலமரமாகக் கொண்டு மைசூர் தேசத்தின் மேல்பாலை ஆண்ட கதம்ப வேந்தராகக் கருதப்படுகின்றனர்' என்று அவர் எழுதுகிறுர்.

---

* P. *11*, *12*. Cera Kings of the Sangam Period. K. G. Sesha Aiyar, *1937*.

கடல் துருத்தியில் கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்தவர் வேறு. அவர்கள் கடம்பர் அல்லர். அவர்களுக்குக் **கடம்பர்** என்ற பெயர் இருந்ததில்லை. பிற்காலத்தில் பனவாசி நாட்டையரசாண்ட கடம்ப அரசர் வேறு. இவர்களையும் அவர்களையும் தொடர்பு படுத்துவது தவறு.

கடம்ப அரசர் குலத்தை உண்டாக்கிய மூல புருஷன் மயூரசர்மன் என்னும் பிராமணன். இவன் ஏறத்தாழ கி. பி. 360—இல் முடி சூடினான். இவனுடைய பிற்காலச் சந்ததியார் கடம்பர் என்று பெயர் பெற்றிருந்தனர். கடம்ப அரசர் குலத்தின் ஆதிபுருஷன் மயூரசர்மன் என்பதை அடியோடு மறந்துவிட்டு, கடல் துருத்தித் தீவில் கி. பி. 2ஆம் நூற்றாண்டில் இருந்தவர் கடம்ப அரசரின் முன்னோர் என்று இவர்கள் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

பதிற்றுப்பத்து 2ஆம் பத்திலும் 5ஆம் பத்திலும் சிலப்பதிகாரத்திலும் சேரர் **கடம்ப மரத்தை** வெட்டிய செய்தி கூறப்படுகிறது. இந்நூல்களில் ஓரிடத்திலேனும் இவர் **கடம்பர்** என்று கூறப்படவில்லை. கடம்ப மரந்தான் கூறப்படுகிறது. இதை யாராயாமல் காவல் மரமாகிய கடம்பமரத்தையும் பனவாசிக் கடம்ப குலத்து அரசரையும் பொருத்துவது தவறான செய்தியாகும்.

---

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 21 | 28 | எழுதியிருக்கிறுர்கள் | எழுதியிருக்கிறுர்கள். |
| 23 | 26 | இருக்கிறது | இருக்கிறது. |
| 33 | 16 | விதிக்கப்பட்டது. | விதிக்கப்பட்டது |
| 38 | 4 | செய்யத தன் | செய்யத்தன் |
| 40 | 17 | காலத்தில் இருந்த வஞதல். | காலத்தில் இவனும் இருந்தவஞதல், |
| 59 | 2 | உடனே முடிவடைந்து | உடனேயும் முடி வடைந்து |
| 99 | 17 | மோரியன் | மோரியரின் |

# சிறப்புப் பெயர் அகராதி


## அ

அகம் (அகநானூறு.) 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 23, 32, 43, 44, 45, 48, 49, 50, 52, 53, 61, 63, 65, 66, 67, 87, 88, 90, 91, 92, 93, 96, 102, 104, 105.
அகுதை. 105.
அங்கடி. 76.
அங்காடி. 75.
அசோக சக்கரவர்த்தி. 10, 70, 84, 85.
அசோக சாசனங்கள். 84.
அஞ்சி (அரசன்) 43.
அதிகமான். 22, 42, 43.
அதிகமான் நாடு (தகடூர்) 29.
அதிகமான் நெடுமிடல் 57, 60, 61.
அத்தி. 53.
அமிந்தீவு. 24.
அம்மெதிகல்லு. 75.
அராபியர். 28.
அரிமணவாயில் உரத்தூர். 61.
அருவர். 79.
அவலோகீசுவரர். 25.
அறிவர். 79, 80.

## ஆ

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். 19, 36, 50, 51, 54, 57, 58, 103.
ஆதன் எழினி. 16.
ஆதனுங்கன். 93.
ஆதிதேவி. 24.
ஆய் எயினன். 50, 102, 104.
ஆனெகல்லு. (ஆனைக்கல்) 75.

## இ

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். 23, 36, 37, 47, 56, 58 59, 64, 103, 105.
இராகவையங்கார், மு. 96, 108.
இளம்பூரண அடிகள். 79.
இளம் பூதனார். 81.

## உ

உதியஞ்சேரல். 102, 103.
உப்பினங்காடி. 76.
உம்பற்காடு. 41.
உரோமர். 47.

## ஊ

ஊர். 76.

## எ

எரிதூர். (எருதூர்) 76.
எருமை நாடு. 28.
எலிமலை. 21.

## ஏ

ஏர்கல்லு. 75.
'ஏழிமலை' 21.
ஏழில் மலை. 11, 17, 19, 20, 21, 39, 65.
ஏழிற் குன்றம். 20.
ஏற்றை. 53.

## ஐ

ஐயூர் முடவனார். 16.

## ஓ

ஓரி (அரசன்) 42.

## க

கள்ளில் ஆத்திரையனார். 81

கனக விசையர். 59, 62.
கன்னட நாடு. 28, 29.
கழாத் தலையார். 60.
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல். 22, 36, 43, 46, 47, 48, 49, 50, 51, 57, 58, 103.

**கா**

கார்கள. 75.
கார்க்கல். 75.
காவன் முல்லைப் பூதனார். 81.
கானமர் செல்வி. 20.
கானம்(கொண் கானம்.) 14.

**கி**

கிருஷ்ணசாமி ஐயங்கார்., எஸ். 35
கிரேக்கர். 19.
கிழக்கிந்தியக் கம்பெனி. 9.

**கு**

குமாரதாரி (ஆறு). 78.
குறுக்கை. 106.
குறுந்தொகை. 22, 34, 45, 46, 60, 61.
குறிஞ்சிப் பாட்டு. 78.
குன்றம் பூதனார். 81.

**கே**

கேரளபுத்திரர். 84.

**கொ**

கொங்கணம். 14, 31.
கொங்கண நாடு. 9, 10, 11, 31.
கொங்கர். 45.
கொங்கர் நாடு. 43, 44, 48, 97, 103.
கொண்கான நாடு. 9, 86.
கொங்கு நாடு, 41, 44.
கொங்கு நாட்டார். 43.
கொண்கானம். 13, 14, 103.
கொண்கானம் கிழான். 13, 14, 31, 68, 69.
கொண்பெருங்கானம். 9, 14, 69
கொடுகூர். 18, 52.
கொல்லிக் கூற்றம். 42.
கொல்லூரு. 76.
கொற்றவை. 20.

**கோ**

கோசர். 15, 34, 35, 66, 88, 90, 91, 92.
கோடை பாடிய பெருங் கடுங்கோ. 81.

**ச**

சஃயாத்திரி (மேற்குத்தொடர்ச்சி மலை). 11, 86.
சஃயாத்திரி காண்டம். 89.
சத்திய புத்திர நாடு. 10, 70, 84, 85.
சத்ராப். 29.
சதகர்ணி (அரசர்) 29.
சந்திரகுப்த மௌரியன். 94.
சமுத்திர குப்தன். 96.

**சா**

சாகர். 24.
சாதகர்ணி. 29.
சாதவாகனர். 29.
சாமிநாதையர், டாக்டர், உ. வே. 26.

**சி**

சிலப்பதிகாரம். 25, 26, 27, 36, 62, 63, 80, 97.
சிலம்பு. (சிலப்பதிகாரம்) 18, 26, 27, 31, 52.

**சீ**

சீநிவாச ஐயங்கார். பி. டி. 107, 108.

### செ

செங்கண் மா. (ஊர்) 54
செங்குட்டுவன். 19, 36, 37, 38, 39, 52, 54, 58, 59, 61, 62, 63.
செல்லி. (செல்லூர்) 90.
செல்லிக் கோமான். 16.
செல்லூர். 15, 16, 87, 88, 89.

### சே

சேந்தம் பூதனார். 80.
சேர அரசர். 29, 40, 59.
சேர இராச்சியம். 41.
சேரமான் குட்டுக்கோ நெடுஞ் சேரலாதன். 60.
சேர நாடு. 28, 36, 40, 47, 48, 57.
சேரர். 28, 40, 44.
சேரன். 46, 49, 52, 53, 59.
சேரன் செங்குட்டுவன். 18, 23, 24, 37, 43, 46, 50, 51, 52, 57, 61, 63, 64, 94, 96, 103, 105, 108.
'சேரன் செங்குட்டுவன்' (நூல்). 96
சேஷையர். கே. ஜி., 108.

### சோ

சோழன் கரிகாலன். 59.

### ட

டமரிகெ. 10.

### டெ

'டெல்லி' 21.

### த

தகடூர். 43, 85.
தக்காண இராச்சியம். 29.
தழும்பன். 88.
தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் 42

### தா

தாராதேவி. 24.
தாரை. 25.
தாலமி. 10, 24, 47, 48.
தாழை. 78.
தாறெ. (தாழை.) 78.

### தி

திண்டுக்கல். 74.
திதியன் 89, 107.
திருமுருகாற்றுப்படை. 78.

### து

துளு. 10.
துளு இலக்கியம். 73.
துளு நாடு. 9, 10, 11, 13, 14, 15, 18, 19, 20, 22, 23, 24, 28, 29, 31, 35, 39, 40, 41, 45, 46, 48, 49, 50, 51, 53, 54, 56, 57, 58, 61, 65, 66, 67, 70, 71, 72, 74, 75, 76, 77, 78, 81, 84, 86, 87, 88, 89, 97, 98, 101, 103, 106.
துளுமொழி. 70, 71, 72, 73, 74, 78, 79, 82.
துவ்வாரு நறவு. 18.

### தெ

தென்கொங்கு நாடு. 41.

### தை

தைகிரிஸ் (ஆறு). 76.

### தொ

தொண்டி. 19.
தொண்டை நாடு. 54.
தொல்காப்பியம். 79.

### தோ

தோர்ணக்கல். 74.

ந

நச்சினார்க்கினியர். 79.
நந்த அரசர். 91.
நந்தன் வெறுக்கை. 92.
நப்பூதனார். 81.
நம்பூதிரிப் பிராமணர். 89.
நல்லினி. 102, 103.
நவ்ரு (நறவு). 19.
நறவு. 18, 28, 52, 54.
நற். (நற்றிணை) 13, 20, 32, 78, 88.
நன்ன அரசன். 27.
நன்னன் ஆய். 55.
நன்னன் உதியன், 17, 53, 58, 63.
நன்னன் சேய் நன்னன். 54.
நன்னன் வேண்மாள். 31.
நன்னன் வேண்மான். 31.
நன்னர். 18, 35, 52.
நன்னன். 13, 14, 16, 17, 20, 22, 23, 24, 31, 33, 34, 39, 45, 46, 48, 49, 51, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 63, 64. 65, 66, 67, 68, 102, 103, 104, 105.

நா

நார் முடிச் சேரல். 19, 47, 50, 51, 52, 54, 57, 58, 59, 60, 61, 63, 64, 105.
நாருவி. 19, 54.
நாராயணசாமி ஐயர். பின்னத்தூர், அ. 88.

நி

நிப்பூர். 76.

நூ

நூற்றுவர் கன்னர். 29.

நெ

நெடுஞ்சேரலாதன். 38, 56, 58 59, 60, 63, 64, 108.
நெடுமிடல். 43, 44, 61.

நே

நேத்திராவதி, 24.

நை

நைத்ராஸ். 76.

ப

பசும்பூண் செழியன். 42.
பசும்பூண்பாண்டியன். 22, 42, 43, 44, 45, 46, 57, 61.
படுபத்திரி (படுவெதிரி). 77.
பத்தினிக் கோட்டம். 59, 62, 63, 64.
பதிற்று. (பதிற்றுப் பத்து). 18, 19, 22, 23, 36, 37, 38, 42, 44, 48, 51, 52, 54, 60, 61, 80, 94, 97, 103, 109.
பரசுராமன். 15, 16, 86, 87, 88, 89, 90.
பரணர். 20, 32, 34, 59, 60, 61, 62, 63, 65, 104, 105.
பல் குன்றக் கோட்டம். 54.
பல்யானைச் செல்கெழு குட்டுவன் 42.
பழையன் 53, 94, 96, 106.

பா

பாசண்டச் சாத்தன். 25
பாண்டவ குகைகள். 26.
பாரம் (ஊர்) 16, 32, 41, 50, 65.
பார்கூரு. 76.
பாலைபாடிய பெருங்கடுங்கோ. 13.
பாழி (ஊர்) 16, 19, 49, 66, 104, 107.
பாழிக் குன்று. 65.
பாழிச் சிலம்பு. 17, 19, 65.

பாழிப் பறந்தலை. 49, 105.
பாழிநகர். 17, 65.
பாழிமலை. 16, 17, 19.

### பி

பிராமி எழுத்து. 84.
பிண்டன். 32.
பிளினி. 35.

### பு

புத்தூரு. 76.
புறம். (புறநானூறு) 14, 42, 60, 90, 93.
புன்றுறை. 53.
புன்னாடு. 28, 47, 48, 49, 51, 53, 103, 104.
புன்னாடு ஆறாயிரம். 48.

### பூ

பூதம். 80, 81.
பூதகோட்டம். 81.
பூதசதுக்கம். 81.
பூதத்தாழ்வார். 81.
பூதபாண்டியன். 80.
பூதனார். 80.
பூதஸ்தானம். 81.
பூழி நாடு. 40, 47, 51.

### பெ

பெண்கொலை புரிந்த நன்னன். 32, 34.
பெரும்பாணாற்றுப்படை. 78.
பெரும்பூட்சென்னி. 53.
பெள்தங்கடி. 76.
பெஸல் மிஷன் பிரஸ். 73.

### பை

பைந்தூரு. 76

### பொ

பொருநராற்றுப் படை. 78.

### போ

போர் (ஊர்). 60.
போர்ச்சுகீசியர். 21.
போர்ச்சுகல் தேசம். 39.

### ம

மகனூர். (மங்களூர்) 24, 25.
மங்கல மடந்தை. 26, 27.
மங்களா தேவி. 24, 25, 26.
மங்கலாபுரம் (மங்களூர்). 24.
மங்களூர். 19, 24, 26.
மஞ்சுநாதர். 25.
மதுரைக்காஞ்சி. 65.
மயூர சர்மன். 109.
மருதன் இளநாகனார். 15, 87, 88, 89.
மலைபடுகடாம். 54.
மலையமான் திருமுடிக்காரி. 42.
மழுவாள் நெடியோன். 15, 87.
மவுண்ட்—டி—எலி. 21.

### மா

மாங்குடி மருதனார். 65.
மாமூலனார். 13, 65, 67.

### மி

மிஞிலி. 16, 41, 45, 49, 50, 51, 57, 58, 61, 104, 105.

### மு

முள்ளியூர்ப் பூதியார். 66.
முருகன். 77.

### மூ

மூஷிக மலை. 21.
'மூஷிகவம்சம்' (நூல்) 21.
மூடபதிரெ. 77.

**மே**

மேற்குத் தொடர்ச்சிமலை 11

**மொ**

மொழிபெயர் தேயம். 10.

**மோ**

மோசிகீரனார். 13, 20, 67, 68, 69.
மோகர், 97, 98, 100, 101.
மோகூர். 90, 92, 94, 96, 100, 106.
மோரியர். 90, 91, 92, 93, 94, 96, 97, 98, 99, 101.
மோரியப்படை. 100.

**மௌ**

மௌரியர். 94, 102.
மௌரிய இராச்சியம். 101.

**ய**

யவனர். 19, 28. 47, 59.
யவனக் கப்பல். 23, 35, 36, 37, 40, 47, 48, 107.
யவன வாணிகர். 28, 46.
யவன வாணிபம். 108.

**யூ**

யூபிரிடிஸ் (ஆறு). 76.

**ரோ**

ரோமர். 19.

**ல**

லக்ஷத்தீவு. 23.

**லோ**

லோகநாதர். 25.
லோகேசுவரர். 25.

**வ**

வஞ்சிமாநகர். 63.
வடகொங்கு நாடு. 28, 29, 41 45, 48, 53, 103.
வம்பமோரியர். 101, 102.

**வா**

வாகைப் பெருந்துறை. 22, 51.
வாஸ்கோ-டி-காமா. 21, 39.

**வி**

வியலூர். 18, 52.

**வெ**

வெதிரி. 77.
வெண்பூதனார். 81.
வெளியன் வேண்மான் ஆய் எயினன். 49, 57, 61, 102, 103, 105.

**வே**

வேணூரு. 76.
வேள்முதுமாக்கள். 17.
வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி. 60.

**ஹொ**

ஹொய்சளர். 76.

**ஸ்ரீ**

ஸ்ரீநிவாச அய்யங்கார். பி, தி. 9